உ





# ஸ்ரீ வரதஜோதி



பெரியவளவு, தும்பளை மேற்கு, பருத்தித்துறை

## ஸ்ரீ வரதவிநாயகர் தேவஸ்தான

புனராவர்த்தன

## மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வரத விநாயகர் தேவஸ்தானம், தும்பளைமேற்கு, பருத்தித்துறை.

# ஸ்ரீ வரதஜோதி



பெரியவளவு, தும்பளை மேற்கு, பருத்தித்துறை

## ஸ்ரீ வரதவிநாயகர் தேவஸ்தான

புனராவர்த்தன

## மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

## 2015

7496(P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : "ஸ்ரீ வரதஜோதி"

வெளியீடு : ஆலய பரிபாலனசபை , தும்பளை மேற்கு ,
ஸ்ரீ வரதவிநாயகர் தேவஸ்தானம்.

பதிப்பு : வைகாசி 2015 முதலாம் பதிப்பு

பிரதிகள் : 250

பதிப்பகம் : **S.P.M** பிறின்ரேர்ஸ்,
வி.எம்.றோட், பருத்தித்துறை
தொ.பே : 0774966997

Title : **SRI VARATHAJOTHY**

Published by : Alaya Paribalanasabai,
Thumpalai West,
Sri Varatha Vinayagar Devasthanam

Published to : May 2015 (First Edition)

Copies : 250

Printers : **S.P.M** Printers,
V.M.Road, Point Pedro.
T.P : 0774966997 , 021 226 0055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் வணக்கம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தோனைக்
காதலாற் கூப்புவர் தங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# முகவுரை

எமது ஸ்ரீவரதவிநாயகர் ஆலயம் 2013.01.18ந் திகதி பாலஸ்தாபனம் இடம்பெற்றதனைத் தொடர்ந்து பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வேண்டுவார்க்கு வேண்டுவன ஈந்து திருவருள் பாலிக்கும் ஸ்ரீ வரதவிநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் 2015.03.15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட யந்திரபூசையை அடுத்து மங்கள கரமான ஜயவருடம் பங்குனித்திங்கள் பதினோராம் நாள் 25.03.2015 புதன்கிழமை ஷஷ்டி திதியும் , ரோகினி நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய காலை 9 மணி 15 நிமிடம் முதல் 10 மணி 35 நிமிடம் வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா நடைபெற எம்பெருமான் அருள்பாலித்துள்ளார்.

எம்பெருமான் அனுக்கிரகத்தினால் 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று, பூர்த்தி நாளன்று **"ஸ்ரீ வரத ஜோதி"** என்ற இம் மலரை ஆக்கி வெளியிட எம்பெருமான் அனுக்கிரகம் கிடைக்கப்பெற்றுள்ளது. எமது ஆலய வளர்ச்சியின் படிமுறைகளையும், மூர்த்தியின் சிறப்புக்களையும் அறிந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்களுக்கு இம் மலர் உதவும் என்ற எமது நம்பிக்கையோடு இம் மலரினை எம்பெருமானின் பாதார விந்தங்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றோம்.

-நிர்வாக சபை-
ஸ்ரீவரத விநாயகர் தேவஸ்தானம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச்செய்தி

"கோயில் இல்லா ஊர் பாழ்" என்பது ஆன்றோர் வாக்கு! ஆலயம் என்பது இறைவனோடு லயிக்கும் புண்ணிய பிரதேசம்! ஆலயம் என்பது ஆன்மீக கலாச்சார விழுமியங்களை மக்களிடையே போதித்து அவர்களை நல்வழிப்படுத்துவதற்கான கருவி.

அந்தவகையிலே தும்பளை மேற்குப் பகுதியில் ஆண்டாண்டு காலமாக வீற்றிருந்து அடியவர்களுக்கெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகப் பெருமான் இன்று குட முழுக்கு அபிஷேகம் பெற்று தனது அருட்கடாட்சத்தினை அடியவர்கட்கு அள்ளி வீசிக்கொண்டிருக்கிறார்.

தும்பளை மேற்கு ஸ்ரீவரதவிநாயகர் தேவஸ்தானம் புனரமைப்பு வேலைகள் செய்யப்பட்டு கம்பீரமாக அழகிய தோற்றத்துடன் இன்று கும்பாபிஷேகக் கிரியைகள் எல்லாம் நிறைவாக, திருப்திகரமாக எல்லோரும் இணைந்து சிறப்பாக நிகழ்த்தி வைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு ஆலயம் உருவாகி அழகிய தோற்றம் பெற்று கும்பாபிஷேகமும் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது என்பது ஒரு தனிமனிதன் சார்ந்த விடயம் அல்ல. இந்தக் கிராமத்தின் ஒற்றுமையும், இளைஞர்களின் உழைப்பும், பெரியவர்களின் வழிகாட்டல்களும் இணைந்த ஒட்டுமொத்த சமுதாயத்தின் ஒரு வினைத்திறனான வெளிப்பாடே ஆகும். அந்த வகையில் நிதி உதவி, பொருள் உதவி, சரீர உதவி என அக்கிராம மக்கள், அயல் கிராமத்தவர், புலம்பெயர் உறவுகள் என அனைவரும் சார்ந்த உழைப்பே இன்று இந்த ஆலயம்! அந்தவகையில் குடமுழுக்கு பெற்று அதன் நினைவாக வெளிவரும் தும்பளை மேற்கு ஸ்ரீ வரத விநாயகர் ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு எனது நல்லாசிகளை வழங்குவதோடு எல்லோரும் பெற்று வளமோடு வாழ வரத விநாயகரை வேண்டி அமைகின்றேன்.

**நன்றி.**

**சிவஸ்ரீ.வே.தியானந்தராசாக் குருக்கள்**
பிரதம குருக்கள்
தும்பளை மேற்கு ஸ்ரீ வரத விநாயகர்
தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தும்பளை மேற்கு ஸ்ரீ வரத விநாயகர் ஆலய கும்பாபிஷேக விழாவின் போது வழங்கிய ஆசியுரை

**வி**நாயகப்பெருமானின் கும்பாபிஷேகத்தையிட்டு பெருமகிழ்வடைகின்றனம். இத்தகைய நிகழ்வை நிறைவேற்றி வைத்த சிவாச்சாரியார்களுக்கும், இதற்கு வேண்டிய திரவியங்களைச் சேகரித்து உதவி செய்த அவ்வூர் மக்கள் அனைவருக்கும் விநாயகப்பெருமானின் திருவருளினாலே எல்லா நலன்களும் பெற்று வாழுகவென விநாயகப்பெருமானின் திருவருளை வேண்டி நல்லாசிகளை வழங்குகின்றனம்.

**தமிழ் சமஸ்கிருத சித்தாந்த பண்டிதர்**
**சிவஸ்ரீ ம.ச.வேதாரணியக்குருக்கள்**
பிரதமகுரு, முட்டிக்கொற்றாவத்தைப் பிள்ளையார் கோவில்,
தம்பசிட்டி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

ஆலயங்கள் ஒரு கிராமத்தின் இதயம் போல அமைந்திருப்பவை மனிதனின் வாழ்வு மிருக வாழ்வாக மாறாமல் இருப்பதற்கு வழிகாட்டும் திசைகாட்டியாக ஆலயங்கள் காணப்படுகின்றன. மனிதனை புனிதனாக்கும் ஆலயங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவுவதுடன் கலை, கலாச்சாரம் என்பவற்றை வளர்க்கும் கேந்திர நிலையங்களாயும் திகழ்கின்றன இவ்வாறு வளம் கொழிக்கும் தும்பளைப்பதியினிலே பெரியவளவு எனும் பகுதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்து வருகின்ற ஸ்ரீ வரத விநாயகப்பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதை பெரும் பாக்கியமாக எண்ணி, ஆலய பரிபாலன சபையினரும் ஆலய பிரதமகுருக்களும் இவ் சிவப்பணியை சிறப்பாக ஆற்றி இருக்கிறார்கள். இது மட்டும் அல்லாது இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தல் போல் வர இருக்கின்ற “ஸ்ரீ வரத ஜோதி” எனும் கும்பாபிஷேக மலர் சிறப்புறவும் இவ்வாலயம் மேன்மேலும் வளர்ச்சி கண்டு எம்பெருமானுடைய திருவருள் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்றும் வேண்டி நிற்கின்றேன்.

**விநாயக பூஜை துரந்தர் பிரம்மஸ்ரீ**
**சோம. துஸ்யந்தக்குருக்கள்**
மேலைப்புலோலி ஆலடிப்பிள்ளையார் ஆலயம்,
பருத்தித்துறை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

"பருத்தித்துறை தும்பளை மேற்கு பெரியவளவு ஸ்ரீ வரத விநாயகர் தேவஸ்தானத்தின் அஷ்டபந்தன புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து இடம்பெறும் மண்டாலபிஷேக வைபவங்களை முன்னிட்டு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஏறத்தாழ 300 வருடம் பழமை மிக்க இவ்வாலயம் சைவப்பெரியார் பரால் பரம்பரை பரம்பரையாக சிறப்பாகப் பேணிப் பராமரிக்கப்பட்டதாகும். இவ்வூர் மக்கள் ஸ்ரீ வரதவிநாயகரின் அருளைப் பெற்று வாழ்ந்து வந்துள்ளனர். இங்ஙனம் தொடர்ச்சியாக சிறந்த முறையில் பரிபாலிக்கப்பட்டு வந்த இவ்வாலயம் கடந்த 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்த ஆண்டு முழுமையாகப் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் காண விநாயகப் பெருமானின் திருவருள் கூடியுள்ளது. அத்துடன் இவ்வாலயத் தோடு இணைந்ததாக சிவவீரபத்திரர் கோயிலும் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் நந்தன கோபாலன், சுப்பிரமணியர், சண்டேஸ்வர், வைரவர் ஆகியோருக்கு சிறப்பான சந்நிதிகள் அமைந்துள்ள ஆலயம் தெய்வீக அருளுடன் காட்சி தருகின்றது. தலவிருட்சம் இலந்தை ஆகும். ஆலும், அரசும் சூழ அமைந்துள்ளமை ஆலயத்தின் சிறப்பாகும்.

ஒரு ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நிகழ்வதாயின் தெய்வ அருள், ஊர் சிறப்பு, செல்வச் சிறப்பு, கல்விச்சிறப்பு, நிதிச் சிறப்பு, மனதில் அமைதி , சுபீட்சமான வாழ்வு, உலக நன்மை என்பன கிடைப்பதாக ஆகமங்கள் விளக்குகின்றன. அந்த வகையில் இந்த ஆலயத்தின் பரிபாலனத்தை முறையாக நிறைவேற்றுகின்ற பரிபாலன சபையினர், புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட சிற்பாச்சாரியார்கள், கும்பாபிஷேகக் கிரியைகள் நிறைவேற்றுகின்ற குருக்கள்மார் அனைவருக்கும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக் கின்றோம்.

நன்றி.

**ம. சண்முகநாதன்**
உதவிப் பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
248 1/1 காலிவீதி, கொழும்பு - 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

தும்பளை மேற்கு, ஸ்ரீ வரத விநாயகர் கோவிலின் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தும்பளையிலுள்ள கோவில்களில் மிகப் பழமை வாய்ந்ததும், அருட்கடாட்சம் மிகுந்ததும், வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களைத் தருவதுமான ஸ்ரீ வரத விநாயகரின் மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. குறித்த கோவிலை சுற்றிவர வாழ்கின்ற மக்கள் கும்பாபிஷேக கிரிஜைகளையும், தொடர்ந்து நடைபெற்று வரும் மண்டலாபிஷேகங்களிலும் பக்தி பூர்வமாகப் பங்கு பற்றி விநாயகரின் அருள்களைப் பெற்றுள்ளார்கள். எல்லோருக்குமே கும்பாபிஷேகத்தைக் காணும் பெரும் பாக்கியம் கிடைப்பதில்லை. எல்லாக் கோவில்களிலுமே கும்பாபிஷேகம் சிறப்பாகவும், ஒழுங்காகவும் நடைபெறுவதில்லை. எனினும் தும்பளை மேற்கு ஸ்ரீ வரத விநாயகர் கோவில் கும்பாபிஷேகம் மிக மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. கும்பாபிஷேக நிகழ்வு நிறைவை முன்னிட்டு வெளிவரும் கும்பாபிஷேக மலர் நன்கு மணம் பரப்பி, நீண்ட நிறைந்த பயன் கொடுக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**சபா ரவீந்திரன், ஜே.பி.யு.எம்**
சட்டத்தரணி, நொத்தாரிசு
நகரபிதா, நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலய நிர்வாகசபைத் தலைவரின் செய்தி

எமது ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற இறையருள் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த வேளையில் எமது ஆலயத்தின் வரலாற்றினையும். மகிமையையும் பதிவுகளுக் குட்படுத்த வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது. இதனை மகா கும்பாபிஷேக மலரின் மூலம் வழங்குகின்றோம்.

ஆலய நிர்வாக சபையின் தலைவராக பணியாற்றும் பாக்கியம் 2012ம் ஆண்டு எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. இவ்வேளையில் ஆலயத்திருப்பணி வேலைகள் ஆரம்பிக்க வேண்டிய நிலை உணரப்பட்டுள்ளது. எனினும் எம்மூரில் ஆரம்பிக்கப்பட்ட சமூகப்பணி காரணமாக ஓர் ஆண்டு காலம் பின்னோக்கி நகர்த்தப்பட்டு செயற்படுத்தத் தீர்மானித்தோம்.

இவ்வகையில் 18.01.2013 அன்று பொருளாளராக தொண்டாற்றிய சதாசிவம் சிவஞானசுந்தரம் அவர்களும் அவர் பாரியாரும் சங்கற்பகாரராக அமர்ந்து பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. இவர் இயல்பாகவே தெய்வநம்பிக்கை அதிகமாகஉடையவர். இளம் வயதிலேயே மாலை வேளைகளில் ஆலயத்திற்கு விளக்கேற்றிச் செல்வது இன்றும் எனது மனப்பதிவில் உள்ளது. இவரது பணி நிர்வாக சபைத் தலைவர், பொருளாளர் எனப் பல்பரிமாணங்களைக் கொண்டது. காசி காண்டம், பிள்ளையார் கதை, கந்தபுராணம் ஆகிய படிப்புக்களிற்கு காப்புச் சொல்லுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டார். ஆலய திருப்பணிகளுக்கு பெரும் நிதி தேவைப் படும் என்பதை உணர்த்தி தனது பங்களிப்பை வழங்கி அனை வரையும் பங்கெடுத்துக்கொள்ள வழிசமைத்தது குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னர் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. இதில் சுண்ணாம்பினால் கட்டப்பட்ட சுவர்கள், மண்டபங்கள் அகற்றப்பட்டு மீளக் கட்டப்பட்டது. அத்துடன் பூரணமாக்கப்படாத சுற்றுமண்டபங்கள் பூரணமாக்கப்பட்டு, தம்ப மண்டபத்துடன் ஒரே கூரையின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு பல திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இக் கைங்கரியங்களை நிறைவேற்ற பெரும் நிதியினை எமது ஊர் மக்களும், எமது ஊர் புலம்பெயர் மக்களும் வழங்கியுதுடன் திருப்பணி வேலைகளையும் பொறுப்பேற்றுள்ளனர். ஊர் மக்களினதும் எமது ஊர் புலம்பெயர் மக்களினதும் சுபீட்சத்திற்கு இக் கும்பாபிஷேக கைங்கரியங்கள் வழிவகுக்க வேண்டுமென எமது இஷ்ட தெய்வங்களான ஸ்ரீவரத விநாயகப் பெருமானினதும், சிவ வீரபத்திர சுவாமிகளினதும் ஏனைய தெய்வங்களினதும் அருட் கடாட்சத்தினை வேண்டி நிற்கின்றேன்.

-சுபம்-

**கி. பாலகெங்காதரன்**
ஆலய பரிபாலனசபைத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# PLAN

Of One (01) Lot of Land Called "Thoddappai, Periyavalavu, Kōttankaladdy & others

SITUATED AT: Thumpalai Irai, Point Pedro Parish

DIVISION: Vadamaradchy DISTRICT: JAFFNA

PROVINCE: NORTHERN


Bounded as above and Containing in Extent

| LOT No | SQ METRES | LMS.VC & KLS | REMARKS |
|---|---|---|---|
| 1 - | 4082.2 | - 15 " 15.75 | Property belonging to Thumpalai Periya-Valavu Varatha Vinayagar Alayam. |

EXTENTS IN WORDS: Fifteen Lachchams V.C and Fifteen point Seven Five Kulies.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவஸ்தான வரைபடம்




1.ஞானசித்தி விநாயகர்

2.ஸ்ரீ வரத விநாயகர்

3.பத்திரகாளி சமேத வீரபத்திரர் சுவாமி

4.நந்தனகோபாலர், நாகதம்பிரான்

5.வள்ளி,தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி

6.வசந்த மண்டபம்

7.காவல் வைரவர்

8.வைரவர்

9.சண்டேஸ்வரர்

10.சக்தி வேலாயுத சுவாமி

11.சன்னியாசி வைரவர்

12.வாகன சாலை

13.களஞ்சியம் - 2

14.களஞ்சியம் - 1


15.மடப்பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானசித்தி விநாயகர்



ஸ்ரீ வரத விநாயகர்



வள்ளி தெய்வானை சமேத
சுப்பிரமணிய சுவாமி



உமைபத்திரகாளி சமேத சிவ
வீரபத்திரர் சுவாமி



நாகதம்பிரான் , சந்தானகோபாலர்




வைரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஞானசித்திவிநாயகர்



ஸ்ரீ வரதவிநாயகர்




சிவ வீரபத்திரர்




சுப்பிரமணிய சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாகதம்பிரான் , சந்தான கோபாலர்




காவல் வைரவர்




சண்டேஸ்வர சுவாமி



வைரவர்



சக்தி வேலாயுத சுவாமி




சன்னியாசி வைரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2015ம் ஆண்டு கும்பாபிஷேகத்தினை நோக்கிய செயற்பாடுகள்...




பாலஸ்தாபனக் கிரியை



பாலஸ்தாபனம்



நாள் அத்திவாரம்



திருப்பணி



நாள்வளை ஏற்றல்



உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட முதற்காரியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரில் மணம் வீசுபவை

| | பக்கம் |
|---|---|
| முகவுரை | i |
| ஆசிச்செய்திகள் | ii |
| வாழ்த்துரைகள் | v |
| தேவஸ்தான அமைவிடம் | viii |
| வரலாறு | 1 |
| ஆலயத்தின் உட்புற கட்டமைப்பு | 12 |
| விசேட உற்சவங்கள் | 14 |
| ஸ்ரீவரத விநாயகப்பெருமான் திருவூஞ்சல் | 19 |
| மயிலேறும் பெருமானார் திருவூஞ்சல் | 22 |
| சிவவீரபத்திரர் திருவூஞ்சல் | 27 |
| நிர்வாகசபை விபரங்கள் | 31 |
| ஆலயத் திருப்பணிகள் | 35 |
| ஆலயத்தில் அரும்பணியாற்றிய ஆசிரியப்பெருந்தகை | 38 |
| பாமாலை | 40 |
| கணபதியை வேண்டிப் பாடல் | 42 |
| கந்தபுராண கலாசாரமும் எமது தும்பளை மேற்கும்.... | 43 |
| யோகசுவாமிகள் காட்டும் புறவாழ்க்கை | 48 |
| கும்பாபிஷேகம் செய்வது ஏன்? | 53 |
| வாஸ்து சாந்தியின் சிறப்பும் முக்கியத்துவமும்... | 59 |
| திருப்பணி நிதி 2014, 2015 | 63 |
| கும்பாபிஷேக நிதி 2015 | 71 |
| நன்றியுரை | 78 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்பளை மேற்கு பெரிய வளவு அருள்மிகு ஸ்ரீ வரத விநாயகர் ஆலய வரலாறு

முப்புரம் எரிசெய் தவனின் மூத்த திருமகனே
அப்பனே பிள்ளையாரே அருகிருந்து அருள்பவனே
தப்பின்றி எம் எழுத்து தடங்கலின்றி அரங்கேற
எப்போதும் உன்தாளை ஏற்றமுடன் போற்றுகின்றோம்.

நீலத் திரை அணங்காள் நெடுந்திரையாந் தன் கரத்தால் கோலமுறு வெண்முத்தம் குவித்தருளும் சீர் வளர் இலங்கை என்னும் திருநாடாகும். இதனை இந்து சமுத்திரத்தின் முத்து எனச் சரித்திர ஆசிரியர்கள் வர்ணிப்பர். இத்திரு நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கிட வழி வகுத்த ஆறுமுக நாவலர் பெருமான் அவதரித்த இடம் யாழ்ப்பாணம் ஆகும். இத்திரு நகரத்தின் சென்னியில் திருவும், கல்வியும், சைவமும், தழிழும் தழைத்தோங்கும் இடம் வடமராட்சி பகுதியாகும். இவ்வடமராட்சிப் பகுதியானது கிழக்கில் வங்காள விரிகுடாவையும் வடக்கில் பாக்கு நீரிணையையும் உவகையுடன் இணைக்கும் கிராமம் தும்பளை என்னும் தூய கிராமம் ஆகும்.

இக் கிராமத்தில் வேளாண்மையில் ஈடுபட்டோர் செந்தமிழின் துறையுணர்ந்தோர், வேதாந்தம் சித்தாந்தம் சிறக்கக் கற்றோர், மறையாகமத்து முடிவுணர்ந்தோர், மொழி, கணிதம், சோதிடம் திறம்படக் கற்றோர், சிறந்த இசை நாடக கலை தேர்ந்தோர், ஆங்கிலம் ஆரியம் ஆகிய மொழிகளை ஆய்ந்தோர், புராண நூல்களைக் கற்று எளிமையான முறையில் பொருள் விரிப்போர், ஆங்கில, சித்த வைத்திய வல்லுனர், பொறியிலாளர், பல்கலைக்கழக துறை சார்ந்த வல்லுனர், கணக்காளர், திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தவர்கள், தலைமையாசிரியர் கள், ஆசிரியர்கள், கலை, விஞ்ஞான, வணிக பட்டதாரிகள், தனியார்துறை, அரசாங்கத்துறையில் வேலை பார்ப்போர், தாதிமார், வணிகம் செய்வோர், தீமை எனும் தொழில் மறந்து நற்கருமமே தேர்ந்து அதன் பயனை அகிலமெலாம் அளித்தோர் வாழ்ந்த வாழ்கின்ற இடம் தும்பளை ஆகும்.

வளம் நிறைந்த தும்பளை மேற்கு என்னும் கிராமத்தில் பெரியவளவு என்னும் இடத்தில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் தும்பளை மேற்கு பெரியவளவு ஸ்ரீ வரத விநாயகர் ஆலய வரலாற்றினை விரித்துக் கூறுவதன் மூலம் தற்பொழுது இருக்கும் சந்ததியினர், எதிர்கால சந்ததியினர் அறிந்து செயற்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடனேயே இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

இந்த ஆலய வரலாற்றுச் சிறப்பினை ஆங்காங்கு தொட்டம் தொட்டமாக எடுத்துரைக்கப்பட்டபடியால் எதிர்கால சந்ததியினர் உண்மை நிலையை அறியாதவர்கள் ஆக வேண்டிய சூழ்நிலை உருவாகிவிடும். அந்தத் துர்பாக்கிய நிலையினை எதிர் நோக்காமல் உண்மை நிலையினைத் தெரியப்படுத்துவதற்காகவே இவ் வரலாறு வரையப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியில் தும்பளை, நெல்லண்டை, கற்கோவளம், மாதனை, புலோலி கிழக்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சைவ மக்களுக்கெல்லாம் விநாயகர் வணக்கத்தலமாக இலச்சுமணன் தோட்டத்தில் அமைந்த வியகர் ஆலயமே அமைந்திருந்தது என எமது மூதாதையர் கூறியதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

அதன் பின்னர் கற்கோவளத்துச் சைவ அபிமானிகளுக்கும் தும்பளை, கலட்டி கிராமங்களைச் சேர்ந்த சைவ அபிமானிகளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தும்பளை, கலட்டி கிராமங்களைச் சேர்ந்த சைவ மக்கள் தமக்கென ஒரு விநாயகர் ஆலயத்தைத் தம்புருவளையில் அமைத்து வழிபாடாற்றி வந்ததாகக் கூறப்படுகின்றது.

அதனை அடுத்துத் தம்புருவளை மக்களுக்கும் கலட்டி மக்களுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கலட்டி மக்கள் வேறாக ஆலயம் ஒன்றை அமைக்க விரும்பினர்.

யாழ்ப்பாண மன்னன் பரராஜசேகரன் ஒல்லாந்த அதிகாரிகளிடம் அகப்படாது ஒழித்து வந்த போது புகலிடம் அளித்தவரும் பரராஜசேகர மன்னனிடம் சோதிடம், வைத்தியம் ஆகியவற்றை முறையாகப் பயின்றவருமான சந்திரவியார் பரமானந்தர் என்னும் மூதாதையர் 1798ம் ஆண்டு கார்த்திகை மாதம் ரோகினி நட்சத்திரத்தன்று விநாயகர் ஆலயத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார் என கூறப்படுகின்றது.

இது நிற்க, பெரிய வளவு பெரியதம்பிரான் எனப்படும் வீரபத்திரர் ஆலயம் போர்த்துக்கீசர் காலத்திற்கு முன்பிருந்தே வழிபாட்டுத் தலமாக விளங்கி வந்தது. போர்த்துக்கீசரின் கெடுபிடிகளுக்குப் பயந்து சைவ மக்கள் வீரபத்திரர், பத்திரகாளி விக்கிரகங்களைக் குடத்தினுள் இட்டு செந்தாவத்தை என்ற காணிக்குள் கொண்டு சென்று புதைத்து வைத்ததாகவும் பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் திரும்பவும் அவற்றைக் கொண்டு வந்து அதே இடத்தில் ஸ்தாபித்து வழிபாடாற்றி வந்ததாகவும் கூறப்படுகின்றது. அக்காலத்தில் காசிகாண்டபடனமும் ஆரம்பிக்கப்பட்டது.

பெரிய தம்பிரான் ஆலயத்தின் வடபால் முன் குறிப்பிட்ட பெரியாராலும் இவ்வூரைச் சேர்ந்த பெரியார்கள் சிலரது உதவியாலும் மேற்குறிப்பிட்ட தினத்தில் இலந்தை மர நிழலில் சிறு குடிசை அமைத்து கோமயத்தினால் பிள்ளையார் அமைத்து விநாயகர் விரதத்தினையும் ஆரம்பித்து வைத்தனர். அதே காலத்தில் கந்தப்புராண படனமும் ஆரம்பிக்கப்பட்டது. முத்தையர் என்ற பிராமணக் குருக்கள் முதற் பூசகராக நியமிக்கப்பட்டார்.

1800ம் ஆண்டு குடிசை மடாலயமாக அமைக்கப்பட்டு கல்லினால், ஞானசித்திவிநாயகர் விக்கிரகம் செதுக்கப்பட்டு பிரதிட்டை செய்யப்பட்டது. இவ்வூரைச் சேர்ந்த 18 பெரியார்கள் தமக்குள் ஒவ்வொருவரும் வருடம் பத்து ரூபா வீதம் சேகரித்து ஆலயத்தில் நித்திய பூஜை நடைபெற உதவினர். நாளடைவில் 60 பெரியார்கள் கோயில் நிர்வாகத்தில் பங்கு கொண்டனர். பூசகர்களாக முத்தையருக்குப் பின்னர்அவரது மருமகன் முருகையரும் தமக்கையாரின் மகன் சுப்பையரும் பூஜை செய்தனர்.

1902ல் இவ் ஆலயத்தை பரிபாலிப்பதற்கென ஒரு சபை அமைக்கப்பட்டதாகவும் அதில் உறுப்பினர்களாக திரு.வ.சின்னத்தம்பி தலைவராகவும் , திரு.ஆ.கதிர்காமு (வைத்தியர்) செயலாளராகவும், திரு.க.விநாசித்தம்பி பொருளாளராகவும், திருவாளர்கள் க.பரமுப்பிள்ளைச் சோதிடர், க.ஆறுமுகம் (வைத்தியர்), நா.கந்தப்பர், ஆ.கந்தப்பர், க.சுப்பிரமணியம் (சுப்பர், நாடக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்), ச.ஆழ்வாப்பிள்ளை, ஆ.வல்லியப்பர் ஆகியோர் அங்கத்தவர்களாகவும் நியமிக்கப்பட்டனர். இக் காலத்தில் கண்ணன் ஐயர் பூஜகராக இருந்தார். பின்னர் நாராயண ஐயர், முத்துச்சாமி ஐயர், முருகையர், மகாதேவஐயர் ஆகியோரும் பூஜை செய்ததாகக் கூறப்படுகின்றது.

1914ம் ஆண்டு மடாலயத்தைத் தேவாலயமாக அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. புலோலி தெற்கைச் சேர்ந்த திரு.எஸ்.ஆறுமுகம் சிற்பாச்சாரியார் அவர்கள் தமது கைத்திறமைகளைப் பயன்படுத்திக் கற்பக்கிரகத்தை அமைத்தார். அக் காலத்தில் முகாமையாளராக க.சுப்பிரமணியமும், செயலாளராக ஆ.கதிர்காமு வைத்தியரும் கோயிலாக அமைவதற்கு அயராது உழைத்தனர். அவர்களின் அயராத உழைப்பினால் 1922ம் ஆண்டு ஐப்பசி மாதம் பூச நடசத்திரத்தன்று திரு.ச.ஆழ்வாப்பிள்ளை அவர்கள் சங்கற்பகாரராக இருந்து சிவஸ்ரீ நா.முத்துச்சாமி குருக்கள் மூலம் அட்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. 1922ம் ஆண்டு தொடக்கம் 1947ம் ஆண்டு வரையும் ச.ஏகாம்பர நாதேஸ்வர ஐயர் பூஜை செய்ததாக அறிகின்றோம்.

1942ம் ஆண்டு ஞான சித்தி விநாயகர் விக்கிரகத்தை கோவிலின் வலது புறத்தில் மாற்றி திருவாளர் டாக்டர் க.சுப்பிரமணியம் அவர்களால் மூல விக்கிரகம் கொண்டு வரப்பட்டு ஸ்ரீவரத விநாயகர் என்னும் பெயருடன் பிரதிட்டை செய்யப்பட்டது. உற்சவ மூர்த்தியை திருமதி.கதிர்காமு சீதேவிப்பிள்ளை அவர்கள் செய்து கொடுத்தார். 1942ம் ஆண்டு ஆனி மாதம் அனுஷ நட்சத்திரத்தன்று திரு.ஆ.தாமோதரம்பிள்ளை அவர்கள் சங்கற்பகாரராக இருந்து பிரம்ம ஸ்ரீ நா.சோமசுந்தரக்குருக்கள் மூலம் அட்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. **(தகவல்** : ஸ்ரீ வரதவிநாயகப் பெருமாள் மயிலேறும் பெருமாள் திருவூஞ்சல்.)

1922ம் ஆண்டு தொடக்கம் 1947ம் ஆண்டு வரைக்கும் திரு.க.சுப்பிரமணியம் (மணியம் சுப்பர்) அவர்கள் முகாமையாளராக இருந்து கோவிலை நிர்வகித்து வந்தார். 1947ம் ஆண்டு கார்த்திகை மாதம் திரு.க.சுப்பிரமணியம் (மணியம் சுப்பர்) அவர்கள் வயோதிபம் காரணமாக கோவிலைக்கொண்டு நடத்த முடியாமல் தனது சகோதரியின் இளைய புதல்வனான திரு.க.சேதுபதி (அப்பாத்துரை) என்பவரிடம் கோவில் நிர்வாகத்தினையும் கோவில் சாவிகள் முழுவதையும் கையளித்தார். இதுவரை காலமும் பூஜை செய்து வந்த திரு.ச.ஏகாம்பரநாதேஸ்வர ஐயர் அவர்கள் கோவில் பூஜையிலிருந்து விலக வேண்டி ஏற்பட்டதால் உடனடியாக கோவிலுக்கு பூசகர் ஒருவரை நியமிக்க வேண்டியிருந்தது. அதனால் கோயில் நிர்வாகப் பொறுப்பினை ஏற்ற திரு.க.சேதுபதி (அப்பாத்துரை) அவர்கள் தனது நண்பனும் இலட்சுமணன் தோட்டத்தை சேர்ந்வருமான திரு.வை.தம்பையா ஐயர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து வை.தம்பையா ஐயரின் மைத்துனரான வேலணையில் வசித்து வந்த திரு.க.திருநாவுக்கரசு ஐயர் அவர்களை அழைத்து வந்து பூஜகராக நியமித்தார். திருநாவுக்கரசு ஐயருக்கு பூஜைக்கு உதவியாக அவரது சகோதரன் சுந்தரமூர்த்தி ஐயர் இருந்தார். பூசகர் வசிப்பதற்கு வசதியாக அண்மையில் அமைந்துள்ள படிக்கின்ற வளவு என்று அழைக்கப்படும் சிதம்பரப்பிள்ளை நாகரத்தினம் என்பவரது கடை அறை ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னர் டாக்டர் க.சுப்பிரமணியம் அவர்களால் கோயில் பூசகருக்கென ஒரு வீடு வடகிழக்கு மூலையில் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வீட்டிலேயே திரு.க.திருநாவுக்கரசு ஐயர் அவர்களும் அவருடைய தம்பியாரும் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தனர். தற்போது இக்கட்டம் பாழடைந்ததால் அகற்றப்பட்டு அவ்விடத்தில் ஸ்ரீவரத விநாயகர்கலை அரங்கு கட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப் பகுதியில் ஆலய பூசகருக்கெனச் சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லை. இந்தக் கோயிலைச் சேர்ந்த ஒவ்வொருவரும் மாதந்தோறும் நட்சத்திரப் பூஜைக்குரிய ஆட்களைச் சேர்த்து ஒரு பூஜைக்கு அரைக்கொத்து அரிசி வீதம் ஒரு வீட்டில் ஒரு பூஜை, இரண்டு பூஜை, மூன்று பூஜை வீதம் கொடுத்தும் விசேட தினங்களிலும் உற்சவ காலங்களிலும் நேர்த்திக் கடன் செய்வோர்கள் நைவேத்தியம், பலகாரம் ஆகியன செய்யக் கொடுத்த பொருட்களில் அரைவாசிப் பொருட்களில் நைவேத்தியம் பலகாரம் ஆகியவற்றை செய்து கொண்டு மிகுதி அரைவாசிப் பொருட்களைப் பூசகருடைய சம்பளமாக எடுத்துக் கொள்வர். திருநாவுக்கரசு ஐயர் கோயிலுக்குள்ளேயே பகற் காலம் தங்கியிருந்து புராணங்களைக் கற்று புத்தகத்தைப் பாராமலே பயன் சொல்லக்கூடிய திறமை பெற்று இருந்தார். கடைசி நாட்களில் இவர் வழுக்கி விழுந்தமையால் எழுந்து நடமாடக்கூடிய நிலையில் இல்லாமையால் இவருடைய தம்பி சுந்தரமூர்த்தி அவர்கள் பூசை செய்தார். விசேட திருவிழாக்காலங்களிலும் அபிடேகங்கள் செய்ய வேண்டிய நேரங்களிலும் பிராமணக்குருக்களைக் கொண்டு வந்து பூசை செய்யப்பட்டது. இவர்களில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர் பிராமண தெருவில் இருந்த யோகேஸ்வரக் குருக்கள் ஆவர். சிலவேளைகளில் சிவன் கோயில் பூசகரான சோமசுந்தரக் குருக்கள் இராமநாத குருக்கள் வந்து விசேட பூஜை செய்வார்கள்.

ஸ்ரீ வரத விநாயகர் ஆலயம் 1947ம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கம் 1962ம் ஆண்டு வரைக்கும் க.சேதுபதியவர்கள் க.சுப்பிரமணியடாக்டர், வ.செல்வரத்தினம், ச.சிவஞானசுந்தரம், ச.கந்தசாமி மற்றும் பெரியோர்களது அனுசரணையுடன் நடாத்தி வந்த காலத்தில் சேதுபதியவர்களுக்கு குடும்பத்தில் பொறுப்புக்கள் கூடியதன் காரணமாக அவரின் உறவினரான க.விநாயகம்பிள்ளையவர்களை அழைத்து கோயில் நிர்வாகப் பொறுப்பை ஓர் நம்பிக்கையான நிர்வாக சபையை ஏற்படுத்தி அச்சபையிடம் கோயில் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டுமெனத் தூண்டியதன் பேரில் 1962ம் ஆண்டு மாசி மாதம் ஆலய பரிபாலன சபை ஏற்படுத்தப்பட்டது. அச் சபைக்கு க.வேலாயுதம்பிள்ளை தலைவராகவும், வ.செல்வரத்தினம் செயலாளராகவும், ஆ.தியாகராசா பொருளாளராகவும் க.சேதுபதி, ச.ஆழ்வாப்பிள்ளை, சி.நாகலிங்கம், கி.குமாரசாமி, சி.நடராசா ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர். முகாமையாளராக க.விநாயகம்பிள்ளை அவர்களை நியமித்தனர்.

1973ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை சிவஸ்ரீ வ.வே.தியானந்தராஜாக் குருக்கள் அவர்கள் இந்த ஆலயத்தில் பிரதம குருவாக இருந்து பூஜைகள் செய்து வருகின்றார். இவரோடு இவரது சகோதரர் சிவஸ்ரீ.வே.நவரத்தினக் குருக்கள் மற்றும் இவரது மகன் ந.கோணேஸ்வராக் குருக்கள் அவர்களும் பூஜைகளை செய்து வந்தார்கள். தற்பொழுது பிரதமகுருவிற்கு உதவியாகவும், அர்ச்சகராகவும் திரு.ப.பாலகுமார் ஐயா அவர்கள் இருந்து வருகின்றார்.

1978ம் ஆண்டு பரிவார மூர்த்திகளான நாகலிங்கம், சந்தாகோபாலர், வள்ளிதெய்வானை சமேத சுப்பிரமணியப்பெருமானுக்கும் வீரபத்திரர் ஆலய பரிபாலன மூர்த்திகளுக்கும் சுற்றுக் கோயில்கள் அமைக்கப்பட்டன. இவற்றின் விக்கிரகங்களான நாகலிங்கம், சந்தானகோபாலர், வள்ளிதெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிகள், வீரபத்திரர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றை ச.ஆழ்வாப்பிள்ளை, வ.செல்வரத்தினம் , ஆ.வ.சி.கந்தசாமி ஆகியோர் செய்து கொடுத்தனர். அக் காலப்பகுதியில் சிவவீரபத்திரர் ஆலயம் தனியான நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்தது. 1978ம் ஆண்டு வைகாசி மாதம் புனர்பூச நட்சத்திரத்தன்று செ.ஈஸ்வரபாதம், ஆ.வ.சி.கந்தசாமி, க.விநாயகம்பிள்ளை ச.ஆழ்வாப்பிள்ளை ஆகியோர் சங்கற்பகாரராக இருந்து சிவஸ்ரீ.க.சிவபாதசுந்தரக் குருக்கள் மூலம் அட்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1980ம் ஆண்டு இந்து ஆலய பரிபாலனசபையில் பதிவுசெய்யப்பட்டது. மேலும் 1988ம் ஆண்டு இந்துக் கலாச்சார அமைச்சில் பதிவுசெய்யப்பட்டு $\frac{\text{HA/5/JA/431}}{\text{05/12/1988}}$ எனப் பதிவு இலக்கமும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதன் பின்னர் 1999.07.01இல் இவ்வாலயத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்யப்பட்டு சண்டேஸ்வரப் பெருமானுக்கு கோவில் கட்டப்பட்டதுடன் உமை பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமானுக்கும் மூலஸ்தானம், மகா மண்டபம் மீளக் கட்டப்பட்டதுடன் பல திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 2000.06.22ந் திகதி அஷ்டபந்த மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதற்கு சிவஸ்ரீ.சிவ ஆறுமுகக் குருக்கள் பிரதமகுருவாக செயற்பட்டு இக்கிரியைகளை சிறப்புற நடாத்தி வைத்தார். இக் கும்பாபிஷேகத்திற்கு சங்கற்பகாரராக திரு.நா.முத்துக்கிருஸ்ணன் அவர்களும் அவர் பாரியாரும் ஸ்ரீ வரதவிநாயகருக்கும், திரு.வே.நடராசா அவர்களும் அவர் பாரியாரும் வீரபத்திரருக்கும், திரு.க.பொன்னம்பலம் அவர்களும் அவர் பாரியாரும் ஞானசித்தி விநாயகருக்கும், திரு.ச.திருஞானசம்பந்தர் அவர்களும் அவர் பாரியாரும் முருகன், நாகதம்பிரானுக்கும், திரு.வே.இராமலிங்கம் அவர்களும் அவர் பாரியாரும் சண்டேஸ்வரருக்கும் இருந்தார்கள்.

அடுத்து 18.01.2013ந் திகதி பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இவ்வாலயத்திற்கு மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து கணிசமான அளவு கட்டிடங்கள் புனரமைக்கப்பட்டு சிவாச்சாரியபானு சத்யோயாதசிவாச்சாரியார் சிவஸ்ரீ வ.வே.தியானந்தராஜாக் குருக்கள் அவர்கள் பிரதம குருவாக செயற்பட்டு ஆலயக் கிரியைகளை திறம்பட வழிநடாத்தி 25.03.2015ந் திகதி மகாகும்பாபிஷேகம் நிறைவேற்றி வைத்தார். இதில் திரு.கி.பாலகெங்காதரன்அவர்களும் அவர் பாரியாரும் அத்துடன் செல்வி.சே.அமிர்தலட்சுமி அவர்களும் ஸ்ரீவரதவிநாயகருக்கும், திரு.இ.கணேசராசா அவர்களும் அவர் பாரியாரும் வீரபத்திரருக்கும், திரு.க.புலேந்திரன் அவர்களும் அவர் பாரியாரும் ஞானசித்தி விநாயகருக்கும், திரு.தி.சிவனேசன் அவர்களும் அவர் பாரியாரும் முருகப் பெருமானுக்கும் , திரு.ச.திருநேசன் அவர்களும் அவரது சகோதரி திருமதி.சு.இந்திரா அவர்களும் சந்தானகோபாலருக்கும், திரு.இ.ஆனந்தநாதன் அவர்களும் அவரது பாரியாரும் சண்டேஸ்வரருக்கும், திரு.க.வித்தியானந்தன் அவர்களும் அவரது பாரியாரும் காவல் வைரவருக்கும், திருமதி.சுதமதி நந்தபாலன் அவர்களும் அவரது சகோதரர் திரு.க.சந்திரகுமாரன் அவர்களும் வெளி வைரவருக்கும் திரு.க.சிவசுப்பிரமணியம் அவர்களும் அவரது பாரியாரும் அத்துடன் திரு.த.உதயமூர்த்தி அவர்களும் கனகசக்தி வேலாயுத சுவாமிக்கும் சங்கற்பகாரராக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரபத்திரர் ஆலயம்

கி.பி 1460ம் ஆண்டு சிவசங்கரர் என்னும் அடியார் இந்தியாவிலுள்ள நாகப்பட்டினம் என்னும் ஊரிலிருந்து பாய்க்கப்பல் மூலம் இலங்கையில் நாகர்கோயில் என்னும் இடத்தை வந்தடைந்தார். சில தினங்கள் அங்கே தங்கினர். பின்னர் வண்டி மூலம் பச்சிலைப்பள்ளியை அடைந்தார். அங்கே தான் கொண்டு வந்த வீரபத்திரர், பத்திரகாளி (பெரியதம்பிரான்) சிலைகளை ஓரிடத்தில் வைத்து பூஜை செய்து வந்தார். பொதிமாடு மாட்டு வண்டிக்காரர்கள் இவர் இருக்கும் இடத்தில் வந்து தங்கிச்சமையல் செய்தனர். அடிகளார் அவர்களைக் கண்டு நீங்கள் எவ்விடம்மிருந்து வருகிறீர்கள்? எங்கே செல்கிறீர்கள்? என வினாவினார். நாங்கள் வடபக்கமாகப் பருத்தித்துறையிலுள்ள தும்பைநகர் என்னும் இடத்திற்குச் செல்கிறோம் எனப் பதிலளித்தார்கள். அடியார் தானும் கூடவர அனுமதி தரும்படி வேண்டினார். அவர்கள் அதற்கு உடன்பட்டார்கள். வண்டியில் இரு விக்கிரகங்களுடன் தானும் அவர்களாடு ஏறிக்கொண்டார்.

அவ்விடம் உணவு சமைத்து அடியாருக்கும் கொடுத்து தாமும் உணவருந்திக் கொண்டார்கள். அடிகளார் தான் கொண்டு வந்த மூர்த்திகளுக்குரிய நிவேதனம் செய்து உணவு அருந்தி வண்டிகள் புறப்பட்டன.

அடியார்களிடம் இவர்கள் மூவரும் அவருடைய பெயர் எவ்விடமிருந்து இங்கே வந்தீர்கள்? ஏன் மூர்த்திகளைக் கொண்டு செல்கிறீர்கள்? என வினாவினார்கள். அவர் தான் நாகப்பட்டினத்திலிருந்து வருகிறேன். இறைவன் என்னைத்தும்பளை என்னும் ஊருக்குச் செல்லும்படி கனவில் கூறினார். அதன்படி பாய்க்கப்பலிருந்து நாகர்கோயிலுக்கு வந்து இடம் தெரியாமல் பச்சிலைப்பள்ளியை அடைந்து உங்களைச் சந்தித்தேன். என் பெயர் சிவசங்கரர் என விடையளித்தார். ஒரு சித்தர் தான், இவ்விக்கிரகங்களைக் கொண்டு செல்லும்படி தந்தார் என்று கூறினார்.

வண்டிக்காரர்களின் பெயர்கள்? எவ்விடமிருந்து வருகிறீர்கள்? என்று அடியார் அவர்களைக்கேட்டார். முன் வண்டியிலிருப்பவர் பெரியார் என்பவராவர். எனபெயர் கணபதி ஆகும். நடுவண்டியில் உங்களுடன் இருப்பவர் மாணிக்கர் கந்தப்பர் ஆவர். பின் வண்டியிலிருப்பவர் வேலப்பர் அப்பாக்குட்டி ஆவர். நாங்கள் வன்னிப்பகுதியிலிருந்து எங்கள் ஊராகிய தும்பைநகருக்குச் செல்கிறோம் என்று விடையளித்தனர்.

மாட்டு வண்டிகள் தும்பளையை வந்துசேர்ந்தன. அவர்கள் கோட்டாகலட்டி பெரியவளவு ஆகிய இருகாணிகளுக்குள் இலந்தை மரநிழலில் வண்டிகளை நிறுத்தி மாடுகளை அவிழ்த்தார்கள் மாடுகளுக்குத் தண்ணீர் வழங்கினார்கள். இதுதான் தும்பளை என்னும் கிராமம் எனக் கூறினார்கள்.

அடிகளார் பெரியார் , மாணிக்கர் , வேலப்பர் ஆகியோரின் உதவியுடன் இலந்தை மரநிழலில் ஒரு கொட்டில் போட்டு அடிகளாருக்குக் கொடுத்தார்கள். அவர்தான் கொண்டு வந்த மூர்த்திகளை அங்கே பிரதிட்டை செய்தார். சில காலங்களின் பின்பு அடிகளார் காலஞ் சென்றுவிட்டார். அதன் பின்பு முற்கூறிய மூவரும் பூஜை செய்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 16ம் நூற்றாண்டில் போத்துக்கீசர் இவ்விடம் வந்தார்கள். இந்து ஆலயங்கள் இருக்கக்கூடாது எனக்கட்டளையிட்டனர். அதனால் விரதம் பிடித்த இலைகளை வீட்டு ஓலைக்குள், மரங்களில் ஒழித்து விரதம் அனுட்டித்தார்கள். விக்கிரகங்களுக்கு ஒருவித இடையூறும் ஏற்படாமல் இருப்பதற்காக செந்தாவத்தை என்னும் காணிக்குள் இரவோடு இரவாகக் கொண்டு சென்று புதைத்தார்கள். இரவு நேரங்களில் விளக்கு ஏற்றிப்பூஜை செய்தார்கள் பெரியார் மகன் கந்தரும், மாணிக்கத்தார் மகன் வேலப்பரும், வேலப்பர் மகன் கணபதியாரும் ஒல்லாந்தர் காலம் வர ஊர் மக்களுக்கு, முன் நடந்த விடயங்களைக் கூறி விக்கிரகங்களைப் பழைய இடத்திற்குக் கொண்டு சென்று வைக்க ஆலோசித்தார்கள். முன் இருந்த இடத்தில் ஊரவர்களின் உதவியுடன் சிவஆலயம் அமைத்து விக்கிரகங்களை பிரதிட்டை செய்து வழிபட்டார்கள்.

1798ம் ஆண்டு முற்கூறிய மூவரும் பெரிய புராணம் படித்து மறுவருடம் காசி காண்டம் என்னும் புராணத்தை கார்த்திகைத் திங்களில் ஆரம்பித்து அம்மாதத்திலேயே நிறைவு செய்தார்கள். சின்னப்பொடியர் என்பவர் காசிகாண்டத்தினை ஏட்டில் எழுதிக் கொடுத்தார். முற்கூறியவர்கள் புராணத்தை படித்து உரை கூறி அன்னதானம் கொடுத்து உரையைச் சிறக்கச்செய்தனர். வேலப்பர் மாணிக்கத்தார், அப்பாப்பிள்ளை, பரமுப்பிள்ளை கந்தப்பர் ஆகியோர் ஆலயத்தை பெருப்பித்து சிறப்பாக நடத்தினார்கள்.

கோயில் பூஜைக்கு முறையே காலத்துக்குக்காலம் சின்னப்புஜயர், செல்லையர் தம்பையாக்குருக்கள், சிவப்பிரகாசக்குருக்கள், முத்துச்சாமிக்குருக்கள், நடராஜக்குருக்கள், சுந்தரஜயர், திருநாவுக்கரஜயர், கந்தசாமிஜயர் ஆகியோர் பூஜைசெய்து இப்போது வ.வே.தியானந்தராஜக்குருக்கள் பூஜையை ஏற்று நடாத்தி வருகின்றார். 1963ம் ஆண்டு ஆவணிச்சோதி நட்சத்திரத்தில் வே.கணவதிப்பிள்ளை சோதிடரும் சி.கந்தையா, மா.வைரமுத்து (பொன்னையா) பெ.க.தியாகராஜச் சோதிடரும் சி.இராமலிங்கம் ஆகியோரும் சிவலிங்கம் செய்து பிரதிட்டை செய்வித்தனர். சிலகாலங்களுக்குப் பின்பு தங்கராசா என்பவர் ஓர் அம்மனும் கொணர்ந்து புராணத்தை முறையாக நடத்தி வழிபட்டனர்.

1986ம் ஆண்டு திரு.கு.கனகசுந்தரம் மனைவி அவர்களுகக்குக் கனவில் சிலை விக்கிரகம் அமைக்கும்படி கூறியமைக்கமைய ஊரவர்களின் உதவியுடன் 1986ம் ஆண்டு பங்குனி உத்தரத்தன்று விக்கிரகம் பிரதிட்டை செய்தனர். விஜயரத்தினக்குருக்கள் மூலம் அன்று தொடக்கம் பதினைந்து தினங்களுக்கு அபிஷேகம் செய்து சுவாமி வீதி வலம் வந்தார். உற்சவ இறுதிநாள் அன்று திருவூஞ்சல் இடம் பெறும். அவ்வாண்டு தொடக்கம் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று சுவாமி ஊர் உலா சென்று சனங்களுக்கருள் செய்கிறார்.

தொடர்ந்து இவ்வாலயத்தில் ஸ்ரீகாசிகாண்டம் என வழங்கும் புராணம் கார்த்திகை மாதத்தில் அங்குரார்பணம் செய்யப்பட்டு மூலத்து உரைவிளக்கமும் விமரிசையாக நடைபெற்று வருகின்றது. காண்டத்தின் 100வது அத்தியாயமான சேவிகிற முறைமையுரைத்த அத்தியாயத்தன்று ஸ்ரீஞான சித்தி விநாயப்பெருமான் ஸ்ரீ சிவமகா வீரபத்திர சுவாமி சமேத உமை பத்திரகாளி அம்மை சகிதம் இடப வாகனத்தில் எழுந்தருள்பாலிப்பது முக்கிய சிறப்பாகும். இதே தினத்தன்று பூரண கும்பம் உள்வீதி வலம்வந்து ஆலய தீர்த்தக்கிணற்றில் சங்கமிப்பது வழக்கமாகும். அதனைத்தொடர்ந்து அன்னதானம், நிறைவுமணி , வைரவசாந்தி என்பனவற்றுடன் இனிது நிறைவேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயமானது மடாலயமாக காணப்பட்டமையினால் கடவுள் கிருபையினால் மூர்த்திகரம் சிறப்பிக்கும் வகையில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் போன்ற அமைப்புடன் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி பிரம்மாதி வருடம் 1999 ஆனி மாதம் 17 ஆம் திகதி (01.07.1999) அன்று வியாக்கிழமை வரதவிநாயகபெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்ற போது சிவவீரபத்திர சுவாமிக்கும் உமைபத்திரகாளிக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற திருப்பணி வேலையின் போது இவ்வாலயம் மாற்றியமைக்கப்பட்டது. இதன்படி பிரம்மாதி வருடம் 1999 ஆவணி மாதம் (16.09.1999) 30ம் திகதி வியாழக்கிழமை அத்திவாரக்கல் நாட்டப்பெற்று அராலியை சேர்ந்த கலைஞர்களால் ஆலய கட்டுமானப்பணிகள் நடைபெற்றன.

விக்கிரம வருடம் ஆனி மாதம் 3ம் திகதி தமிழ்த்திகதி வைகாசி மாதம் 21ம் திகதி பிரதமை திதியில் மிருகசீரிட நட்சத்திரத்தில் ஸ்ரீ ஜந்திர பூஜை ஆரம்பிக்கப்பட்டு ஆடி மாதம் 18ம் திகதி தமிழுக்கு ஆனி 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை விநாயக பூஜையுடன் கும்பாபிஷேக திதியில் ஆரம்பமாகி திங்கட்கிழமை இரவு யாக ஆரம்பமும் புதன்கிழமை தேவப்பிரதிஷ்டையுடன் தைல அப்பியாசங்கமும் மறுநாள் வியாழக்கிழமை 8ம் திகதி 22.06.2000 அவிட்ட நட்சத்திரமும் சித்தயோகமும் பஞ்சமித்திதியும் புதன் ஓரையும் அமைந்த நேரத்தில் முற்பகல் 10 மணி 18 நிமிடம் முதல் 11 மணி 30 நிமிடம் வரையிலுள்ள சிங்கலக்கின சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் ஆகமகிரியா விபுதர் சிவஸ்ரீ சிவா ஆறுமுகக்குருக்கள் தலைமையில் இனிதே நிறைவேறியது.

தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று ஆவணி மாதம் 5ம் திகதி தமிழுக்கு ஆடி 21 சனிக்கிழமை 108 சங்குகளால் சங்காபிஷேகம் நடைபெற்றது என அமரர் வ.செல்வரத்தினம் அவர்களினதும் திரு.வே.நடராசா அவர்களினதும் தகவல் திரட்டில் இருந்து பெறப்பட்டது.

இவ்வாலயத்தில் கார்த்திகை மாதம் என்றால் மிகவும் சிறப்பு வாய்ந்தது. யாழ் மாவட்டத்திலேயே ஒரு சில கோவில்களிலேயே படிக்கப்படுகின்ற ஸ்ரீ காசி காண்டம் எனும் புராண படிப்பு இடம் பெறுவது வழக்கம். இது மிகவும் கடினமான மொழி நடைச் செய்யுள் கோவை ஆகும். அடியார்கள் தங்கள் வேலைகள் முடிந்து இரவு நேரத்தில் குத்து விளக்கேற்றி படிப்பது வழக்கமாகும்.

1970களிற்கு முன்னர் இக் காசி காண்டத்திற்கு புத்தகம் கட்டு என தும்பளை, கற்கோவளம் உட்பட அயலூருக்கும் சென்று பறை சாற்றி அன்னதானம் வழங்கும் தகவல் தெரிவிப்பது வழக்கம். இதன் பயனாக ஆலய வீதியிலிருந்து தெற்குப் புறமாக நீண்டு தபாற் பெட்டி சந்தியை அண்மிக்கும் வரை அடியார் கூட்டம் அன்னதானம் பெறுவதற்கு இருந்ததைக் காணமுடிந்தது. மறுநாள் 63 நாயன்மார்கள் என ஒவ்வொரு அடியாருக்கும் ஒவ்வொரு நாயன்மார் நாமம் இட்டு அழைத்து அன்னதானத்தை இவர்கள் அமர்ந்து இருந்து உண்பதற்கு இவ் அன்னதானத்தை வழங்கப்படுவது வழக்கமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பங்குனி மாதம் யாதாயினும் ஒரு திங்கள் கிழமை குளிர்த்தி உற்சவமும் நடைபெறுவதுண்டு. மேலும் நவராத்திரி தினத்தில் கும்பம் வைத்து ஆரம்பிப்பர். ஒவ்வொரு நாளும் விசேட பூசை இடம் பெற்று விஜயதசமி அன்று சிறுவர்களுக்கு வித்தியாரம்பம், கும்பச்சரிவு பின்னர் கன்னிவாழை வெட்டுதல் இடம் பெறுவதைக் காணக் கூடியதாக உள்ளது. 1990களின் முற்பகுதி வரை இவ் ஆலய முன்றலில் மதியம் அளவில் கன்னி வாழை வெட்டப்பட்டு விசேட பூசையுடன் நவராத்திரி பூசை நிறைவு பெறும். எழுந்தருளி விக்கிரகமான அம்மனை கிராம உலாவாக தரிசனம் செய்யும் மானம்பூ உற்சவம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டபோது சக்தி வேலாயுத சுவாமி ஆலய (கனகர் கோவில்) முன்றலில் இக் கன்னி வாழை வெட்டப்பட்டது. இவ் ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்ட காலத்தில் கலட்டி அம்மன் கோவிலில் இக் கன்னி வாழை வெட்டல் இடம் பெற்றது. இதன் பின்னர் எம்பெருமாட்டி ஒவ்வொரு அடியார்கள் வீடு தோறும் கிராம உலா வந்து அருள்பாலிப்பார். பின்னர் ஆலயம் அடைந்து பிராயச் சித்தஅபிஷேகம் நடைபெறுவதுண்டு. மேலும் இவ் ஆலயத்தில் இருந்து ஆண்டு தோறும் தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளிஅம்மன் கோவிலுக்கும், மாதனைக் கண்ணகை அம்மன் கோவில் வெளிமடை, எட்டாம் மடைக்கும் அடியார்கள் காவடி எடுப்பர்.

1990றகு முன்னர் வைரவர் வேள்வி ஆரம்ப நிகழ்வான விளக்குவைத்தலுக்கு இங்கிருந்து சூலம் எடுத்தலும் இடம் பெற்றது 2000 ஆண்டு மகா கும்பாபிஷேகத்தின் பின் இந்நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

## சக்தி வேலாயுத சுவாமி (கனகர் கோயில்)

வீரபத்திரர் ஆலயத்திற்கு முன்பே இவ் ஆலயம் காணப்பட்டது. ஸ்ரீவரத விநாயகர் கோயில் வீதிக்கு தென்கிழக்குப் புறத்தில் இக் கோயில் அமைந்துள்ளது. ஸ்ரீவரத விநாயகர் ஆலயத்தின் தென்கிழக்குப் புறத்தில் வாழ்ந்த சைவர் குலத்தைச் சேர்ந்த கனகர் என்பவர் அவருடைய வீட்டுக்கு அருகே முருகனுக்கு ஒரு ஆலயமும் கிணறும் அமைத்தார் எனவும் அக்காரணத்தினால் தான் அக் கோயில் கனகர் கோயில் என அழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. அக் கோயிலில் திருச்செந்தூரிலிருந்து கொண்டு வரப்பட்ட (முருகன்) வேலாயுதம் பிரதிட்டை செய்யப்பட்டதாகவும் பெரியோர்கள் சொல்லக் கேள்வியாக உள்ளது. இந்த முருகன் கோயிலுக்கு வடக்குப் புறத்தில் வைரவர் கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த வைரவர் சூலம் முனிவரின் கையிலிருக்கும் தண்டினை ஒத்து இருக்கின்றது. இவ் ஆலயம் கனகர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு இருந்தமையால் சைவக் குடும்பங்கள் குடிபெயர்ந்ததுடன் பல காலம் கவனிப்பார் அற்று கிணறும் பாழடையத் தொடங்கியது. 1950ம் ஆண்டு.கோயில் கிணற்றைத் துப்பரவு செய்து பாவனைக்கு உகந்ததாக ஆக்கினர். அக் காலத்தில் கிணற்றுக்குரிய வாயில் வடக்குப் புறத்தில் அமைந்திருந்தது. மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள போது 1978 கும்பாபிஷேகத்திற்காக ஊர் இளையோர்கள் முன்னின்று மக்களின் அன்பளிப்புடன் கிணறு திருத்தி அமைக்கப்பட்டது. 2000ம் ஆண்டு கனகர் கோயில் கிணற்றின் வாயிலை கிழக்கு புறமாக மாற்றி கிணற்றிலும் திருத்தங்கள் செய்யப்பட்டது. அமரர் வ.செல்வரத்தினம் (வாத்தியார்) அவர்கள் முருகன் ஆலயத்திற்கு முன்னால் தகரத்தால் வேய்ந்த ஒரு மண்டபம் கட்டியதோடு அதற்கு சீமெந்து நிலமும் அமைத்தார். இந்தக் கோயில் திருத்தம் செய்யப்பட்டதும் ஆறு நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசஷ்டிப்பூஜை நடைபெற்று ஆறாம் நாள் ஓர் சிறிய அன்னதானமும் அமரர்.வ.செல்வரத்தினம் அவர்களால் வழங்கப்பட்டது. பின்னர் இந்தக் கோயில் ஆகம முறைப்படி பராமரிக்கப்படாது விட்டாலும் பல முருகன் பக்த அடியவர்கள் கோயிலைக் கூட்டிக் கழுவி விளக்கு வைத்து வந்தார்கள். இக் கோயிலுக்கு வீரபத்திரர் கோயிலுக்குரிய பூசகர்கள் பூசை செய்ததாகக் கூறப்பட்டது. 1980களில் ஸ்ரீவரத விநாயகர் ஆலய பூசகரே பூசை செய்தார். இது மாற்றம் பெற்று வரத விநாயகர் கோயிலில் இருந்து விசேட தினங்களில் நைவேத்தியங்களை அடியார்கள் கொண்டு சென்று படைத்து கற்பூரம் எரிக்கும் பழக்கம் முன்பு காணப்பட்டது.

18.01.2013ம் ஆண்டு ஸ்ரீவரத விநாயகர் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்படுவதற்குச் சில ஆண்டு முன்னர் இந்த முருகன் ஆலயத்திற்கும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அதன் பின்னர் 2015.03.25ம் திகதியன்று ஸ்ரீவரத விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக தினத்தன்று இந்த முருகன் ஆலயத்திற்கும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதனையடுத்து மீண்டும் பூஜைகள் இடம்பெற்று வருகின்றன.

## வைரவர் ஆலயம்

ஸ்ரீவரத விநாயகர் ஆலயத்திகு வெளிப்புறத்தில் வடமேற்கு மூலையில் ஒரு வைரவர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இவ் ஆலயத்தில் பல வைரவர் சூலங்கள் நாட்டப்பட்டு இருக்கின்றன. இந்த வைரவர் சூலங்கள் ஒவ்வொன்றும் யாரால், எப்போது நாட்டப்பட்டது என்ற தகவல்கள் பெறமுடியவில்லை. ஆயினும் இரு சூலங்களின் வரலாறு இவ்வாறு அமைகின்றது. இந்த ஆலயத்தில் உள்ள வைரவர் சூலம் திரு.சிவப்பிரகாசம் ,திரு.கந்தையா, திரு கார்த்திகேசு உபாத்தியார் ஆகியோரின் தந்தை வேலுப்பிள்ளை (வேலப்பர்) இவரின் தகப்பன் குமரப்பர் இந்த குமரப்பர் அவர்களின் தகப்பன் அனுராதபுரத்தில் உள்ள களுதாவளையில் வியாபாரம் செய்த காலத்தில் அதாவது 1800களின் பிற்பகுதியில் வைரவர் கோயில் ஒன்றை அமைத்து வழிபட்டு வந்தார் எனவும், பின்னர் சிங்கள மக்களுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் சூலத்தை யாரும அறியாமல் நடைசாரியாக எடுத்து வந்து தும்பளையில் தற்போது உள்ள வைரவர் ஆலயம் இருக்கும் இடத்தில் கொட்டில் போட்டு ஸ்தாபித்து பின்னர் 1956களில் வைரவர் கோயிலுக்கான கட்டிடம் வேலப்பா குடும்பத்தினரால் கட்டப்பட்டது என்றும் (தகவல் க.சேதுபதி) அந்த வைரவர் சிங்கள ஊரில் இருந்து கொண்டு வரப்பட்டமையால் சிங்கள வைரவர் எனவும் சிலர் கூறுவர்.

இதனோடு வேறு ஒரு தகவலும் கிடைத்துள்ளது அதாவது வரத விநாயகர் ஆலயத்துக்கு அண்மையில் வசித்து வந்த குமரப்பர், வேலுப்பிள்ளை என்பவர் வைரவரையே தனது குல தெய்வமாக வழிபட்டு வந்தார். அவர் தனக்கென ஒரு மாட்டு வண்டியையும் வைத்து இருந்தார். நாகர் கோயிலுக்கு அண்மையிலுள்ள குடாரப்பு வைரவர் கோயிலுக்கு தானும் தனக்கு இசைந்த வேறு இரு வண்டில்காரருமாக சேர்ந்து செல்வதுண்டு அங்கு நடைபெறும் வேள்வியில் பொங்கல் செய்து மகிழ்வுற்றுத் திரும்புவார்கள். 1936ம் ஆண்டளவில் அவ் வைரவரைக் கொண்டு வர நிர்ப்பந்திக்கப்பட்ட காரணத்தினால் இங்கு கொண்டு வந்து வரத விநாயகர் ஆலயத்திற்கு வெளிப்புறமாக ஸ்தாபிதம் செய்யப்பட்டது. இங்கு வாழும் மக்கள் உதவியுடன் வெள்ளிக்கிழமை தோறும் விசேட வழிபாடும் வருடத்திற்கு ஒரு முறை வேள்வியும் சிறப்பாக இடம் பெறுவதுண்டு. இங்குள்ள வைரவர் ஆலயம் அமைந்த பின்னரும் வேலுப்பிள்ளை (வேலப்பா) அவர்கள் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் உந்துதலினால் குடாரப்பு கோயிலில் நடைபெறும் வேள்வியிலும் பங்கு பெறச் செல்வார். இவருடன் வழமைபோல மற்றைய வண்டிற்காரரும் செல்லும் வழக்கத்தை விடவில்லை.

இவ்வாறு வைரவர் ஆலயம் அமைத்து வழிபாடு செய்தவர் இறைபதம் சேர்ந்த பின்பு அவருடைய மகன் வே. கந்தையாவினால் பராமரிக்கப்பட்டு வந்தது. 1956 ம் ஆண்டு இவ் வைரவர் ஆலயம் நிரந்தக் கட்டிடமாக அமைக்கப்பட்டு வழிபாடுகள் வேள்விகள் என்பன நடாத்தப்பட்டு வந்தன.

வேள்வியின் போது ஊர் மக்கள் ஆடுகள், கோழிகள் என்பவற்றை நேர்த்திக்காக விட்டாலும் அவை பலியிடாமல் ஏலத்தில் விற்பனை செய்து ஆலயத்திற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக் கொண்டனர் இவ் வைரவரின் அருட்சக்தி மகத்தானது. இந்த ஆலயத்திலோ, அல்லது அயலிலோ ஆசாரமற்ற முறையில் மனிதர்கள் நடந்தால் அவர்கள் அவற்றுக்கான தண்டனையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. அவற்றிற்குப் பரிகாரமாகப் பல நேர்த்திக்கடன்களும் நடைபெறுவதுண்டு அவரின் உக்கிரத் தன்மை காலப்போக்கிற் குறைந்து அருள் மிகு வைரவராக விளங்குகின்றார். (நேரடி தகவல் வே.கார்த்திகேசு உபாத்தியார்)

அத்துடன் இந்த வைரவர் கோயிலுக்குப் பின்னால் ஓர் அரசமரம் நாட்டப்பட்டு இன்று ஓங்கி வளர்ந்துள்ளதைக் காண்கின்றோம். இந்த அரசமரம் வரத விநாயகர் ஆலயத்திற்குப் பின்புறத்தில் வாழ்ந்த பிராமணர்களால் நாட்டி வளர்க்கப்பட்டது என்றும் இந்தப் பிராமணர்களாலேயே வைரவர் சூலம் வைக்கப்பட்டது என்றும் ஒரு வரலாறும் உண்டு. (தகவல் பூ.இராஜலட்சுமி அம்மா)

இந்த ஆலயத்தில் வருடந்தோறும் வேள்வி நடைபெற்று வருகின்றது. வேள்வி நடைபெறவிருக்கும் நாளிலிருந்து எட்டு நாட்களுக்கு முன்னர் வீரபத்திரர் ஆலயத்தில் இருந்து வைரவ சூலம் எடுத்து வரப்பட்டு விசேட பூசையுடன் வைரவர் சூலம் கோவில் முன்புறத்தில் நாட்டப்படும் ஏழாம் நாள் வெள்ளிக்கிழமை புதுவளவு கிணற்றடியில் இருந்து வளர்ந்தும் மடைப்பண்டமும் எடுத்து ஊர்வலமாக கொண்டு வருதல் வழமையாக இருந்தது. வளர்ந்து கட்டுவதுடன் பொங்கல் ஆரம்பமாகி மதிய வேளை பறை மேளவாத்தியத்துடன் விசேட பூசை நடைபெற்றுச் சூலம் எடுத்தவர் கலையாடுவர். கலையாடிய வண்ணம் வடக்குப் புறம் உள்ள வீதி வழியாக வரதவிநாயகர் வீதியும் சாஸ்திரியார் வீதியும் இணையும் சந்தியில் வழிவெட்டப்படுவதுடன் வேள்விக் கிரியைகள் முடிவு பெறும். இந்த ஒழுங்கு முறை தற்போது நடைமுறையில் இல்லை. அடுத்து வருகின்ற வெள்ளிக்கிழமை "எட்டாம் மடை" என்று அழைக்கப்படுகின்ற சிறிய ஓர் மடையும் மாலை வேளையில் இடம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் உட்புற கட்டமைப்பு

**ஆ**ரம்ப காலத்தில் இவ் ஆலயம் ஞான சித்தி விநாயகரும், பலிபீடமும், காவல் வைரவரைப் பரிவார மூர்த்தியாகக் கொண்டு நாற்புறமும் சுற்று மதில்களும் மணிக்கூட்டுக் கோபுரம் , கோபுர வாயில் ஆகியவற்றுடனும் அமைக்கப்பெற்று இருந்தது. அத்துடன் பிள்ளையாருக்குத் தெற்குப் புறத்தில் வீரபத்திரர் ஆலயம் அமைக்கப்பெற்று தனியாக நிர்வகிக்கப்பட்டு, புறம்பான பூசைகள் நடைபெற்று வந்துள்ளது. வீரபத்திரர் ஆலயத்திற்கென தனியான மடப்பள்ளியும் , ஸ்ரீவரத விநாயகர் ஆலயத்திற்கென வடக்குப் புறத்தில் ஓர் மடப்பள்ளியும், மடப்பள்ளிப் பின்புறத்தில் ஓர் கிணறும் மகா மண்டபத்திற்கு வடக்கு புறத்தில் தீர்த்தக் கிணறும் அமைக்கப்பெற்று இருந்தன. 1942ம் ஆண்டு மூலஸ்தானத்திலிருந்த ஞானசித்தி விநாயகரை தென்மேற்கு மூலையில் சுற்றுக்கோவிலாகப் பிரதிட்டை செய்து, மூலஸ்தானத்திற்கு ஸ்ரீவரதவிநாயகர் பிரதிட்டை செய்யப்பட்டது. வீரபத்திரர் ஆலயமும் வரத விநாயகர் ஆலயமும் 1978ம் ஆண்டின் பின்னர் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. பின்னர் இவ்விரண்டு மடப்பள்ளிகளும் இடிக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக கோவிலின் உட்புறத்தில் தென் கிழக்கு மூலையில் ஆலயத்திற்குரிய மடப்பள்ளியும் அதனைத் தொடர்ந்து 1970களின் நடுப்பகுதியில் தெற்கே களஞ்சிய அறைகள் இரண்டும் வாகன சாலையும் அமைக்கப்பட்டன.

இவற்றுடன் உற்சவ மூர்த்திகளாக இரண்டு பிள்ளையார் (சின்னப்பிள்ளையார், பெரிய பிள்ளையார்) வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிகள் ஆகியன மகாமண்டபத்தின் வடக்குப் புறமாக வைக்கப்பட்டு அவற்றிற்கும் பூசைகள் நடைபெற்று வருகின்றது. மகாமண்டபத்தின் தெற்கு வாயிலூடாக அடியார்கள் வணங்கத்தக்கதாக இருக்கின்றது.

காலப் போக்கில் 1978ம் ஆண்டு நாகலிங்கம் சந்தான கோபாலர், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிகள் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு சுற்றுக் கோயில்கள் அமைக்கப்பெற்றன. ஸ்ரீ வரத விநாயகர் ஆலயத்தின் வடமேற்கில் பரிவார மூர்த்தியாக வீரபத்திரருக்கு சூலங்கள் மட்டுமே பிரதிட்டை செய்யப்பட்டிருந்தது. 1978ம் ஆண்டின்பின் ஸ்ரீவரத விநாயகர் ஆலயமும், வீரபத்திரர் ஆலயமும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. 1980களின் பிற்பகுதியில் வசந்த மண்டபம் கட்டப்பட்டது. அத்துடன் 1999ம் ஆண்டு சண்டேஸ்வரரிற்கும் கோயில் கட்டப்பட்டது. 2000ம் ஆண்டின் கும்பாபிஷேகத்திற்காக வடமேற்கு மூலையில் உள்ள வீரபத்திர சூலங்கள் சிவவீரபத்திர ஆலயத்திற்குள் கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது வீரபத்திரரின் சுற்றுக் கோயில் கட்டிடம் அகற்றப்பட்டுள்ளது.

## ஆலயத்தின் வெளிப்புற அமைப்பு


இவ் ஆலயத்தின் முற்புறமாக கோபுரத்திற்கு சிறிது தூரத்திற்கு அப்பால் நகர சபைக்குரிய வீதி இருந்து வந்துள்ளது. நகர சபை வீதிக்கு கிழக்குப் புறமாக பிராமண குடியிருப்புக்கள் இருந்து வந்துள்ளதாகவும் காலப் போக்கில் அப் பிராமண குடும்பங்கள் தங்கள் வீட்டு காணிகளை பரமு சாஸ்திரியாருக்கு விற்றதாகவும் அந்தக் காணிகளை பரமு சாஸ்திரியாரிடமிருந்து டாக்டர் சுப்பிரமணியம் அவர்கள் வாங்கி ஆலயத்திற்கு வேண்டிய நிலத்தினை ஒதுக்கி கொடுத்து விட்டு, அதற்கு அப்புறமாக நகரசபை வீதியை மாற்றி அமைக்க வழி செய்தார். அக் காலத்தில் வரத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் ஆலய கோபுரத்துக்கு முன்னால் ஓர் சிறு கொட்டகை அமைக்கப்பட்டு இருந்தது. கோயில் வீதிக்கு எல்லையாக பழைய மதில்கள் அமைக்கப்பட்டு இருந்ததற்கு அத்திவாரம் சான்றுபகரும் நகர சபை வீதிக்கு அப்பால் உள்ள காணிகளையும் டாக்டர் சுப்பிரமணியம் அவர்கள் ஆலயத்திற்கென வாங்கி விட்டார். அந்தக் காணிக்குள் கிழக்குப் புறமாக ஓர் நூல்நிலையமும் , அருகில் கோயில் பூசகருக்கென ஓர் வீடும் கட்டிக் கொடுத்தார். கோயில் பூசகருக்கென கட்டப்பட்ட வீட்டில் பூசகர் திருநாவுக்கரசர் வசித்து வந்தார். வே.திருநாவுக்கரசரும் அவர் தம்பி வே.சுந்தரமூர்த்தியும் கூட வாழ்ந்து வந்துள்ளார். தற்போது இக்கட்டடங்கள் பழுதாகி விட்டதால் அகற்றப்பட்டு விட்டன. இவ்விடத்தில் தற்போது ஸ்ரீவரத விநாயகர் கலை அரங்கு கட்டப்பட்டுள்ளது.

ஆலய கோபுர வாயிலுக்கு முன்னால் ஓர் பெரிய மண்டபம் கட்டப்பட வேண்டும் என்று விருப்பம் கொண்ட அமரர் அருணகிரிநாதர் அன்னப்பிள்ளையவர்கள் மண்டபத்துக்குரிய நான்கு தூண்களையும் அமைப்பதற்குரிய நிதியினை வழங்கி நான்கு தூண்கள் கட்டப்பட்டன. அதன் பின்னர் டாக்டர் க.சுப்பிரமணியம் அவர்கள் மிகுதி முழு மண்டப வேலைகளையும் செய்து முடித்தார். சிவவீரபத்திரர் ஆலயத்திற்கு ஓர் வெளிமண்டபம் காணப்படுகின்றது. வெளிவீதியின் வடமேற்கு மூலையில் வைரவர் கோயிலும், தென்கிழக்காக சக்திவேலாயுத சுவாமியும் (கனகர் கோயில்), வைரவரும் காணப்படுகின்றது. அத்துடன் இவ் வைரவருக்கு முன்பாக கிணறும் காணப்படுகின்றது.

இவ் ஆலயத்தின் தெற்கு வீதியை அண்மித்து பெரிய கேணி அமைந்து இருந்தது. இது ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்டதாக அறிகின்றோம். இதன் வடுக்கள் இன்றும் இவ்வீதியில் காணப்படுகின்றன.



ஸ்ரீ வரதவிநாயகர் ஆலய நிறைவுமணித் திருவிழாவின் போது எடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தினங்கள் - உற்சவங்கள்

## சதுர்த்தி

ஆரம்பத்தில் ஆவணிச் சதுர்த்தி மட்டுமே நடைபெற்றது. 1995ம் ஆண்டு நர்த்தன கணபதி எழுந்தருளி விக்கிரகம் கிடைக்கப்பட்ட பின்னர் மாதாந்த பூர்வபக்க மாதச் சதுர்த்தியும், ஆவணி சதுர்த்தியும் விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## தைப்பூசம்

1995ம் ஆண்டு, தைபூசத்தினத்தன்று நர்த்தன கணபதி விக்கிரக எழுந்தருளியினை செல்வரத்தினம் யோகச்செல்வம் அவர்கள் வழங்கியதிலிருந்து தைப்பூச தினத்தன்று பிள்ளையாருக்கும் நத்தன கணபதிக்கும் விசேட அபிஷேகம் இடம்பெற்று, வசந்த மண்டபப் பூசை நடைபெற்று நர்த்தன கணபதி சுவாமி வெளிவீதி வலம் வந்தருள்பாலிப்பார்.

## மாசி மாத சிவராத்திரி

எமது ஆலயத்தில் தொன்றுதொட்டு மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி தினத்தன்று விநாயகப் பெருமானுக்கும், சிவலிங்கத்திற்கும் நான்கு சாமப்பூஜைகள் நடைபெறுவது வழக்கம். முதலாம் சாமத்திற்கு பயற்றம் சாதமும் இரண்டாம் சாமத்திற்கு பாயாசமும் மூன்றாம் சாமத்திற்கு எள் சாதமும் நான்காம் சாமத்திற்குப் புளிச்சாதமும் நைவேத்தியமாகப் படைக்கப்பட்டு அத்துடன் அன்றைய நாள் முழுவதும் சிவராத்திரி புராணம் படிக்கப்படும்.

## பங்குனித்திங்கள் (குளிர்த்தி)

பங்குனிமாதத்தில் வருகின்ற இறுதித்திங்களன்று உமை பத்திரகாளி சமேத வீரபத்திரருக்கு விசேட குளிர்த்தி அபிஷேகம் நடைபெற்று அரிசி, வெங்காயம், பச்சைமிளகாய், தேசிக்காய், தேங்காய்ப்பால் உட்பட ஏனைய கஞ்சி ஆக்கற் பொருட்களை இட்டு ஆக்கிய கஞ்சியைப் படைத்து அடியார்களுக்கு வழங்கப்படும்.

## சித்திராப் பௌர்ணமி

1950ம் ஆண்டு தொடக்கம் இப்பௌர்ணமி பூசை கொண்டாடப்படுகின்றது. இத் தினத்தில் சித்திரபுத்திரருக்கு கும்பம் வைத்து எழுத்தாணியும், ஓலையும் நிறைநாளியில் வைத்து சித்திரபுத்திரர் கதை படிக்கப்பட்டு வருகின்றது. அன்றைய தினம் சக்கரைக்கஞ்சி காய்ச்சி படைப்பது வழக்கம். சித்திரபுத்திர பெருமானுக்கு வீட்டிலுள்ள பொருட்களான நெல், அரிசி, தேங்காய், புளி, ஒடியல், இளநீர் ஆகியவற்றை கும்பத்திற்கு முன்னால் வெள்ளை விரித்து படைப்பது வழக்கம்.

## தைப்பொங்கல் , சித்திரை வருடப்பிறப்பு

தை மாதப்பிறப்பிலன்றும் சித்திரை மாதப்பிறப்பிலன்றும் (வருடப்பிறப்பன்று) வளர்ந்து கட்டி பொங்கி படைப்பது வழக்கம். சித்திரை வருடப் பிறப்பன்று குருக்களினால் கைவிசேடம் வழங்கப்பட்டு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவர் வேள்வி

ஆனி மாதத்தில் இந்த வேள்வி நடைபெறும். அன்றையதினம் வளர்ந்து கட்டப்பட்டு பழவகைகள், வெற்றிலை, பாக்கு முதலியன வெள்ளைச் சீலையில் பரப்பப்பட்டும் பொது மக்கள் பொங்கல் செய்து இவற்றையெல்லாம் படைத்து விசேடபூசை மேற்கொண்டும் கொண்டாடுவது வழக்கம். ஆரம்ப காலத்தில் கலையாடி வழி வெட்டப்பட்டது.

## ஆடித்திருவோணம்

க.சேதுபதி குடும்பத்தினரால் ஆலயத்திற்குச் செய்து வைக்கப்பட்ட தங்கவேலாயுதத்திற்கும், வள்ளிதெய்வானை சமேத முருகப் பெருமானிற்கும், விநாயகப் பெருமானிற்கும் கதிர்காமத் தீர்த்தத்தன்று அதாவது இவ் ஆடித்திருவோணத்தில் விசேட அபிஷேகமும், பூஜையும் இடம்பெறும்.

## ஆவணி மூலம்

அன்றைய தினம் இனிப்பு கலந்த உழுத்தம்பிட்டு அவித்துப்படையல் செய்யப்படும்.

## நவராத்திரி

ஆரம்பத்தில் வீரபத்திரர் ஆலயத்தில் தனியாகவும் ஸ்ரீ வரத விநாயகர் ஆலயத்தில் தனியாகவும் நவராத்திரி பூசை நடைபெற்று வந்தது. காலப்போக்கில் வீரபத்திரர் கோயிலும் வரத விநாயகர் கோயிலும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்ததன் பின்னர் வீரபத்திரர் ஆலயத்திலேயே நவராத்திரி விழா கொண்டாடப்படுகின்றது. இத்தினம் வீரபத்திரர் ஆலயத்தில் கும்பம் வைத்து பூசை ஆரம்பிக்கப்படும். இந்நாட்களில் மாலையில் விஷேட பூசை நடைபெறும். இதற்கென உபயகாரர்களும் காணப்படுகின்றனர். இறுதிநாள் விஜயதசமி பூசையில் சிறார்களுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வு இவ் ஆலயத்தில் நடைபெறும். அத்துடன் கும்பச் சரிவுக் கிரியையும் கன்னிவாழை வெட்டலும் நடைபெறும்.

பல வருடங்களின் பின்னர் 1994ம் ஆண்டிலிருந்து எம்பெருமாட்டி (எழுந்தருளி) கன்னி வாழை வெட்டுதல் கிரியைக்காக வெளி வீதியில் காட்சி கொடுத்து இதன் பின்னர் கிராம் தரிசனமாக எம் ஊர் மக்களின் வீடுகள் தோறும் காட்சி கொடுத்தருள்வாள். பின்னர் ஆலயம் வந்தடைந்ததும் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும்.

## தீபாவளி

இத் தினத்தன்று பிள்ளையார் மற்றும் சுற்று சுவாமிகளுக்கு எண்ணெய் சாத்தி புது உடுப்பு சாத்தி தோசை படைப்பது வழக்கம். தற்போது அன்றைய தினம் நல்லெண்ணெய் சாத்தி புதுப் பட்டுக்கள் சாத்தி சாதாரண நைவேத்தியம் படைக்கப்படுகின்றது. இத்தினத்தன்று 1987ம் ஆண்டிலிருந்து திருவிளக்குப்பூசையும் நடைபெறுகின்றது.

## கந்தசஷ்டி

சுற்றுக்கோயிலில் முருகன் பிரதிட்டை செய்யப்பட்டதன் பின்னர் கந்தசஷ்டியன்று கும்பம் வைத்து ஆறு நாட்களுக்கும் உபயகாரர்கள் நியமிக்கப்பட்டு ஒவ்வொருநாளும் விசேட பூஜை நடைபெறுகின்றது. சஷ்டியில் அன்று கும்பச்சரிவுக் கிரியையும் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கார்த்திகை உற்சவம்

1981ம் ஆண்டு திரு.க.சிவசுப்பிரமணியம் அவர்கள் மயில் வாகனம் வழங்கினார். இவ்வாண்டிலிருந்து கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை தினத்தன்று பிள்ளையாருக்கும் முருகப்பெருமானுக்கும் அபிஷேகம் இடம்பெற்று விசேட பூசையைத் தொடர்ந்து மயிலேறும் பெருமான் வெளிவீதி வலம்வந்து அருள்பாலிப்பார்.

## காசிகாண்டம்

இது அநேகமாக கார்த்திகை மாதம் விநாயகர் விரதம் ஆரம்பிப்பதற்கு முன்னரே காப்புச் சொல்லப்பட்டு விநாயகர் விரத காலங்களுக்குள்ளேயே காசிகாண்டப் படனம் முடிவுற்று அன்னதானம் இடம்பெறுவது வழக்கம். இந்த காசிகாண்டப் பாட்டுக்கள் தமிழ் சொற்கோப்பு கடினமானது. ஆயினும் அக் காலத்தில் வாழ்ந்த பெரியோர்கள் பாட்டுக்களுக்கு புத்தகம் பார்க்காமலே பயன் சொல்லக்கூடிய அறிவு பெற்றிருந்தார்கள். இவர்கள் பகலில் தங்கள் வேலை முடித்து பின்னர் இரவில் குத்துவிளக்கின் உதவியுடன் படிப்பார்கள். இது யாழ்மாவட்டத்திலேயே ஒரு சில் கோவில்களிலேயே மட்டுமே படிக்கப்பட்டு வருகின்றது.

## விநாயகர்விரதம்

திருக்கார்த்திகையைத் தொடர்ந்து றோகினி நட்சத்திரத்தில் கும்பம் வைத்து காப்புக் கட்டுவதுடன் ஆரம்பாகும். ஒரு நாள் பிள்ளையார் கதை என்றால்அடுத்தநாள் பிள்ளையார் புராணம் என 20 நாட்களும் தொடர்ந்து பிள்ளையார் கதை, பிள்ளையார் புராணம் என இரண்டும் மாறி மாறிப் படிக்கப்படுகின்றது. விநாயகர் சஷ்டியில் அன்று பிள்ளையார் கதை, பிள்ளையார் புராணம், உரையுடன் அடுத்துபிள்ளையார் கதை , படிக்கப்படும். மாலையில் வசந்தமண்டப பூசை நடைபெற்றுக் கஜமுகாசூர சங்காரம் நடைபெறும். பிள்ளையார் பூதவாகனத்தில் எழுந்தருளுவார். கஜமுகசங்காரம் முடிந்ததன் பின்னர் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று மூஷிக வாகனத்தில் பிள்ளையார் வெளிவீதி எழுந்தருளுவார்.

## மார்கழி திருவெம்பாவை

ஏறத்தாழ 1930 ஆண்டிற்கு முன்னிருந்து கிழமையில் இரண்டு நாளுக்கு ஒரு முறை சங்கு ஊதும் மாவிட்டபுரம் பண்டாரங்கள் திருவெம்பாவை பாடிக்கொண்டும் ஒரு தெருவும் தப்பாமல் சங்கு ஊதிக்கொண்டும் வருவார்கள். அவர்களுக்கு ஊர் மக்கள் உணவுப் பொருட்களைக் கொடுப்பார்கள். சிலர் அவர்களுக்கு உணவு கொடுத்து உதவுவார்கள். பின்னர் பண்டாரங்கள் சங்கு ஊதாமல் விட்டு விட்டார்கள். அதனைத் தொடர்ந்து எங்கள் ஊர் பிள்ளைகளான இளைஞர்கள் அதிகாலையில் சங்கு ஊதி திருவெம்பாவையை தெருவீதிகள் தோறும் பாடுவார்கள். தற்போதும் அத் தொண்டினை இளைஞர்கள் தொடர்கின்றார்கள். இத்திருவெம்பா வையின் இறுதிநாள் திருவாதிரை உற்சவ அபிஷேகம் இடம்பெற்று விநாயகர் வெளிவீதி வலம் வந்து அருள்பாலிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசக முற்றோதல்

2000ம் ஆண்டு கும்பாபிஷேகத்தின் பின்னர் மார்கழி மாதத்தில் ஏதாவது ஓர் நன்னாளில் திருவாசக முற்றோதல் வைபவமும் நடைபெற்று வருகின்றது.

## கந்தப்புராணம்

கோயில் ஆரம்ப காலம் தொடக்கம் கந்தப்புராணம் படிக்கப்பட்டு வந்ததாக அறிகின்றோம். ஆரம்ப காலத்தில் கார்த்திகை மாதம் காப்புச் சொல்லப்பட்டு தை மாதத்தில் ஓர் நல்ல நாளில் வள்ளிதிருமணம் படிக்கப்பட்டு மறுநாள் அன்னதானமும் அடுத்த நாள் நிறைவுமணி திருவிழாவும் நடைபெற்று வந்தது. சுப்பிரமணியம் டாக்டரினால் கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட பிள்ளையார், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி யானை வாகனத்திலும் , குதிரை வாகனத்திலும் வெளியுலா வந்து திருவூஞ்சலில் வைத்து திருவூஞ்சல் பாடி நிறைவு செய்து அன்னதானமும் வழங்குவது வழக்கமாகும். இந்த அன்னதான நிகழ்வு மகா மண்டபத்தின் தெற்கு வாயிலில் பந்தல் போடப்பட்டு (பிள்ளையார், சுப்பிரமணிய சுவாமிகள் அதன் வாயில் புறத்தில் இருந்த காரணத்தினால்) வளர்ந்து கட்டுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு பூசைகள் நடைபெற்று அரிசிப் படையல்கள் செய்யப்பட்டு ( அப் படையல் சன்யாசிப் படையல் என்பர்) மேற்கு வீதியில் வளர்ந்து கட்டி பொங்கல் செய்து தெற்கு வீதியிலுள்ள பந்தலிலும் மூலமூர்த்திக்குப் படைத்தும் பூசை செய்வர்.

ஆரம்ப காலத்தில் கந்தப்புராணத்திற்குரிய விநாயகர் வளந்தும் அன்னதானத்திற்குரிய அரிசி சாமான்களுடன் உபயத்தினர் வெள்ளை நிலபாவாடையின் மேல் நடந்து வந்ததாகவும் பின் ஊரில் உள்ளவர்கள் அன்னதானத்திற்குரிய பொருட்களைக் கொண்டு வந்து வெளியே போடப்பட்ட பந்தலில் இறக்கிவைப்பர்.

## மணவாளக்கோல விழா

மகாகும்பாபிஷேகம் நடைபெற்ற அதே மாதத்திலேயே நட்சத்திரத்திலேயே மணவாளக்கோல விழா நடைபெறுவது வழக்கம். ஒவ்வொரு மகாகுப்பாபிஷேகத்தையும் தொடர்ந்து மணவாளக்கோல விழா மாதமும் நட்சத்திரமும் வேறுபடும். 1978ம் ஆண்டு நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்திற்கு பின்னர் இவ்விழாவிற்கு ஒன்பது தினங்கள் முன்பதாக அபிஷேகம் ஆரம்பித்து விநாயகப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் அபிஷேகம் நடைபெற்று வசந்தமண்டப பூசை நடைபெற்று சுவாமி உள் வீதியுலா வந்தருள்பாலிப்பார்.


10ம் நாள் 1008 சங்காபிஷேகம் நடைபெற்று மதியம் மகேஸ்வர பூசை நடைபெறும். இரவு பிரபல தவில் நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரியும், இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்று அதிகாலை விநாயகப் பெருமான், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானும் இரண்டு அறை முத்துச்சப்பறத்தில் எழுந்தருளி வெளிவீதியுலா வந்து அருள்பாலிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தை தொடர்ந்து நடைபெற்ற மணவாளக்கோல விழாக்களில் வழமைபோல ஒன்பது நாள் உற்சவம் நடைபெறுவது வழக்கம். பத்தாம் நாள் 1008 சங்காபிஷேகத்துடன் மகேஸ்வர பூசை நடைபெற்று இரவு வசந்தமண்டப பூசையுடன் விநாயகப்பெருமானும், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானும், உமை வீரபத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமானும் மூன்று அறை முத்துச்சப்பறத்தில் வெளி வீதியுலாவந்து அருள்பாலிப்பார்.

மணவாளக் கோல விழாவின் போது சுவாமி வீதியுலா வரும் போது ஈசான மூலையில் சுவாமிகளுக்கு பறந்து வந்த பாவையினால் மாலை அணிவிப்பது விசேட நிகழ்ச்சியாக பலவருடங்களாக நடைபெறுகின்றது. 2000ம் ஆண்டுக்கு பின் நடைபெற்ற சில மணவாளக் கோல விழாக்களில் சுவாமி வீதியுலாவைத் தொடர்ந்து பிரபல வித்துவான்களின் தவில் நாதஸ்வரக் கச்சேரி, இசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தது. 2006ம் ஆண்டளவிலிருந்து மணவாளக்கோல விழாவின் முதல் ஒன்பது நாட்களும் காலை விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிபாலன மூர்த்திகளுக்கும் அபிஷேகம் இடம்பெற்று மாலைநேர வசந்த மண்டபப் பூசையை தொடர்ந்து விநாயகப்பெருமான் வெளிவீதியுலா வந்து அருள் பாலிப்பார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்பளைப் பெரியவளவு ஸ்ரீ வரத விநாயகப்பெருமான் திருவூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

**காப்பு**

திருவளர்சீர்த் தும்பளையாம் பதிமேல் மன்னித்
திகழ்பெரிய வளவெனுநற் தலத்தின் கண்ணே
மருவியுறு திருத்தளிவாழ் பெருமை சேர்ந்த
மதகயமா முகவரத விநாய கர்க்குக்
கருதுறுமோர் ஊஞ்சலினி தருளாற் பாடக்
கடுக்கைமுடிப் பரமசிவன் றனய னாகுங்
சுருதிமுதற் பிரணவமே வடிவ தாமத்
தும்பிமுகன் கழலிணையே காப்ப தாமே.

**நூல்**

பேர்பூத்த பொன்னொளிகால் மண்ட பத்தே
பிறங்குமணி வயிரநிரை விட்ட மாக
ஏர்பூத்த நான்மறையே கயிற தாக
வேற்றவுப நிடதமதே பலகை யாக
நேர்பூத்த நவமணிப் பொற்றவிசின் மீதே
நிகழ்வரிசை பற்பலவும் பாங்கர் மேவ
சீர்பூத்த தும்பளையாம் பதிமேல் மேவித்
திகழ்வரத விநாயகரே யாடீ ரூஞ்சல்.

மதிமிளிர் செஞ்சடை யீசன் வரத்தினாலே
வானுறையுஞ் சுரர்தமை எந்நாளும் வாட்டி
பதியெனவே பலகாலம் அரசு செய்த
பதகனெனுங் கயமுக நாமவுணன் தன்னை
துதிபெறுசீர்த் தந்தத்தால் மாளச் செய்தே
தோன்றிய மூஷிகத்தேறி அருள்செய் நாத!
திதிபெறுநற் தும்பளையாம் பதிமேல் மேவித்
திகழ்வரத விநாயகரேயாடீ ரூஞ்சல்.

வரமிகு விஞ்சைய ரினிய கீதம்பாட
மறையவர் நான்மறை புகல்வான் விரும்பிக்கூடச்
சுரர்புகழ் நல்லரம்பை யர்கள் நடனமாடத்
துகழகலும் பூதர்பலர் சூழ்ந்து நீடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரமிசை பூநிரையாதி தாங்கி மாடே
கழல்போற்று மன்பர்பவ மஞ்சி யோடத்
திரமுறுசீர்த் தும்பளையாம் பதிமேல் மேவித்
திகழ்வரத விநாயகரே யாடீ ரூஞ்சல்.

அருணனொடு சோமனொளிர் கவிகை யோங்க
அமரர்நறுந் தேன்மிளிர் பூமாரி வீங்க
கருது சுராதிபன்றான் களாசி வாங்கக்
கடலிறைவன் பனிநீர்கொள் சிவிறி தாங்க
மருவடியார் சிந்தையினி லன்பு தேங்க
மருவுறு பொய்ச்சமய விருளஞ்சி நீங்கத்
திருவளரும் தும்பளையாம் பதிமேல் மேவித்
திகழ்வரத விநாயகரே யாடீ ரூஞ்சல்.

காலனைமுன் உதைத்த பரனசுர ரான
கசடருறை புரமூன்று மெரிப்ப தற்கு
ஞாலமெனு மிரத மதிலேறுங் காலை
நகரவிடா ததனச்சு முரியச் செய்த
பாலஇப வைங்கரரே யன்பர் வேண்டும்
பலவர முமுதவி யருள்விக் கினேச
சீலருறை தும்பளையாம் பதிமேல் மேவித்
திகழ்வரத விநாயகரே யாடீ ரூஞ்சல்.

புகழுறு கைலாசகிரி மேவுந் தேவி
புகன்ற கொடுஞ்சாப வசனத்தினாலே
இகழவரு குருடாகி யாலம் பொந்தில்
இருந்துதவ மியற்றியுள கண்ணன் போற்ற
துகழறவே அவர்க்கந்தச் சாபம் நீக்கிச்
சுயவுருவங் கொளவருள் செய்பகவ செல்வந்
திகழுறுநற் தும்பளையாம் பதிமேல் மேவித்
திகழ்வரத விநாயகரே யாடீ ரூஞ்சல்.

பேராரு மரீசிமுனி மான தத்தே
பெருந்தவஞ் செய்பெற்றி யினாற்பெற்ற செல்வி
ஏராரும் வல்லபையாம் தேவி யாற்றும்
எண்ணரிய தவங்கண்டே காட்சி நல்கி
நேராகத் திருமணஞ் செய்திடப்பால் வைத்தே
நேயர்விழை வரமெவையு முதவு மீசன்
சீராரும் தும்பளையாம் பதிமேல் மேவித்
திகழ்வரத விநாயகரே யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமருவு வியாசமுனி யன்பாற் போற்றித்
தக்கதவ முன்ஆற்றுங் காலை யன்னோன்
கவலையெ லாம்நீக்கி யருட்காட்சி நல்கி
கருது புராணங்களை நீகூறு முன்னர்ப்
பவமகல வெமைத்துதி யாதத னாலுற்ற
பாவமெலா நீக்கின மென்றருள் செய்நாதா!
சிவமருவு தும்பளை யாம் பதிமேல் மேவித்
திகழ்வரத விநாயகரே யாடீ ரூஞ்சல்.

வயமிகு விந்திரன் வேண்ட வகத்தியன்பால்
வந்தகா விரியளித் திராடீ ரூஞ்சல்
நயமருவு தேவாரப் பதிகம் யாவுந்
நண்ணுமிடந் தெரிந்தவரே யாடீ ரூஞ்சல்
சுயமருவு சித்திபுத்தி யென்னு நாமத்
தோகையர்க்கு நாயகரே யாடீ ரூஞ்சல்
செயமருவு தும்பளையாம் பதிமேல் மேவித்
திகழ்வரத விநாயகரே யாடீ ரூஞ்சல்.

தந்திமுகத் தைங்கரரே யாடீ ரூஞ்சல்
தாங்குறு பாசாங் குசத்தீரா டீரூஞ்சல்
இந்துமிளிர் செஞ்சடை யீராடீ ரூஞ்சல்
ஈண்டுசர்ப் பாபரணத்தீ ராடீ ரூஞ்சல்
வந்திப்போ ரிடர்களை வீராடீ ரூஞ்சல்
மாயவனா ருயர்மரு கீராடீ ரூஞ்சல்
செந்திருவார் தும்பளையாம் பதிமேல் மேவித்
திகழ்வரத விநாயகரே யாடீ ரூஞ்சல்.

**வாழி**

அருமறை யாகமமா திநூல்கள் வாழி
அந்தணர்முன் நால்வருண மக்கள் வாழி
பெருமையுள பூதிமணி சிறந்து வாழி
பேணிவழி படுமடியா ரெவரும் வாழி
கருதுறு நல்ஆநிரை கள்மல்கி வாழி
கார்வாழி பெரிய வளவதுவும் வாழி
திருமலி தும்பளை யென்னும்கிரா மம்வாழி
திகழ்வரத விநாயகரின் அருளும் வாழி.

திருச்சிற்றம்பலம்.

ஆக்கியோன் :
புலோலி கிழக்கு
பிரம்மஸ்ரீ ம.முத்துச்சுவாமிக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்பளைப் பெரியவளவு மயிலேறும் பெருமானார்
# திருவூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

## காப்பு

பூமேவுந் தும்பளை யினோர்பா லான
புகழ்பெரிய வளவெனுநற் றலத்தின் கண்ணே
தேமேவு முமையம்மை பால னான
தெய்விகமார் கூர்வடிவே லண்ணல் மீது
பாமேவு மூஞ்சலெனும் பதிகம் பாடப்
பக்தியொடு பரவடியார்க் கருள்பா லிக்கும்
மாமேவு யானைமுக முடைய முன்னோன்
மலரடித் தாமரை யிணைகள் காப்பதாமே.

## நூல்

சதுர்மறையாஞ் சால்புடைய தம்ப நாட்டி
சாற்றுமுப நிடதமெனும் விட்ட மோட்டி
மதுரமுறு மாகமமாங் கயிறு பூட்டி
மாண்பமைந்த குடிலை யெனும்பலகை கூட்டி
கதிதருநற் பேறமைந்தவூஞ்சல் மீதே
கருணையுட னமர்ந்தடியார் வினைக ணீங்க
மதிதவழும் பொழில்செறி தும்பளையில் மேவும்
மயிலேறும் பெருமானே யாடீ ரூஞ்சல்.

திங்களொடு திவாகரனுங் கவிதை தாங்கச்
சீரிமா ருதனால வட்டம் வாங்க
மாங்கலமா மறைமுனிவர் கீதந்தேங்க
மருவுமர கரவோசை மலிந்தே யோங்கச்
சங்கணியுந் திருமாலு மயனும் போற்றிச்
சாந்தநிலை தழுவிநின்று வடந்தொட் டாட்ட
மங்குல்வளத் தும்பளையாம் பதியின்மேவும்
மயிலேறும் பெருமாளே யாடீ ரூஞ்சல்.

ஓராறு கருணைதிகழ் முகங்க ளாட
ஒளியமை முந்நான்கு விழியருளு மாட
ஈராறு கரதலங் களியல்பி னாட
எழினாத மணிச்சிலம்பு கலீரென் றாட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராறு பாயுமனத் தொண்டர் நாட
நாரணனு னான்முகனும் பணியில் நீட
வாராரும் பொழிலுறு தும்பளையில் மேவும்
மயிலேறும் பெருமாளே யாடீ ரூஞ்சல்.

விண்ணவர்தஞ் சிறைவிடுத் தீராடீ ரூஞ்சல்
வேதாவைச் சிறையமைத் தீராடீ ரூஞ்சல்
மண்ணவர்தம் பணியுடை யீருாடீ ரூஞ்சல்
மன்னுமணி பணியுடை யீராடீ ரூஞ்சல்
தண்ணருள்சேர் திருமுகத் தீராடீ ரூஞ்சல்
தாரகனை வேரறுத் தீராடீ ரூஞ்சல்
வண்ணநிறை தும்பளையாம் பதியின் மேவும்
மயிலேறும் பெருமாளே யாடீ ரூஞ்சல்.

உம்பர்திருக் கோட்டினரே யாடீ ரூஞ்சல்
உயர்திருச் செங்கோட்டி னரேயாடீ ரூஞ்சல்
செம்பதுமை திருமருகா வாடீ ரூஞ்சல்
சிவனருளுந் திருக்குமரா வாடீ ரூஞ்சல்
அம்பிகையாள் பாலகரே யாடீ ரூஞ்சல்
அரிமகளார் நாயகரே யாடீ ரூஞ்சல்
வம்பலர்பூந் தும்பளையாம் பதியின் மேவும்
மயிலேறும் பெருமாளே யாடீ ரூஞ்சல்.

வண்டுலவும் கடம்பினரே யாடீ ரூஞ்சல்
மலமறுப்பார் மகனாரே யாடீ ரூஞ்சல்
அண்டரிறைக் கருளினரே யாடீ ரூஞ்சல்
அடியருளத் தமர்வீரே யாடீ ரூஞ்சல்
தெண்டிரையிற் கொக்கரித் தீராடீ ரூஞ்சல்
தேக்குதுடி மேற்கொண் டீராடி ரூஞ்சல்
வண்டமிழார் தும்பளையாம் பதியின் மேவும்
மயிலேறும் பெருமாளே யாடீ ரூஞ்சல்.

எண்ணோங்கு கரதலத்தீ ராடீ ரூஞ்சல்
எழிலோங்கு தாரகத் தீராடீ ரூஞ்சல்
கண்ணோங்கு மணியுடை யீராடீ ரூஞ்சல்
கரத்தோங்கு மணியுடை யீராடீ ரூஞ்சல்
விண்ணோர்க்கும் வித்தகரே யாடீ ரூஞ்சல்
வேலேந்தும் வித்தகரே யாடீ ரூஞ்சல்
மண்ணோங்கு தும்பளையாம் பதியின் மேவும்
மயிலேறும் பெருமாளே யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவேரகப் பதியீ ராடீ ரூஞ்சல்
தினம்பணியு மடியவரைப் பிறவி யென்னும்
கருவேரற அருளீ ராடீ ரூஞ்சல்
கந்தமலை வாழ்வுகந் தீராடீ ரூஞ்சல்
அருளார் ஆறக்கரத் தீராடீ ரூஞ்சல்
அயிலாரு மக்கரத் தீராடீ ரூஞ்சல்
மருளகற்றும் தும்பளையாம் பதியின் மேவும்
மயிலேறும் பெருமாளே யாடீ ரூஞ்சல்.

துய்யபர வீட்டினரே யாடீ ரூஞ்சல்
சூரனுயிர் வீட்டினரே யாடீ ரூஞ்சல்
கையமரு மயிலினரே யாடீ ரூஞ்சல்
கவினுமணி மயிலினரே யாடீ ரூஞ்சல்
செய்யுறுபூஞ் செச்சையரே யாடீ ரூஞ்சல்
தெய்விகமார் செச்சையரே யாடீ ரூஞ்சல்
துய்யபெரு தும்பளையாம் பதியின் மேவும்
தூயவரே பெருமாளே யாடீ ரூஞ்சல்.

திருவோங்கு மறையுண ரந்தணர்கள் வாழி
தேவருட னானினமும் முகிலும் வாழி
உருவோங்கு மன்னரொடு பின்னோர் வாழி
உயர்ந்திடு செந்தமிழ் மறைகள் நீடுவாழி
தருவோங்கு மைந்தெழுத்தும் மல்கி வாழி
தண்ணிழல்சூழ் பெரிய வளவதுவும் வாழி
மருவோங்கு தும்பளையாம் பதியும் வாழி
மயிலேறும் பெருமானா ரருளும் வாழி.

## எச்சரீக்கை

ஆதிசிவன் புத்திரரே யீசா எச்சரீக்கை
ஆனைமுகத் தைங்கரரே நாதா எச்சரீக்கை
பாதிமதி சூடும்முடிப் பரமா எச்சரீக்கை
பக்தர்களுக் கருள்சுரக்கும் பரமா எச்சரீக்கை
இந்திரனுக் கருள்புரியு மீசா எச்சரீக்கை
ஈறுமுகு வேலவரின் அண்ணா எச்சரீக்கை
ஆறுமுக வேலவரின் அண்ணா எச்சரீக்கை
அகத்தியருக் கிரங்கியருள் ஐயா எச்சரீக்கை
பெரியவளவுத் தனிவாழ் பெம்மான் எச்சரீக்கை
பேணுறுவோ ரிடர்களையும் பிதாவே எச்சரீக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசிவன் நுதலில்வரு அமலா எச்சரீக்கை
ஆறுமுக மானதிரு அழகா எச்சரீக்கை
சோதிவடி வேல்தரித்த சுடரே எச்சரீக்கை
சுரர்கள்துயர் துடைக்கவந்த தூயா எச்சரீக்கை
கங்கை தனிலேதவழ்ந் தகழலா எச்சரீக்கை
கார்த்திகைப் பெண்காக் கவருகந்தா எச்சரீக்கை
மங்கை உமையாள் மகிழ்ந்தமழலாய் எச்சரீக்கை
மாதவ முனிக்கருள்செய் மணியே எச்சரீக்கை
மாயகிர வுஞ்சமதை மாய்த்தாய் எச்சரீக்கை
மாவலிகொள் தாரகனை வதைத்தாய் எச்சரீக்கை
சீயமுகனை யழித்த சிறுவா எச்சரீக்கை
சிந்துநிகர் தானவரைச் சிதைத்தாய் எச்சரீக்கை.

ஐங்கரமார் தற்பரரே யாதீ பராக்கு
ஐம்முகனார் புத்திரரே ஐயா பராக்கு
கயமுகனா மவுணனை முற்காய்ந்தாய் பராக்கு
பிரணவநல் வடிதுவவாம் பெருமா பராக்கு
வாமனனாம் மாயவனின் மருகா பராக்கு
வல்லபைதன் நாயகரே வரதா பராக்கு
வியாசமுனிக் கருள்புரியும் விமலா பராக்கு
விகடநட மாடிடு நல்வீரா பராக்கு
மூஷிக வாகனத்தில் வருமேலோய் பராக்கு
முந்துமதி நிறமருவு முதலே பராக்கு.

வேதன்முடி மேலடி மிதித்தாய் பராக்கு
வீடருளும் தற்பரனே விமலா பராக்கு
சோதிவடி வேல்கொள் கரத்தூயா பராக்கு
சூரனை யடக்குமொரு துணைவா பராக்கு
பச்சைமயில் மீதில்வரு பரனே பராக்கு
பாவைதெய் வயானைமகிழ் பதியே பராக்கு
எச்சகமும் ஆட்சிபுரி இறைவா பராக்கு
எங்கள்குறை தீர்க்கமனம் இசைவாய் பராக்கு.

## லாலி

சர்வசன ரக்ஷகரே லாலி லாலி - இடர்
தவிர்த்தருளு மீசுரரே லாலி லாலி
கர்வமுதற் றவிர்த்தருள்வீர் லாலி லாலி - நல்ல
கரிவதன முன்னவரே லாலி லாலி
அங்குச பாசத்தினரே லாலி லாலி - எல்லா
அன்பர்க்கு மருள்புரிவீர் லாலி லாலி
சங்கரனார் புத்திரரே லாலி லாலி
தமியனிடர் தீர்த்தருள்வீர் லாலி லாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனார் நுதல்விழியீர் லாலி லாலி - இடர்
தவிர்த்தருளும் பாலகரே லாலி லாலி
கங்கைதனி லேவளர்ந்தீர் லாலி லாலி - எமை
காக்கவரும் ஈசுரரே லாலி லாலி
அங்கைக்குலி சத்தினரே லாலி லாலி - எல்லா
அன்பர்க்கும் அருள்புரிவீர் லாலி லாலி
மங்கையுமை புத்திரரே லாலி லாலி
மயிலேறும் பெருமானே லாலி லாலி.

## மங்களம்

பக்தர்தொழும் பாலருக்கும் மங்களம் - வேண்டும்
பலவரங்கள் ஈபவர்க்கு மங்களம்
சித்திபுத்தி விநாயகர்க்கு மங்களம் - பர
சிவனுதவு பாலருக்கு மங்களம்
மத்தகக்கரி யானவர்க்கு மங்களம் - பல
வானவர்க்கு மேலவர்க்கு மங்களம்
உத்தம தயாநிதிக்கு மங்களம் - உயர்
ஒப்பில்லா விநாயகர்க்கு மங்களம்.

கங்கைதரு பாலகர்க்கு மங்களம் தூய
கானவள்ளி வேலவர்க்கு மங்களம்
செங்கைவடி வேலவர்க்கு மங்களம் - உயர்
தெய்வயானை மணாளருக்கு மங்களம்
செங்கண்மால் மருகருக்கு மங்களம் - மிகு
தேவர்துயர் தீர்ப்பவர்க்கு மங்களம்
மங்கையுமை நேசருக்கு மங்களம் - தோசை
மயிலேறும் பெருமானுக்கு மங்களம்
மங்களம் ! மங்களம் !! மங்களம் !!!

**சுபமஸ்து**

ஊஞ்சல் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

ஆக்கியோன் :
புலோலி கிழக்கு
பிரம்மஸ்ரீ ம. முத்துச்சுவாமிக் குருக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்பளை நகர் பெரியவளவு
# ஸ்ரீ உமைபத்திரகாளி சமேத சிவவீரபத்திரசுவாமி
# திருவூஞ்சல்

## காப்பு

சீர்மேவு வடமராட்சிப் பதினோர் பால்
சிறந்திலங்கு தும்பைநகரதனைச் சேர்ந்த
பேர்மேவு பெரியவளவதனில் வந்து
பெட்புடனே யருள்சுரக்கும் பெரியமூர்த்தி
ஏர்மேவு பத்திரையாள் சமேதரான
இறை வீரபத்திரர்மேல் ஊஞ்சல் பாட
கார்மேவு விகடதட விக்னராசக்
கணபதி தன் சரணமலர் காப்பதாமே.

தேடரிய சதுர்மறை தூனாக நாட்டி
சிவாகமங்கள் நாலேழும் கோலய்க்காட்டி
நாடரிய வாறங்கம் கயிறாய்ப் பூட்டி
நலந்திகழும் பிரணவப் பொற்பீடத்தேற்றி
பாடலஞ்சேர் அரம்பையர்கள் மலர்கள்தூவப்
பழவடியார் புகழ்பாடிக் கூடிப் போற்ற
ஆடகஞ் சேர் தும்பைநகர் அதனில் மேய
அருள் வீரபத்திரரே யாடீரூஞ்சல்.

வில்வமொடு நெல்லிநிம்பம் விளாத்தி புன்னை
மேன்மை செறி நொச்சி கரவீரமான
பல்வகை சேர் தருநிரைகள் பலித்தேயோங்கும்
பாங்கான தும்பைநகர் அதனில் வந்தே
அல்லலறுத்தடியாரை ஆளவென்று
அழகொழுகு பத்திரையாள் பாங்கதாக
செல்வமலி பெரியவளவதனில் மேய
சிவவீரபத்திரரே யாடீரூஞ்சல்.

பண்டொரு நாள் அரனவிப் பாகத்தை நீக்கி
பாவியாம் தக்கன் செய்திட்ட வேள்வி
கண்டிருந்த அமரர்குழாங் கலங்கி யோட
கறைக் கண்டன் ஆணையினாற் கதத்தோடுற்றே
மண்டு பெரு யாகத்தை துகள தாக்கி
மாபாவி சினுவிதிதன் தலையை மாற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர் பணிந்தேத்திடந் தும்பளையின் மேய
சிவ வீரபத்திரரே யாடீரூஞ்சல்.

ஆடரவக்கச் சார்த்தீர் ஆடீரூஞ்சல்
அம்புவில் வாள் தரித்தவரே யாடீரூஞ்சல்
பாடலஞ்சேர் பத்திரையாள் பாங்கதாக
பலகோடிகாளி கூட்டங்களோடே
கேடு புரி தக்கன பிசார வேள்வி
கெடுத்திட்ட உக்கிரரேயாடீரூஞ்சல்
தேடு புகழ்த்தும் பை நகருய்ய வந்த
சிவவீரபத்திரரே யாடீரூஞ்சல்.

சரவுவுருவானவரே யாடீரூஞ்சல்
சங்கரர் சாரூபரே யாடீரூஞ்சல்
நரவரியை யுரித்தவரே யாடீரூஞ்சல்
தக்கனுக்குத் தோலளித்தீராடீரூஞ்சல்
விரவு பத்திரை நாயரே யாடீரூஞ்சல்
விண்ணவர்க்குச்சிட்சை செய்தீராடீரூஞ்சல்
சிரலிங்க கோலமுடன் தும்பை மேய
சிவவீரபத்திரரே யாடீரூஞ்சல்.

அஞ்சு முகனருள் பெற்றீராடீரூஞ்சல்
அருக்கனுடை பல் தகத்தீராடீரூஞ்சல்
விஞ்சுமதி தேய்த்தரே யாடீரூஞ்சல்
வெண்கமலை மூக்கரித்தீராடீரூஞ்சல்
நஞ்சனைய தக்கன் தன்தலை யரிந்தீராடீரூஞ்சல்
நம்மடியார் ரட்சகரே யாடீரூஞ்சல்
செந்தமிழ்ப்பாவாணர் சேர் தும்பளையின் மேய
சிவவீருபத்திரரே யாடீரூஞ்சல்.

ஒருபொருளே யானவரே யாடீரூஞ்சல்
ஒன்னலரைக்காய்ந்தவரே யாடீரூஞ்சல்
வெருவரவே அரிஅயனும் மேன்மை கெட்டு
வேள்வியிடையவச முறத்தடிந்தீரன்று
கருவறையிலடியமை விழாது காக்கக்
கருணைபுரியானந்த மூர்த்தியானீர்
பரவு புகழ்த் தும்பைநகர் தனிலே மேய
பத்திரையாள் நாயகரே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரேழு புவனத்திலுயிர்க்கு மெல்லா
இயவுளர்க்கும் இறையாக இலங்குசோதி
வாரேறு கொங்கையுமை பங்கரீந்த
வண்மையுடன் அவதரித்தே மகத்தில் வந்து
தேராத சிறுவிதியோடுற்ற தேவர்
சிதறி யொடுங்கிட வடர்ந்த தேவதேவே
சீரேறு புகழ்த்தும்பை நகரில் மேய
சிவவீரபத்திரரே யாடீரூஞ்சல்.

பல்கோடி காளிகள் கூட்டத்தினோடு
பராபரை யாளிடத்துதித்த பத்தீரை கூட
மல்லல் மாஞாலமதிலிருளே போக்கி
வழிபடுமடியார்க்கருள் புரிந்து காக்கவென்று
அல்லார்ந்த மிடற்றிறை பாலவதரித்தே
அருள் சொரியு மானந்த மூர்த்தியானாய்
செல்வமலி தும்பை நகர் தன்னில் மேய
சிவவீரபத்திரரே யாடீரூஞ்சல்.

அருமதுரத் தமிழ்மாலை கவிஞர் சாற்ற
அந்தணர்கள் பூஜைவிதி தவறாததாற்ற
சுருதி மொழியுடனேமரர் மலர்கள் தூவ
தொண்டர் குழாம் மண்டிநின்று துதியேபாட
திருவடியை நினைந்தன்பர் போற்றி செய்யத்
தீபதூபங்கள் பல அடியார் ஏற்ற
திருமலியந் தும்பைநகர் தன்னில் மேய
சிவவீரபத்திரரே யாடீரூஞ்சல்.

## வாழி

அருமை செறி வேத ஆகமங்கள் வாழி
அந்தணரும் ஆனினமும் அறமும் வாழி
பெருமை செறி மாதர் கற்பும் அரசர் கோலும்
பெட்பினொழு மழைபொழி மாமுகிலும் வாழி
திருவருள் சேர் சித்தி விநாயகரும் வாழி
திருமாலும் அறுமுகன் அஞ்சுகனும் வாழி
தெருள் மனத்தார்க்கருள் தும்பை நகரின் மேய
சிவவீரபத்திரரே வாழி வாழி.

## எச்சரிக்கை

திருமேவிடு தும்பைநகர் பெரியவளவதனில்
சித்திவிநாயகரோடுறைதேவே - எச்சரீக்கை
கருவேலையில் புகுதாவகை காப்பாய் - எச்சரீக்கை
கங்காளர் தன்னருட்பால கண்மணியே - எச்சரீக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகாளிகள் புடைசூழ் பத்திரைகேள்வா - எச்சரீக்கை
வஞ்சமனத் தக்கன் யாகஞ்சிதைத்தாய் - எச்சரீக்கை
அருமை செறி தும்பை நகர் அமர்ந்தாய் - எச்சரீக்கை
அருளேபொழி சிவவீரரெம் ஆதி - எச்சரீக்கை.

## பராக்கு

நச்சரவக் கச்சுடையநம்பா - பராக்கு
நன்கு ருச்சு மடியார்க்கருளும் நாதா - பராக்கு
இச்சகத்தில் சிட்டரிபாலா - பராக்கு
ஏமமுறு துட்ட நிக்கிரகசீலா - பராக்கு
அச்சமறத் தெம்மை ஆளும் ஆதி - பராக்கு
அரனாருடைச் சாரூபத்தையா - பராக்கு
மெச்சு புகத்தும்மை நகர் வந்தாய் - பராக்கு
மேன்மையுறு வீரபத்திரசாமி - பராக்கு.

## லாலி

சரபவுரு வான தொருசாமி - லாலி - தூய
சற்சனரைக் காத்தருளும் எந்தை லாலி
எந்தை லாலி ஈசனம்மை நந்த லாலி - அடியார்
இடர்களைய வந்தருட்தந்தை - லாலி
தந்தை லாலி பத்திரை தலைவா லாலி - எமை
தாங்கு மருள் வீரபத்திர சாமி - லாலி.

## மங்களம்

ஞானசித்திவிநாயகர்க்கு மங்களம் - எங்கள்
நாதசிவன் சக்தியார்க்கு மங்களம்
ஆறுமுகத்தையனுக்கும் மங்களம் - வள்ளி
அம்மை தெய்வயானையர்க்கு - மங்களம்
நாராயணன் தேவியார்க்கு மங்களம் - சிவ
நாகதம்பிரானார்க்கும் மங்களம்
காரணையை கஞ்சுகர்க்கும் மங்களம் - பத்திர
காளி கேள்வவீரனுக்கும் மங்களம் - மங்களம்.
மங்களம் மங்களம் சுபமங்களம்

சுபமஸ்து.

தகவல்:
க.செல்வரத்தினம் தகவல்திரட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2015ம் ஆண்டு மகாகும்பாபிஷேகத்தின் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2015ம் ஆண்டு மகாகும்பாபிஷேகத்தின் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1962ம் ஆண்டளவிலிருந்து அமைக்கப்பட்ட நிர்வாக சபை விபரங்கள்.

## 1962ம் ஆண்டு நிர்வாக சபை உறுப்பினர்கள்

கௌரவ தலைவர் - திரு.க.வேலாயுதம்பிள்ளை

செயலாளர் - திரு.வ. செல்வரத்தினம்

பொருளாளர் - திரு.ஆ.தியாகராசா

### நிர்வாக அங்கத்தவர்கள்

திரு.க.சேதுபதி

திரு.ச.ஆழ்வாப்பிள்ளை

திரு.க.விநாயகம்பிள்ளை

திரு.சி.நாகலிங்கம்

திரு.கி.குமாரசாமி

திரு.சி.நடராஜா

(தகவல் : ஸ்ரீவரதவிநாயகப்பெருமான் திருவூஞ்சல்)

**குறிப்பு :** நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகவும், இடப்பெயர்வுகள் காரணமாகவும் பேணப்பட்ட ஆலயம் சார்பான ஆவணங்களினைத் தேடிப்பெறமுடியாமையால் 1963-1993 வரையிலான நிர்வாகசபை விபரங்களினைத் தந்துதவமுடியவில்லை.

## 1993 - 1994 இருந்த நிர்வாகசபை உறுப்பினர்கள்

கௌரவ தலைவர் - திரு.ச.கந்தசாமி

உப தலைவர் - திரு.சி.வல்லிபுரம்

செயலாளர் - திரு.த.சிவபாதசுந்தரம்

உப செயலாளர் - திரு.ந.சேகர்

பொருளாளர் - திரு.கு.பாலகிருஷ்ணன்

உபபொருளாளர் - திரு.மு.பிரபாகர்

முகாமையாளர் - திரு.வ.செல்வரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.சி.நடராசா

திரு.இ.சிதம்பரநாதன்

திரு.வே.நந்தகோபால்

திரு.சி.ஞானேஸ்வரன்

கணக்குப்பரிசோதகர் : (1) திரு.சு.மருள்நீக்கியர்

(2) திரு.த.உதயமூர்த்தி

(நன்றி: இலங்கை வங்கி, பருத்தித்துறை)

## 1994 - 2000 வரையிலான நிர்வாகசபை உறுப்பினர்கள்

கௌரவ தலைவர் - திரு.நா.முத்துக்கிருஷ்ணன்

செயலாளர் - திரு.த.உதயமூர்த்தி

பொருளாளர் - திரு.க.ஏ.அருள்செல்வம்

கணக்கு பரிசோதகர் - திரு.ச.திருஞானசம்பந்தர்

முகாமையாளர் - திரு.வ.செல்வரத்தினம்

உதவி முகாமையாளர் - திரு.க.விநாயகம் பிள்ளை

**உறுப்பினர்கள்**

திரு.சி.சிவராசா

திரு.க.சிவசுப்பிரமணியம்

திரு.சி.வல்லிபுரம்

(தகவல் : 2000ம் ஆண்டு மகாகும்பாபிஷேக வரவு செலவு அறிக்கை)

## 2000 - 2001 வரையிலான நிர்வாகசபை உறுப்பினர்

கௌரவ தலைவர் - திரு.ச.சிவஞானசுந்தரம்

செயலாளர் - திரு.நா.அருந்தவராசா

பொருளாளர் - திரு.சி.வல்லிபுரம்

முகாமையாளர் - திரு.மூ.முத்துராசா

உறுப்பினர் - திரு.வே.இராமலிங்கம்

(மேலதிக தகவல்களினைப் வெற்றுக்கொள்ள முடியவில்லை)

(தகவல்: வாய்மொழிமூலம் – வொதுமக்கள்)

## 03.12.2001 - 22.01.2006 வரை

### 2001ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இடைக்கால நிர்வாக சபை உறுப்பினர்

கௌரவ தலைவர் - திரு.வே.இராமலிங்கம்

செயலாளர் - திரு.க.பொன்னம்பலம்

பொருளாளர் - திரு. வே. நடராசா

முகாமையாளர் - திரு.சு.இராமகிருஷ்ணன்

(தகவல்: வொதுக்கூட்ட அறிக்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21.01.2006 - 08.03.2008 வரையிலான நிர்வாக சபை உறுப்பினர்

| | | |
|---|---|---|
| கௌரவ தலைவர் | - | திரு.இ.கணேசராசா |
| செயலாளர் | - | திரு.த.சிவபாதசுந்தரம் |
| உபதலைவர் | - | திரு.ச.திருஞானசம்பந்தர் |
| உபசெயலாளர் | - | திரு.க.சுதாகரன் |
| பொருளாளர் | - | திரு.நா.சிவராசா |
| முகாமையாளர் | - | திரு.கு.பாலகிருஷ்ணன் |
| முகாமையாளர் | - | திரு.இ.சுதாகரன் |

## நிர்வாக உறுப்பினர்கள்

திரு.இ.ஆனந்தநாதன்

திரு.நி.கணேஸ்வரன்

திரு.சு.ஜனார்த்தனன்

செல்வி.சே.அமிர்தலட்சுமி

திருமதி.வி.துருவசோதி

கணக்கு பரிசோதகர் - திரு.மு.காண்டீபன்

(தகவல் : பொதுக்கூட்ட அறிக்கை)

# 09.03.2008 - 29.06.2010 வரையிலான நிர்வாக சபை

| | | |
|---|---|---|
| கௌரவ தலைவர் | - | திரு.த.சிவபாதசுந்தரம் |
| உபதலைவர் | - | திரு.சி.சிவராசா |
| செயலாளர் | - | திரு.மு.காண்டீபன் |
| உபசெயலாளர் | - | திரு.இ.சுதாகரன் |
| பொருளாளர் | - | திரு.ச.சிவஞானசுந்தரம் |
| முகாமையாளர் | - | திரு.கு.பாலகிருஷ்ணன் |
| இணை முகாமையாளர் | - | திரு.நா.சிவராசா |

## நிர்வாக உறுப்பினர்கள்

திரு.க.காந்தரூபன்

திரு.ந.சுதாகர்

திரு.வே.கபிலன்

செல்வி.ஏ.வரலட்சுமி

செல்வி.சே.அமிர்தலட்சுமி

திரு.பா.தபேந்திரநாதன்

திரு.க.செல்வரத்னம்

கணக்கு பரிசோதகர் - திரு.த.உதயமூர்த்தி

(தகவல் : பொதுக்கூட்ட அறிக்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30.06.2010 - 18.02.2012 வரையிலான பரிபாலன சபை

கௌரவ தலைவர் - திரு.த.சிவபாதசுந்தரம்
உபதலைவர் - திரு.எஸ்.பி.விவேகானந்தன்
செயலாளர் - திரு.கி.பாலகெங்காதரன்
உபசெயலாளர் - திரு.சு.ஜனார்த்தனன்
பொருளாளர் - திரு.ச.சிவஞானசுந்தரம்
முகாமையாளர் - திரு.இ.சுதாகரன்
திரு.கு.பாலகிருஷ்ணன்

**நிர்வாகசபை உறுப்பினர்கள்**

திருமதி.வி.துருவசோதி
திருமதி.வி.பிரபாதேவி
திரு.ச.சிறீகாந்
திரு.வே.கபிலன்
திரு.மு.குணநேசன்
திரு.பா.மயூரன்
கணக்கு பரிசோதகர் - திரு.த.உதயமூர்த்தி

(தகவல் : பொதுக்கூட்ட அறிக்கை)

## 19.02.2012 முதல் இன்று வரையிலான பரிபாலன சபை

கௌரவதலைவர் - திரு.கி.பாலகெங்காதரன்
உபதலைவர் - திரு.ச.திருஞானசம்பந்தர்
செயலாளர் - திரு.மு.குணநேசன்
உபசெயலாளர் - திரு.ம.சுரேஸ் (திரு.ம.சுரேஸ் அவர்கள் தற்போது வெளிநாடு சென்ற
திரு.க.சுதர்சன் காரணத்தினால் திரு.க.சுதர்சன் தற்பொழுது நியமிக்கப்பட்டுள்ளார்.)
பொருளாளர் - திரு.ச.சிவஞானசுந்தரம்

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.வே.கபிலன்
திரு.எஸ்.பி.விவேகானந்தன்
செல்வி சேதுபதி அமிர்தலட்சுமி
திருமதி கோ.இராசேஸ்வரி
திரு.வே.சபேசன்
திரு.சு.ஜனார்த்தனன்
திரு.கு.சாந்தகுமார்
திரு.க.இ.ரஞ்சன்
திரு.இ.சிவரூபன்
திரு.ந.நிதர்சன்
கணக்குப் பரிசோதகர் - திரு.த.உதயமூர்த்தி

(தகவல் : பொதுக்கூட்ட அறிக்கை)

**பொருளாளர்**

கௌரவ பொருளாளர் ச.சிவஞானசுந்தரம் அவர்கள் அமரத்துவம் அடைந்ததையொட்டி திரு.வே.சபேசன் அவர்கள் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத் திருப்பணிகள்

2000 ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின் பின்னர் ஆலயத்தின் சுற்றுக்கோயிலில் உள்ள ஞானசித்தி விநாயகர் ஆலயத்தின் முன் உள்ள சிறிய கூரையைக் கொண்ட மண்டபம் அகற்றப்பட்டு புதிய பரிணாமத்துக்குரிய அலங்காரத்தூண்கள் அமைக்கப்பட்டு சுற்று மண்டபத் திற்குரிய 20 அடி நீள கூரை ஆக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு அவ்வாண்டு நடைபெற்ற மணவாளக்கோல விழாவுக்காக சேகரிக்கப்ப்ட்ட நிதியின், மிகுதிப் பணத்தை கொண்டே இளைஞர்கள் இவ் வேலையை செய்து முடிந்தனர் இதனைத் தொடர்ந்து சுப்பிரமணியசுவாமி, சந்தானகோபாலர் பிரகாரங்களுக்கு முன் 20 அடி நீளமுள்ள மண்டப வேலையை ஆரம்பித்து அக்கால நிர்வாகம் பூரணமாக்கியது.

2006 ஆம் ஆண்டு செல்விகள் சேதுபதி குடும்பத்தினர் ஞான சித்தி விநாயகருக்கு முன்புறமாக உள்ள மண்டபத்தில் இருந்து 26X14 அடி நீளமுள்ள மண்டபத்துக்குரிய தூண்கள், கூரையையும் அமைத்து தூண்களுக்குரிய அலங்கார வேலைப்பாடுகளையும் றேம்கொண்டனர். இதனையடுத்து ஆண்டுதோறும் பகுதி பகுதி வேலையாக செய்து கடந்த வருடம் இத் தெற்குப் புறமண்டபமும் நிர்வாகத்தினரால் பூரணமாக கட்டி முடிக்கப்பட்டது.

இதனைப் போலவே மேற்குபுற மண்டபத்திற்கு திருமதி மாதவன் ரோகிணி திருமதி சிவஞானசுந்தரம் நிர்மலா, திருமதி உமா தேவகுமார், திருமதி ஜெயராணி, சாந்தகுமார் ஆகியோரின் நிதி பங்களிப்புடனும் நிர்வாகத்தின் நிதியுடனும் இம்மண்டபத்தின் தூண்கள், கூரை வேலைகள் செய்து முடிக்கப்பட்டது.

இதனையடுத்து 2012 ஆம் ஆண்டு சேதுபதி பூரணம் தம்பதிகளின் புதல்விகளான அமிர்தலட்சுமி, பரமேஸ்வரி திருமகள் ஆகியோரால் சுப்பிரமணிய சுவாமி கோவிலின் முன்பாக ஏற்கனவே இருந்த சுற்று மண்டபத்துடன் இணைத்து மிகுதியாக இருந்த மண்டபத்தை அலங்கார வேலையுடன் கட்டிக் கூரை வேலையையும் அமைத்தனர்.

இக்காலப்பகுதியில் சரவணமுத்து சரஸ்வதி குடும்பத்தினர் சந்தான கோபாலர் கோவிலுக்கு முன்புறமாக சண்டேஸ்வரர் வரை அமைக்கப்பட்ட மண்டபத்துடன் இணைத்து வசந்த மண்டபம் வரையான 46 அடி மண்டபத்திற்குரிய, அலங்கார தூண்கள், கூரை வேலை ஆகியவற்றை ஆக்கிக்கொடுத்தார்.

வீரபத்திரர் ஆலயத்தின் மூலஸ்தானம், மகாமண்டபம் ஆகியவற்றை அமரர்.வ.செல்வரத்தினம் அவர்கள் ஏற்கனவே அமைத்துக் கொடுத்திருந்தார். இவ்வாறு அமைத்துக் கொடுத்திருந்த போதிலும், தற்போது இம்மகா மண்டபம் புதிய சுற்று மண்டபத்துடன் ஒத்திசைய உயர வேறுபாடுகள் தடையாக இருந்ததால் மீளமைப்பு மேற்கொண்டு கூரையமைக்கப் பட்டுள்ளது. தற்போது இம் மகா மண்டபத்தில் தேவசபையும் அமைக்கப்பட்டுள்ளது.

விநாயகர் ஆலயத்தின் மூலஸ்தானம் முன்னோரால் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளதால் சிறந்த நிலையில் உள்ளதால் மூலஸ்தானத்தை தவிர்த்து மகாமண்டபம் ஸ்நமன மண்டபம் பலிபீடத்துடனான தரிசனமண்டபங்களினதும் சுவர்கள், கீழ் தளங்கள் முற்றாக அகற்றப்பட்டு மீள அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு, மகா மண்டபத்தின் மேல்தளத்திற்கு கொங்கிறீட் (பிளேற்) தளம் அமைத்து இதனை மூடி கன்னார் தகடுகளால் வேயப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வசந்த மண்டபம் சுற்று கூரையுடன் இணைக்கும் செயற்பாட்டில் சிக்கலான நிலை ஏற்பட்டதாலும், அமைப்பு பிரமாணத்தில் மாற்றங்கள் செய்யவேண்டி இருந்ததாலும், பகுதியளவு சுண்ணாம்பு சுவர்கள் காணப்பட்டதாலும், இந்த மண்டபம் அகற்றப்பட்டு, புதிய அளவு திட்டத்துடன் வடக்கு, கிழக்கு, மேற்கு சுவர்கள் சிறிதளவு வெளிநோக்கி நகர்த்தப்பட்டு புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் மேற்தளம் பண்டிகை அமைப்பதற்கு வசதியாக கட்டப்பட்டுள்ளது. அத்துடன் காவல் வைரவர் கோவிலும் சுற்று மண்டப வேலைக்கு தூண்கள் அமைக்க வேண்டி இருந்ததால் அந்த கட்டிடமும் அகற்றப்பட்டு மீளக் கட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீவரத விநாயகர் , வீரபத்திர ஆலய தரிசன மண்டபங்களும் முற்றாக அகற்றப்பட்டு மீளவும் கட்டப்பட்டுள்ளது. ஸ்ரீவரத விநாயகர், ஆலய ஸ்நமன மண்டபம், தரிசன மண்டபம், வசந்த மண்டபம், வீரபத்திரர் ஆலய தரிசன மண்டபம் ஆகியவற்றிற்கு அலங்கார தூண்களும் அலங்கார வளைவுகளும் புதிய சுற்று மண்டபத்திற்கு அமையக் கட்டப்பட்டுள்ளது. வீரபத்திரர் ஆலய வாயிற் கோபுரம், சுண்ணாம்பு சுவர் என்பதால் அகற்றப்பட்டு சுற்று மண்டபத்திற்கு ஏற்ப புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீவரத விநாயகர் தரிசன மண்டபத்தில் பலிபீடத்தளம் அகற்றப்பட்டு, புதிதாக கட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே சின்னப்பிள்ளையார் முன் இருந்த பலிபீடம் அகற்றப்பட்டு விநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து நிலம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. ஞானசத்தி விநாயகர் ஆலய முன் மண்டபம் முழுவதற்கும் திரு.கார்த்திகேசு பத்மநாதன் அவர்களால் கொங்கிறீட் இடப்பட்டது. மேலும் இவர் ஞான சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து சந்தான கோபலர் வரையும் உள்ள மேற்குபுற மண்டப நிலத்திற்கு கொங்கிறீட் இட்டுச் சிமெந்து நிலமும் ஆக்கினார். முருகன் மண்டபம் முழுவதற்கும் செல்விகள் சேதுபதி குடும்பத்தினர் கொங்கிறீட் நிலம் அமைத்து விட்டார்கள். சந்தான கோபாலர் முன் மண்டபம் தொடக்கம் வசந்த மண்டபம் வரைக்கும் தரிசன மண்டபத்தின் பகுதி அளவுக்கும் கொங்கிறீட் நிலம் இடுவதற்குச் சரவணமுத்து சரஸ்வதி குடும்பத்தினர் நிதி உதவி வழங்கினர். மிகுதி கொங்கிறீட் நிலம் அமைக்கும் வேலைகள் முழுவதையும் பொதுமக்கள் நிதி உதவியுடன் நிர்வாகத்தினர் மேற்கொண்டனர்.

## றெறசோ

ஆலயத்தின் தெற்குப்புற மண்டபம் முழுவதும் றெறசோ போடப்பட்டுள்ளது. இதில் 26 அடி நீள மண்டபத்திற்கு செல்விகள் சேதுபதி குடும்பத்தினர் நிதி உதவி வழங்கியுள்ளனர். மிகுதி மண்டபத்திற்கு நிர்வாகத்தினரின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. சந்தான கோபாலர் மண்டபத்திலிருந்து வசந்த மண்டபம் வரைக்கும் தரிசன மண்டத்தின் ஒரு பகுதிக்கும் றெறசோ இடுவதற்கு சரவணமுத்துவின் மகன்களான ஞானேசன், திருநேசன்,சுரேசன் மற்றும் மகள் செல்வப்பிரபா பவித்திரா நிதி உதவி அளித்திருந்தார்கள். மீதியளவு நிலத்திற்கு றெறசோ அமைப்பதற்கு மக்களிடமிருந்து பெற்ற நிதியினை ஆலய நிர்வாகம் வழங்கி பூரணமாக முடித்துள்ளது. வரதவிநாயகர் மூலஸ்தானத்திற்கு மாபிள் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இந்த பளிங்குக் கற்கள் திரு.சு.ஜனார்த்தனன் அவர்கள் வாங்கி கொடுத்துள்ளனர். பளிங்குக்கற்கள் பதிக்கும் வேலை நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சமையல் அறை

சமையல் அறை, அதனைத் தொடர்ந்துள்ள 20 அடி சுவர் ஆகியவற்றை திரு.வே.சபேசன் அமைத்துக் கொடுத்தார்.

## கதவுகள்

ஸ்ரீ வரதவிநாயகர் ஆலய மகா மண்டபத்தின் உள்ள மூன்று கதவுகளும் வீரபத்திரர் ஆலயத்தின் கோபுர வாயில் கதவும் திரு.வே.சபேசன் அவர்களால் ஆக்கிக் கொடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்த மண்டப இரும்பு இழுவை கதவு சச்சிதானந்தன் சிதம்பரேசன் அவர்கள் வழங்கியிருந்தார். மேலும் ஞானசித்தி விநாயகர், நாகலிங்கம் சந்தான கோபாலர் , முருகன் ஆகிய சுற்று புறகோயில் களின் கதவுகளினை நிர்வாகத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

## கிணறு

வசந்த மண்டபம் விஸ்தரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாலும், சுற்று மண்டப தூண்கள் அமைக்க வேண்டி இருந்தாலும் இக்கிணற்றினை சிறிய விட்டமுடையதாக அமைக்க வேண்டிய இருந்ததால் இக்கிணறு சிறிதாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இப் புனரமைப்புப்பணியினை செல்விகள் சேதுபதி குடும்பத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

## வைரவர் ஆலயம்

வைரவர் ஆலயத்திற்கும் முன்புறமுள்ள படிக்கட்டுகளுக்கு மாபிள்கற்கள் பதித்தல் மேற்குப் புறச்சுவரின் வெளிப்புறமாக, சிமெந்தினாலான தளம் அமைத்தல் சிவப்பிரகாசம், கந்தையா, கார்த்திகேசு ஆகியோரது குடும்பத்தினர்கள் இணைந்து இத் திருப்பணி வேலைகளை நிறைவேற்றியுள்ளார்கள்.

## சக்தி வேலாயுத சுவாமி, சன்னியாசி வைரவ ஆலயங்கள்

இந்த ஆலய சன்னியாசி வைரவர் ஆலயம் சுண்ணாம்பினால் கட்டப்பட்டிருந்ததால் முழுமையாக அகற்றப்பட்டது. பின்னர் இவ்வாலயம் கொங்கிறீட்டினால் மீள கட்டப்பட்டு நிலத்திற்கும் மாபிள் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. முருகன் ஆலய கோபுரமும் , மூலஸ்தானமும், மகா மண்டபமும் மீள் செப்பனிடப்பட்டது. இதற்கு திருமதி பகவதி கணேசன் குடும்பத்தினர் ரூபா 70,000.00 , திரு.கந்தசாமி கணேஸ்வரன் ரூபா 6000.00 , திரு.தே.தேவராஜேந்திரன்ரூபா 5,000.00 மாணிக்கம் வினோத்குமார் ரூபா 100,000.00 , திரு.ப.அரவிந்தன் 350 செங்கற்களும் கொடுத்து உதவினர். திரு.த.இராசமோகன் மின்சார இணைப்புப் பொருட்களையும், மின் இணைப்புச் சேவைகளையும் வழங்கினார். வர்ணங்களை (paint) திரு.ஏ.அருள்செல்வம் அவர்கள் வழங்கியுள்ளார். வர்ணப்பூச்சு வேலைகளுக்கு நிர்வாகத்தினர் நிதி வழங்கினர். ஏனைய செலவினங்களை திரு.த.உதயமூர்த்தி அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

## மின்இணைப்பு

திரு.தர்மபாலகிருஷ்ணன் இராசமோகன் அவர்கள ஆலயத்திற்கு உரிய அனைத்து மின்சார இணைப்பு வேலைகளையும் (மின்சார உபகரணங்கள் அன்பளிப்பு வழங்கல் உட்பட) மேற்கொண்டிருந்தார்.

## ஆலய வர்ணப்பூச்சு

ஆலயத்தின் முழுப்பகுதிகளுக்கும் வர்ணம் பூசுவதற்கான வர்ணங்களை (Paints) திரு.ஏகாம்பரநாதன் அருள்செல்வம், திருமதி ரமேஸ் நிஸாந்தி, திருமதி.பிரபாகர் சுதர்சினி, திருமதி ஞானசம்பந்தர் அனுஷா, திரு.ஏகாம்பரநாதன் கணேஷா ஆகியோர் அன்பளிப்பு செய்துள்ளனர்.

## விநாயகர் ஆலய வெளிமண்டபம்

விநாயகர் ஆலய வெளிமண்டபம் அமைப்பதற்காக ச.ஆழ்வாப்பிள்ளை குடும்பத்தினரால் நாள் அத்திவாரம் இடப்பட்டுள்ளது.

தகவல் : ஆலய நிர்வாகசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தில் அரும்பணியாற்றிய ஆசிரியப்பெருந்தகை

குறுகிய உருவம் மடித்துக்கட்டிய நான்கு முழவேட்டி இடதுதோளில் சால்வை வலது தோளில் ஆலயக்கதவு திறப்புக்கள் எனது வீட்டிற்கு எதிராக அமைந்த இலச்சக்கா வீட்டு குச்சொழுங்கையால் அவ்வுருவம் வரத விநாயகர் ஆலயம் நோக்கி செல்வதை எத்தனையோ நாட்கள் நான் பார்த்திருக்கிறேன். முன்னர் இவ்வாலயத்திற்கு நான் வருவது மிகக் குறைவுதான். தம்புருவளை பிள்ளையார் கோயிலே எனது குடும்பத்தினர் சென்று வழிபடும் இடமாக இருந்தது. மணவினையின் விளைவாக கலட்டியை வந்தடைந்த பின்னரே இவ்வாலயத்திற்கு அடிக்கடி செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அதுநிற்க மேலே நான் விபரித்த நபர்தான் செல்வரத்தினம் அல்லது சின்னத்துரை என நாமம் பெற்ற ஆசிரிய பெருந்தகை.

1980 முதல் 1999 ஆண்டு வரை இருபது வருட காலம் ஒரு ஆலயத்தை தனியாக செய்வதென்பது கனவில் கூட நினைத்துப்பார்க்க முடியாத காரியமாகும். இவ்வாலய நிர்வாகப்பணி மிகவும் சிரமமானதென்பதை 2001 முதல் 2005 வரை முகாமையாளராக கடமையாற்றிய நான் மிகவும் நன்றாகவே புரிந்துள்ளதால் அவர் அக்காலத்தில் செய்தசேவை மிகவும் பாராட்டத்தக்கதென்பதை குறிப்பிட விரும்புகிறேன். பொருளாதார ரீதியாக எமது ஊர் நலிவடைந்து இருந்த காலம். நட்சத்திர பூசை காரணமாகவே பூசாரி வேதனம் முன்னர் கொடுக்கப்பட்டு வந்தது. பூசகர் தாங்களே பூசைப்பிரசாதத்துடன் அடியவர்கள் வீடுசெல்வது நின்று விட்டது. செல்வரத்தின வாத்தியார் தனியாகவே அப்பூசைப்பிரசாதத்துடன் எமது வீடுகளிற்கு வந்து அவற்றை வழங்கி அதற்கான பணத்தை பெற்றுச்செல்வது வழக்கம்.

கோவிலின் நித்திய நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறுவற்கு ஆசிரியருடன் அவர்தம் பாரியார் சிவயோகம் ரீச்சரும் அரும்பணியாற்றிய காலம் அது. ஊர்மக்களிடம் திரட்டிய பணம் பொதுவாக ஆலயக் கைங்கிலியங்களிற்கு காணாதிருக்கும் நிலையிலே தனது கையிலிருக்கும் பணத்தினை கொடுத்து நிறைவு செய்பவர் அவர். அவர் காலத்தில் நடந்த வசந்தமண்டப நிர்மாணம் இரு கும்பாபிடேக விழாக்களில் அவரின் பங்கே மிகவும் பெரும்பங்காக இருப்பதை அக்கும்பாபிடேக வரவு செலவு அறிக்கையின் மூலம் அறிந்து கொள்ளலாம். பாரம்பரியமாக எமது கோவிலில் நடைபெற்றுவரும் கந்தபுராணம், காசிகாண்டம் ஆகிய புராணப்படிப்புகளை தொடர்ந்தும் எத்தனையோ சிரமங்களிற்கு மத்தியில் நடத்திச் சென்றவர். அநேகமாக ஆசிரியருடன் இரா.சிதம்பரநாதன் அவர்களும் மேற்படி படிப்புகளை செய்து வந்தார். இன்றோ கந்தபுராணம் படிப்பதற்கு எத்தனை பேரை பிடிக்கின்றோம். அன்று அவர்கள் இருவரும் ஆற்றிய அருஞ்சேவைக்கு எதனை ஈடாக சொல்வதென்றே தெரியவில்லை. தனது வீட்டிலிருந்து ஒரு செம்பில் பால் தேநீருடன் சிதம்பரநாதனை அழைத்துக்கொண்டு ஆலயம் சென்று புராணபடனம் செய்வது அவர் வழக்கம். ஒருமுறை ததீசி உததரப்படிப்பின் போது இயற்கைக்கடன்களை கழிக்கமுடியாத நிலையில் இருவரும் எவ்வளவோ சிரமப்பட்டு 388 பாடல்களையும் பூர்த்தி செய்ததை சிதம்பரநாதன் அவர்கள் இன்றும் நினைவுகூருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிகாண்டப்படிப்பு கார்த்திகை மாதம் கடும் மழைக்காலம் கடினமான சொற்றொடர்களை கொண்ட பாடல்கள், போதாக்குறைக்கு காப்புக்கட்டு விரதமும் ஆரம்பித்துவிடும். அத்தனை சிரமங்களிற்கு மத்தியும் 2526 பாடல்களை கொண்ட அப்புராணத்தை 20 நாட்களில் சிலவேளைகளில் 15 நாட்களிலும் பூர்த்தி செய்யவேண்டிய நிலையில் அவற்றை சிறப்புறசெய்தவர் அவர். புராணப்படிப்புகளிற்கு கை கொடுக்கும் முகமாகவே நான் இவ்வாலயத்திற்கு அடிக்கடி வர ஆரம்பித்தேன் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சொல்லியே ஆக வேண்டும்.

அவருடைய காலப்பகுதி யுத்தகாலப்பகுதி என்பதை நினைவில் கொள்ள வேண்டும் ஹெலிகொப்டர் தாக்குதல், கடலிலிருந்து பீரங்கி தாக்குதல், பலாலியிலிருந்து செல் தாக்குதல் ஒப்பரேசன்லிபறேசன் (வடமராட்சியை ஆமி கைப்பற்றியது) இந்திய அமைதிகாக்கும் படையில் அட்டூழியம் 1989 முதல் 1994 வரை மின்சாரம் இல்லாதிருந்த நிலையில் பின்னர் ஸ்ரீலங்கா ஆமியின் மீள்பிரவேசம் என எத்தனையோ இன்னல்களை அனுபவித்த காலத்திலும் ஆலய பூஜைகள் தொய்வடையாது சிறப்புறவே நடத்திச்சென்ற பெருமை ஆசிரியரையே சாரும்.

பொதுப்பணியில் ஈடுபடும் எவரும் குறைகேட்காமல் இருக்க முடியாது. அவ்வாறே ஆசிரியரும் பலகுறைகளை கேட்க நேர்ந்தபோதும் மனம் தளராமல் இம் மகத்தான பணியை 20 ஆண்டுகாலம் செய்து வந்ததை எண்ணிப்பார்க்கும் போது மலைப்பாகவே இருக்கிறது. “என் கடன் பணி செய்து கிடப்பதே” என அடிக்கடி சொல்லும் அவர் 1999 ம் ஆண்டு ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 2000 ஆம் ஆண்டு கும்பாபிடேகம் நடைபெற்ற வேளையில் நோய்வாய்ப்பட்டிருந்தவேளையிலும் அக் குடமுழுக்கு கிரியைகளை கண்டுகழித்த பின்னரே மேலும் ஓராண்டு சென்ற இறைபதமடைந்தாள். அவரின் இழப்பானது ஈடுசெய்யமுடியாத இழப்பாக அமைந்ததுடன் அவரைப் போன்ற செயல்திறனுடனும் அர்ப்பணிப்புடனும் பணி செய்பவர்களை இன்று காண்பது மிக அரிதாகவே இருக்கின்றது.

**திரு.சுப்பிரமணியம் இராமகிருஷ்ணர்**
**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாமாலை

1) அத்தி முகம் கொண்ட சித்தி விநாயகா!
எத்திக்கும் விளங்க எழில் நடனம் புரிபவனே
பக்தியுடன் உனை பரவிடுவர் தங்கள்
சித்தம் தனில் நின்று திருவருள் சொரிபவனே.

2) வரங்கள் வழங்கும் வரத விநாயகா
கரமைந்துடையாய் கருணை புரிவாய்
பரமன் மகனே கரியின் உருவே
பரவும் அடியார் மனதில் உறைவாய்

3) வேதியரும் வைத்தியரும் வேளாளர் வணிகருடன் சோதிடமும்
நீதியுடன் வாழ்ந்து வரும் தூயநகர் தும்பளையில்
பாதி மதி வேதியனின் பாலகனாம்
சோதி மணி சுந்தரரை தொழுவார் என்றும் பிறவாதவரே.

4) அம்பிகை தன்னின் அருமை தலைமகனே
தம்பி தனக்காக அன்று வனம் செய்தவனே
நம்பிக்கை தொழுவார்க்கு நாயகமாய் நின்றவனே
தும்பிக்கையால் எங்கள் துயர் துடைத்து காத்திடுவாய்.

5) மயில் மீது அமர்ந்து எம் வினை போய் அகல நடமாடுகின்ற குகனே
அயில் வேலின் துணை கொண்டு அரசாளுகின்ற உமையானின் இளைய மகனே
குயிலே அனைய மொழி குறமாதவளை வலமாக வைத்த குமரா
துயில்வோன் மகளான தெய்வயானை தனை பரிசாக பெற்ற முருகா!

6) சரவரணப் பூவில் தவழ்ந்து விளையாடி சொரிகுழலி உமையவனின் மடிமீது -வளர்ந்து
பரம சிவனின் கையாலே படைக்கலங்கள் பெற்று உரம் உடைய அசுர குலம் - முழுவதையும் வென்று
சுரங்கள் பதிக்கும் சொர்க்கத்தில் முடிமூடி திருமகனின் இரு புதல்விகளை மணந்து
மரகத மயிலில் உலக வலம் வந்த கரம் மைந்துடைய கணபதியின் தம்பியரே.

7) கலைமலிந்த தூண் சுமக்கும் கம்பீர ஆலயத்தில்
சிலைவடிவாய் நிற்கும் சிவவீரபத்திரரே
கவலைகளை சொல்லி அழும் நின்னடியார் தமக்கு
நிலையான வாழ்வு நிம்மதியும் தருபவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) காதி காண்டம் என்றும் கவின் நிறைந்த காவியத்தை
தேசிகளும் பாவலர்களும் நாவலரும் பாட
ஆசையுடன் கேட்டு அகம் மகிழும் அம்பிகையே
காசியில் எம்மைக் கவலையற வாழவைப்பாய்.

9) அரச மரத்தடியில் அழகாக அமர்ந்திருக்கும்
கரம் ஐந்துடைய கணபதியின் தம்பியாரே
சரணடைந்தன் யாவருக்கும் சங்கடங்கள் தீர்க்கும்
பிரமன் தலைகொய்து குருதிப் பலிபெற்றவரே.

10) சுந்தரம் மிகுந்த உன்தம்பியுன் புகழ் பரப்பும்
கந்தபுராணம் என்னும் கவின் நிறை காவியத்தை
சிந்தை மகிழ்வோடு ஓதி உணர்வோருக்கு
இந்திரனார் தம் பதவியாம் இருவிசம்பு தருபவனே.

11) சங்கரனின் புத்திரனாம் திகழ் வரத விநாயகர்க்கு
எங்கும் விளங்கும் அலங்கார தூண்களுடன்
மங்காப் புகழ் மணக்க உருவாக்கி தந்த
கெங்காதரனும் அங்கத்தவரும் வாழ்க.

12) சிவனாரின் மகிந்தன் சிவ வீர பத்திரர்க்கம்
பாவங்களை களையும் பத்திரகாளிக்கும்
உவமானம் சொலற் அரிதாய் - உருவாக்கித்தந்த
சிவபாத சுந்தரரும் குழுவினர்களும் வாழ்க.

13) வள்ளிக் கணவரின் அண்ணாய் விளங்கும்
பிள்ளையார்க்கு பெரும் பணிகள் செய்ய
அள்ளிக் கொடுத்தும் அகம் மிக மகிழ்ந்த
வள்ளல்கள் எல்லாம் வாழ்க , வாழ்க

14) சிப்பரனின் புத்திரனாம் திகழ்ந்த வரதவிநாயகர்க்கு
கற்ற கல்விகளை கவி அழகு காட்டி
அற்புதமாக அமைத்து தந்த
சிற்பாற்சாரியும் சீடர்களும் வாழ்க.

15) ஆனைமுகம் கொண்டு அருள் சுரக்கும் எலார்க்கு
வானவில் லொத்த வர்ண கலவைகளால்
வான்னுலாம் போல பூவுலகத்தை வரைந்த
ஞான மிகுதீபா வாழ்க வாழ்கவே.

-திரு.இரா.சிதம்பரநாதன்-

**********


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25.03.2015 அன்று நடைபெறும்தும்பளை வரத விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற கணபதியை வேண்டிப் பாடியது.

அரச மர நிழலில் அமர்ந்திருப்போனே
வரதவிநாயகா வந்தெமைக் காப்பாய்
பெரிய வளவுறை பெரிய தம்பிரானே
அழகாய் அமர்ந்திடும் அற்புத தெய்வமே

முக்கண்மைந்தனே மூஞ்சூறு வாகனா
முருகனுக்கு மூத்தோன் முத்தி அளிப்போனே
மாங்கனி வென்ற மாயவன் மருகா
ஏக தந்தனே எங்கள் விநாயகா

விக்கினம் தீர்த்திடும் விக்கினேஸ்வரா
தம்பிகுதவிய தும்பி முகத்தோனே
சங்கம் வளர்த்திட்ட துங்க கரி முகா
அப்பம் விரும்பிடும் ஆனை முகத்தோனே

பரமனின் மைந்தா, பார்வதி புதல்வா
பரமானந்தர் வழி வந்தோர்கள்
ஏர் பிடித்தோர், ஏற்றம் இறைத்தோர்
வாணிபம் செய்வோர், வைத்தியம் செய்தோர்
சோதிடம் சொன்னோர், கல்வி வளர்த்தோர்
பண்டிதர்கள், படிப்பால் உயர்ந்தோர்
தொழில் புரிவோர், புலம் பெயர்ந்தோர்
அனைவரும் கூடி உனக்கொரு ஆலயம்
ஆக்கினர் புதிதாய் அருள்வாய் கணபதி

அருள்மிக அருளும் ஹேரம்பா போற்றி
வரம் மிக வழங்கும் வக்ரதுண்டா போற்றி
துன்பங்கள் களைந்திடும் தூமகேதுவே போற்றி
கலைகள் அளித்திடும் கணபதி போற்றி
நிகழ்வுகள் அனைத்தும் இனிதாய் முடிந்திட
அருள்வாய் கணேசா அன்பர்கள் மகிழ
கணபதி நீதான் காத்திட வேண்டும்
மத்தள வயிறனே மலரடி சரணம்.

-கலாநிதி க.வாகீசர்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வரத விநாயகர் துணை
குகமயம்

# கந்தபுராண கலாச்சாரமும் எமது தும்பளை மேற்கு பெரியவளவு வரதவிநாயகர் ஆலயமும்

"துய்யதோர் மறைக ளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில்சீர் அடியார் வாழ்க வாழ்கஇப் புவனம் எல்லாம்"

"எத்துணைக் காலம் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்பினும் எட்டுனையும் தெவிட்டாது தித்தித்து அழுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்கியாகிய கந்தபுராணத்துள்ள பதியிலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினால் இவர்கள் (யாழ்ப்பாணத்தவர்கள்) உள்ளத் தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம்" என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அறுதியிட்டுக் கூறுகின்றார்.

கந்தபுராணத்துக்கு வசனம் செய்தவர் நாவலர் பெருமான். "கந்தபுராண நவநீதம்" செய்தவர் மகான் குப்பிழான் காசிவாசி செந்திநாத ஐயர். கந்தபுராணத்துக்கு விளக்கம் செய்தவர் சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்கள். கந்தபுராண முன் மூன்று காண்டங்களுக்கு உரைசெய்தவர் சமஸ்கிருத திராவிட பண்டிதரும், பிரபல சோதிட கணித சித்தாந்தியும், வித்தியா விருத்தித் தர்மகர்த்தரும் ஆகிய பருத்தித்துறை தும்பளை பிரமஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள். கந்தபுராண கலாச்சாரம் மூலம் தட்சகாண்டத்திற்கு உரை செய்தவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களே. இதே போன்று கந்தபுராணத்திற்கு விளக்கம் செய்துள்ள பல பேரறிஞர்களின் யாழ்ப்பாணத்தவர் அநேகர் இருக்கிறார்கள்.

அத்துவிதசித்தாந்தி ஸ்ரீமத் வே.கணபதிப்பிள்ளைச் சோதிடர் அவர்களையும், பிரமஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களையும் தன்னகத்தே கொண்ட எமது பிரதேசத்தில் தமிழ்மொழியும், இலக்கியமும், சைவசமயமும் செழிப்புடன் வளர்ச்சி பெற்று இருந்தது. முன் உள்ள காலத்து காதுவழிக் கல்வி மிகவும் உயர்ந்தது. அதன்பின் ஓலைச்சுவடிகள் மூலம் கல்வி வளர்ச்சி பெற்றது. நாவலரின் காலத்தில் அச்சுயந்திரம் தோன்றியதால் ஓலைச்சுவடிகள் யாவும் அச்சிடப்பட்டு புத்தக ரூபமாகின. இப்புத்தகங்கள் பாடல்களை மட்டுமே கொண்டதாக இருந்ததேயன்றி பொருளற்று இருந்தது. இக்காலகட்டத்தில் நாவலர் அவர்களே தன் அறிவுத்திறமை, சிந்தனை ஆற்றலால் வளர்ந்த இந்த தமிழ் உலகிற்கு செய்யுட்களை திறம்படப் பிரித்து பொருள் பிறளா வண்ணம் பயன் விரித்துரைத்தார். அத்துடன் பல மாணவர்களையும் கற்பித்து உருவாக்கி தமிழையும், சைவத்தையும் ஒன்றிணைத்துப் பல புராணக்கதைகளை பிரசங்கங்கள் மூலம் மக்கள் அறிய வைத்த பெருமையும் நாவலர் பெருமானையே சாரும். வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இக் கந்தபுராண இலக்கியம் முழுவதையும் யாவரும் அறியும் வண்ணம் படித்தும், செய்யுளின் பொருளை சுவை நயம்பட விரித்துக் கூறியும் யாவர் உள்ளத்திலும் பதிய வைத்தவராவார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வாறான வகையில் எமது ஊரிலும் அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் இலக்கண இலக்கிய புலமை வாய்ந்தவர்களாகவும், பல்கலைக்கழக பட்டம் பெற்றவர்களிலும் மிக உயர்ந்த கல்விமான்களாகவும் விளங்கினர்.

மேற்குறிப்பிட்ட உயர்கல்வி ஆராய்சிப் புலமையுள்ளோர் ஒன்று சேர்ந்து எமது பிரதேசத்திலும் புராணங்களைப் படித்து பொருள் கூறுவதில் வல்லவராய் இருந்தனர். அதுவும் அல்லாமல் வைத்தியம், சோதிடம் என்பவற்றிலும் மிக நுட்ப அறிவுடையவராய் திகழ்ந்தனர்.

நாமறிந்தவரை கந்தபுராண வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் மேற்குறிப்பிட்டோராவார் சமஸ்கிருத திராவிட பண்டிதர் பிரமஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களை முன்கூறின் அவர் காலத்து வாழ்ந்த பரமச்சாத்திரியார், அத்துவிதசித்தாந்தி ஸ்ரீமத் பெ.வே கணபதிப்பிள்ளைச் சோதிடர், கந்தையா அப்பா பெ.க.தியாகராசா சோதிடர், சிதம்பரப்பிள்ளை உபாத்தியார், மணியம் சுப்பர், சுப்பிரமணியம் போன்றோரைக் குறிப்பிடலாம்.

இவர்களுடைய காலத்துக் கல்விமான்கள் கந்தபுராண வித்தகர்களுமல்லாது அத்துவித சித்தாந்திகளுமாவார். அதுவுமல்லாது தங்கள் கல்வியாற்றலால் சிறந்த தர்க்கவாதிகளாகவும் திகழ்ந்தனர் என அறியக்கிடக்கிறது.

எமது கந்தபுராண சிறப்பின் நடைமுறை சிறிது கூறுவோம். இந்த யாழ்ப்பாணத்திலே ஒவ்வொரு சைவாலயத்திலும், மடாலயங்களிலும் வருடந்தோறும் விதிப்படி படித்துப் பொருள் சொல்லப்பட்டு வந்தது. வருடத்தில் மூன்று மாத காலம் கந்தப்புறாண காலமாய் இருக்கும் ஆண்களும் , பெண்களும் மூன்று மாதகாலம் காப்புக்கட்டி விரதமிருந்து கேட்பார்கள். ஒரு கிராமத்தில் பல கோயில்கள் இருக்கும். ஒவ்வொரு கோயிலிலும் பல்வேறு மாதங்களில் புராணம் ஆரம்பித்து நடக்கும். படித்துப் பொருள் சொல்லுகிறவர்கள் தத்தம் கிராமத்திலும் அயற் கிராமங்களிலும் சென்று சென்று படித்துப் பொருள் சொல்லி வருவார்கள். படித்துப்பொருள் சொல்லும் முறை யாழ்ப்பாணத்திற்கே உரிய ஒரு தனிப்பட்ட முறை.

கோயில் சந்நிதானம் வடக்கு முகமாக இருந்தால் மேற்கு முகமாக இருந்து ஒருவர் பாட்டை வாசித்து பொருளுக்கு ஏற்ப பிரிப்பர். மற்றொருவர் வடக்கு முகமாக இருந்து பொருள் சொல்லுவார். சந்நிதானம் கிழக்கு முகமாக இருந்தால் வடக்கு முகமாக இருந்து ஒருவர் பாட்டை வாசித்து பொருளுக்கு ஏற்ப பிரிப்பர். மற்றொருவர் கிழக்கு முகமாக இருந்து பொருள் சொல்லுவர்.

முதல் பதப்பொருள், பின் பொழிப்புரை அதன் மேல் விசேட உரை சொல்லப்படும். வாசிக்கிறவர் எச்சுதியில் எந்த இராகத்தில் வாசிக்கிறாரோ பொருள் சொல்லுகிறவரும் அச்சுதியில் அந்தராகத்தில் பொருள் சொல்லுவார் விசேட படிப்புக்களுக்கு பிரசித்த வித்துவான்கள் அழைக்கப் படுவார்கள். இந்த வழக்கம் ஐந்நூறு வருஷங்களுக்கு முன்தொட்டே நடந்து வருகின்றது. இதனாலே செந்தமிழ் வழங்கும் சைவ சித்தாந்த உணர்ச்சியும் வளர்ந்து வரலாறாயிற்று.

எமது ஆலய நடைமுறையில் புராணம் ஆரம்பிக்கும் போதும், நிறைவு செய்யும் போதும் ஐந்து காப்பு சொல்லப்படுகின்றது. மற்றைய இடங்களில் மூன்று காப்பு மட்டுமே சொல்லப்படுகிறது. கந்தபுராண நியமனகாரர் இருவர் படிக்கவும் பயனை விரிக்கவும் இருப்பர். அவர்களின் பின் ஏனையோர் படித்து பயன் கூறுவர். முற்காலத்தில் கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரம் கடந்து ஐந்தாம் நாள் புராணம் ஆரம்பிக்கப்பட்டு தை மாதம் நிறைவடையும் தற்போது ஆனி உத்தரத்தில் ஆரம்பித்து ஆவணி மூலத்தில் நிறைவு செய்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராண உள்ளுறை

## கடவுள் வாழ்த்து

1. உற்பத்தி காண்டம்
2. அசுர காண்டம்
3. மகேந்திர காண்டம்
4. யுத்த காண்டம்
5. தேவ காண்டம்
6. தக்ஷ காண்டம்

**மொத்தக் காண்டச் செய்யுள்**

இறை சக்தி மும்மலம், மலபரிபாகம் சத்தினி பாதம் உலகத்தில் உயர்ந்தது தவம் தவத்தால் இறைவனை நேரில் காணலாம் என்பதை மேம்பட எடுத்துக் கூறுகின்றது. தவத்தில் உயர்ந்த முனிவர்கள் பற்றிய சம்பவங்கள், சாபங்கள், சாபவிமோசனங்களும் இச்சை, கிரியை, ஞானம் ஆகியவற்றின் விளக்கம் முருகனுடைய தோற்றம் வரலாறு, பரமேசுரவடிவம் என்பன விரிவாக கூறப்பட்டுள்ளது. சிவநிந்தனையால் வரும் தீமை தக்கனது யாகத்தாலும், மகளிரை விரும்பல் காசிபன் புலம்பலாலும் இந்திரன் வருந்தியதாலும் பெரியாரைப் பழித்தல் வில்வலன் வாதாவிப் படலத்தாலும் விளக்கப்பட்டன. சைவ சித்தாந்த வாய்மைகள் காசிபன் உபதேசத்திலும், வேதத்தின் மெய்ப்பொருள் உபதேச படலத்திலும், சிவபிரானது அருட்செயற்றெளிவு ததீசி யுத்தரத்திலும், துறவற இல்லறச் சிறப்புக்கள் மார்க்கண்டேயப் படலத்திலும், பொருட்பெருமை மாயையுபதேசத்திலும் ஆசிரியர் காட்டியருளினர். உலகாயுதம், மாயாவாதம், மீமாம்சம் வைணவம் ஆகிய சமயங்களின் இழிவை இந்திரபுரி, சுக்கிரனுபதேசம் ததீசியுத்தரம், திருக்குற்றாலயம் ஆகிய படலங்களில் ஆசிரியர் பெரும்பாலும் செயலினால் விளக்கியருளினார் வள்ளியம்மை திருமணப் படலத்தில் முத்தி நெறியை நன்கு காட்டியருளினர், புராண வரலாறும் கந்தப்புராண கதைச்சுருக்கமும் பாயிரத்தில் கூறப்பட்டன.

இந்நூலின் கணுள்ள சொற்றொடர்கள் அருளாகிய உயிரினையும் மந்திரமாகிய வலியினையும் கொண்டு தெய்வ வடிவினவாய் கற்வோர்க்கு ஓர் அருந் துணையென நின்று அவரது தனிமையை நீக்கி அவருக்குப் பெருமகிழ்ச்சியையுங் கிளர்ச்சியையும் விளைக்கும். கற்போர் கதைச்சிறப்பினால் திருவருளை மறக்க நேருங்கால் உறங்குபவனை எழுப்புதல் போல் மெய்பொடிப்ப மயிர்சிலிர்பக் கண்ணீர் சொரிவிக்கும் இனிய அடைமொழிகள் சார்ந்த குமாரக்கடவுளது திருநாமங்கள் அடிக்கடி ஒலித்து நிற்கும்.

இந்நூலாசிரியர் காஞ்சிபுரத்திலே குமரகோட்டத்து அருச்சகராயிருந்த காளாத்தியப்ப சிவாச்சாரியரது தவப்புதல்வர். இந்நூலைச் செய்ய வேண்டுமென்ற கருத்துத் திருவருளால் அவருக்கு உண்டாயிற்று. ஒவ்வொரு நாளும் நூறு நூறு பாட்டுப் பாடி அக்கவிகளை சுப்பிரமணியப் பெருமானது திரு முன்னிலையிலே வைத்து அவர் வீட்டுக்குச் செல்வது வழக்கமாயிருந்தது சில நாட்களில் காலையில் ஏடெடுங்குங்கால் சில திருத்தங்கள் காணப்பட்டன இங்ஙனம் முருகக்கடவுளினது திருவருள் பதிந்த நூலாயினும் அது முறைப்படி அரங்கேற்றப்பட்டது. தமிழ் நாடெங்கும் உள்ள சிவனடியார்கள் இந்நூலை அன்புடன் ஓதியும் கேட்டும் பேரானந்தமடைந்து வந்தனர். கச்சியப்பசுவாமிகள் பின்னரும் சிலகாலமிருந்து குமரங்கடவுளின் திருவடிகளையடைந்தனர். இந்நூல் ஆயிரம் ஆண்டுகளின்முன் இயற்றப்பட்டதென்பது பின்வருஞ் செய்யுளாற் பெறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமொடு வேதாங்கம் பயின்று வல்லோன்
விரிந்தசிவா கமுமுணர்ந்து மேன்மை பூண்டோன்
போதநிறை சிவமறையோன் காஞ்சி வாழும்
புனிதமிகு கச்சியப்ப குரவ னனேன்
வாதமுறு புலவர்குழா மகிழ்ந்து போற்ற
மதிமலிமா டம்புடைசூழ் குமர கோட்டந்
தேதமறு சகாத்தமெழு நூற்றின் மேலா
யிலகு கந்த புராணமரங் கேற்றினனே.

## காசி காண்டம்

தென்னாடுடைய சிவனுக்கு விசேட ஆலயம் சிதம்பரம் அப்பரம்பொருளுக்கு வடநாட்டில் சிறந்தது காசி விசுவநாதர் ஆலயம், சைவராகப் பிறந்தார் எல்லாரும் தரிசிக்க இயலாத தரிசிக்க வேண்டிய மூர்த்தி, தலம், தீர்த்ததால் மிக மிகச் சிறந்தது காசி. காசியை தரிசிக்க பிராப்த மில்லாதவரும் ஒரளிவிற்றானும் காசிவிசுவநாதனின் பேரருளினைப் பெற சிறந்த வழியொன்றைச் செய்து வைத்துப் போயினர். பாண்டிய நாட்டின் அரசராகவும் பேருள் புலவராகவும் இருந்த அதிவீரராமபாண்டியனார். அவருடைய காசி காண்டம் என்னும் நூல் காசியின் பெருமையை தெளிவாக்குவதோடு ஒவ்வொரு குடும்பமும் அனுட்டிக்க வேண்டிய தருமநெறி முறைகளையும் காசி விசுவநாதர் விசாலட்சியை மறவாதிருப்பதால் வரும் முத்திப்பேற்றையும் இனிதாகக் கூறிச் செல்லும்.

காசி காண்டத்தின் வரலாறே மகா முனிவராகிய சூதர் அவர்களால் நைமிசாரணியம் என்ற வனத்திலிருந்து உபதேசிக்கப்பட்டது. இது பதினெண் புராணங்களில் ஒன்றாகிய காந்தபுராணத்தில் அமைந்த ஒரு காண்டமாகும்.

ஆரம்பத்தில் விந்தமலையின் உயர்வினால் சூரியனது பிரயாணம் தடைப்பட்டமையும், அதனால் கலக்கம் ஏற்பட்டமையும் தேவர்கள் அச்சமடைந்து பிரமதேவரைத் துதித்து அவர்மூலம் தர்மகாரியங்கள் யாவற்றைக் கேட்டு மனத்தெளிவு பெற்றமையும் கூறப்படுகிறது. ஆனால் விந்தமலையின் பகை இறைசக்தி உணர்வைப் போக்கவல்லவர் அகத்திய முனிவர் என்பதைக்கூறி பிரமதேவர் மறைந்தருளினார்.

புனிதமாகிய காசியில் எழுந்தருளியிருக்கும் அகத்திய முனிவரைச் சந்திப்பதற்காக தேவர்கள் அங்கு சென்று அருள் அனுபவம் பெற்ற வரலாறுகள் மிகவும் அற்புதமாகக் கூறப்படுகின்றது. ஆனால் காசித்தலத்தின் பெருமை பற்றி அகத்தியர் தமது மனைவி லோபமுத்திரைக்கு எடுத்துக்கூறிய கருத்துக்கள் எமது சிந்தைக்கு என்றும் விருந்தாக அமைந்து சுவைப்பன. இவ்வாறு காசி விசுவநாதப்பெருமானின் தரிசனமும் அம்பிகை, தண்டபாணி, துண்டிவிநாயகர், ஆசாரவிநாயகர், அபர்த்தியவிநாயகர், துர்காதேவி ஆகிய காசியில் உள்ள மூர்த்திகளின் பெருமையும் எமக்கு பக்தி உணர்வை ஊட்டுவனவாக அமைகின்றன.

இது பூர்வகாண்டம், உத்தரகாண்டம் என இரண்டு காண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இப்புராண படனம் வருடந்தோறும் கார்த்திகை மாதம் முதல் நாள் தொடாங்கி மாத இறுதிவரை நடைபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தியில் சிவபூஜை, சிவனடியார் பூஜை, அன்னதானம், நிறைமணி என்பன சிறப்பாக நடைபெறுகின்றது. இப்புராண படனமானது ஈழமணித் திருநாட்டின் வலி மேற்கில் சுழிபுரம், தொல்புரம், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்திலும், வடமராட்சி தும்பளை பெரியவளவு வரதவிநாயகர் தேவஸ்தானத்துடன் இணைந்துள்ள சிவவீரபத்திர சமேத உமை பத்திரகாளி அம்மன் (பெரியதம்பிரான்) தேவஸ்தானத்திலும் மட்டுமே இன்றைய காலகட்டத்தில் படித்து பயன் விரிக்கப்பட்டு வருகின்றது.

இன்றைய காலத்தில் பலசமயப் பெரியாரலும், சமய நிறுவனங்களாலும் கந்தபுராண உரை நூல்கள் பதவுரையாகவும் பொழிப்புரையாகவும் மலிவாகவும் கிடைக்கின்றது. எனவே யாவரும் படிப்பதற்கேற்ற வாய்ப்பு உண்டு.

எமது ஊரில் சிறந்த கல்வி தேர்ச்சி உள்ளவர்கள் போதியளவு இருந்தும் எவராவது புராணக்கதைபடிக்க பயன்விரிக்க முன்வராததை இட்டு மிக மிக கவலையடைய வேண்டிய நிலையில் யாமுள்ளோம். எனவே இனியாவது இவ் அவா உண்டாக இறை அருள் பாலிகட்டும்.

உட்பகை புறப்பகைகளையெல்லாங் களைந்து அவற்றை ஒதுக்குக் குடியிருக்கச்செய்து அத்வைத சைவசித்தாந்தத்தை நிலைநாட்டிய கந்தபுராண கலாசார ஊற்று இன்னும் இந்த நாட்டில் ஊறிப் பெருகி வளஞ்செய்யுமா? என்று வினாவினால் விடையின்றி தலை குனிகிற காலம் வந்துவிட்டது. ஆலயங்களில் புராணப் படிப்புக்கள் மெல்ல மெல்ல ஓய்ந்தன. வாழ்க்கை மாறுபட்டது. கலாசாரம் காலம் ஆகிறது.

இப்பொழுதைய ஆண்மணிகளுக்குச் செந்திநாதையர் என்றொருவர் இருந்தாரென்றால் திகைப்பார்கள். அப்படி ஒருவரை அறிய அவசியமில்லை ஆண்மணிகளின் நிலை இதுவானால் பெண்மணிகளின் நிலையைப்பேசுவது வெட்கம். வருஞ் சந்ததியாரின் நாடி நரம்புகளில் புராண இதிகாச இரத்தத்துக்கு இடமில்லை ஓர் உத்தம ஆத்மா கரு இருப்பதற்கு ஏற்ற உதரம் இனி இங்கு இல்லை ஓர் புனித ஆத்மா உடம்பெடுக்க நேர்ந்தால் எப்படிப்பட்ட தந்தை தாய்களை அது நாடும்? அப்படிப்பட்ட தந்தை தாய் ஆகக்கூடியவர்கள் நம் சமூகத்தில் உண்டா? ஔவையாரிலும் திருவள்ளுவரிலும் பாரதத்திலும் இராமாயணத்திலும் முழ்கித் திளைத்துத் திருமுறைகளும் சிவபுராணங்களும் பயிலும் ஆண்களையும் பெண்களையும் நாம் ஆக்கி வைத்திருக்க வேண்டாவா? உலகம் உய்ய ஓர் ஆத்மா கீழ் இறங்குவ தெப்படி? இதை நமது நாடும் ஆலய நிர்வாகங்களும் தலைவர்களும் சிந்திக்கும் நாள் எந்த நாளோ?

கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் திருவடி வாழ்க.

**திரு.தி.பாலசுப்பிரமணியர்**
**ஓய்வுபெற்ற ஆசிரியர்**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகசுவாமிகள் காட்டும் புறவாழ்க்கை



## அறிமுகம்

யோகசுவாமிகள் (1872 - 1964) யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒரு ஞானியாவார். அவர் இலங்கை முழுவதும் பயணம் செய்துள்ளார். இந்தியாவிற்கும் சென்றுள்ளார். எனினும் அவரின் ஞான வாழ்வின் பெரும்பகுதியை யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள கொழும்புத்துறை என்னும் இடத்திலேயே கழித்துள்ளார். இவரை யாழ்ப்பாணத்தின் சித்தர்களுள் ஒருவராகவும் போற்றுவர். நல்லூர் தேரடியில் வாழ்ந்த செல்லப்பாசுவாமிகள் இவரின் குருவாவார்.

யோகசுவாமிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இயற்றிய பாடல்கள் 'நற்சிந்தனை' என்னும் தொகுப்பு நூலாக அவரின் அனுமதியுடன் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், காங்கேசன்துறை சாலையில் அமைந்துள்ள 'சிவதொண்டன்' நிலையமும், அந்நிலையம் வெளியிடும் 'சிவதொண்டன்' சஞ்சிகையும் யோகசுவாமிகளின் வழிகாட்டுதலுடன் உருவாகின.

யோகசுவாமிகள் புத்தகங்கள் எழுதவோ அல்லது விரிவுரைகள் ஆற்றவோ இல்லை. அவரை நாடிவந்த அன்பர்களுக்கு அவரவர் பக்குவத்திற்கேற்பவும், தேவைகளுக்கேற்பவும் உபதேசங்களும், அறிவுரைகளும் வழங்கினார். இவ்வாறு அவரை அடுத்திருந்து அறிவுரை பெற்ற அன்பர்களிற் சிலர் அவற்றை சேமித்து வைத்திருந்து அவர் சமாதி அடைந்தபின்னர் அவற்றைத் தொகுத்து 'எங்கள் ஆசான் அருள்மொழிகள்' என்னும் பெயரில் நூலாக வெளியிட்டுள்ளனர். இக்கட்டுரையில் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டிருக்கும் பக்கங்கள் குறிப்பிடப்படும் போதனை இந்நூலில் காணப்படும் பக்கங்களாகும்.

யோகசுவாமிகளின் போதனைகளை இந்த நூலிலிருந்தும், அவரது வாழ்க்கை வரலாற்றைக் கூறும் 'யோகசுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்' என்னும் நூலிலிருந்தும் 'நற்சிந்தனை' இலிருந்தும், வேறு சில அன்பர்களின் வெளியீடுகளிலிருந்தும், 'சிவதொண்டன்' சஞ்சிகையிலிருந்தும் அறியலாம். இந் நூல்களில் பெரும்பாலானவற்றை 'சிவதொண்டன்' நிலையத்தில் பெறலாம்.

## அகவாழ்வும் புறவாழ்வும்

யோகசுவாமிகள் அகவாழ்வு, புறவாழ்வு எனப் பிரித்து அறிவுரைகள் கூறவில்லை. எனினும் அவ்வாறு பிரித்துப் பார்க்கலாம் என எனக்குத் தோன்றுகிறது. அகவாழ்வுக்கு என அவர் பிரதானமாகக் கூறுவது 'தன்னை அறியவேண்டும். தன்னைத் தன்னால் அறியவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு மனவொடுக்கம் வேண்டும்' (பக்கம் 22) என்பதாகும். அதன் மூலம் சிந்தனையை உள்நோக்கி செலுத்தச் சொல்கிறார். 'உண்மை உள்ளுக்கே உண்டு. உள்ளே ஆழமாகச் செல், உள்ளே சென்று உண்மையைக் காண்' (பக்கம் 94).

மனதை ஒடுக்குவது எப்படி என்ற கேள்விக்கு 'நினைவுதான் எல்லாம். ஆசையை விட்டால் நினைவு நின்றுவிடும்' (பக்கம் 64) எனவே 'மனதை எண்ணங்களில் சிதறவிடாமல் அடக்கிப் பழகிவர மனம் ஆன்மாவில் ஒடுங்கிவிடும்' பக்கம் (59) என்பது அவரின் அறிவுரை. அதேசமயம் 'படிக்கப் படிக்க மனம் விருத்தியடையும் மன ஒடுக்கம் ஆறுதலைக் கொடுக்கும்' (பக்கம் 9) என அதிக தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு எதிராக எச்சரிக்கிறார்.

அதனால் 'ஞானமும் ஒரு மயக்கம். ஒன்றுமில்லை என்று சும்மா இருத்தலே சுகம்' (பக்கம் 43). இதனையே தியானம் என்கிறார். தியானம் என்றால் சும்மா இருத்தல். ஒன்றைப் பற்றி நினைத்துக் கொண்டிருத்தல் அல்ல' (பக்கம் 44). காரணம் என்னவெனில் 'மனத்தின் அசைவே கர்மம். (எனவே) (மனம்) அசைவின்றி இருந்தால் கர்மம் இல்லை' (பக்கம் 30). அதுவே தியானம். 'எண்ணங்களற்ற மனமே எல்லா சாஸ்திரங்களின் குறிக்கோள். அதுவே முக்திக்கு வழி' என இராமகீதை என்னும் யோகவாசிஷ்டம் என்ற நூலும் தெரிவிக்கிறது.

'இறைவனை அடைவதற்கு மனம் ஒருமைப்பட வேண்டும். இது இலகுவான காரியமல்ல, ஒரு நாளிலோ அன்றேல் ஓராண்டிலோ செய்து முடிக்கக் கூடிய காரியமல்ல. இடையறா முயற்சியினாலேயே எண்ணங்களை ஒருவாறு மட்டுப்படுத்தலாம்' (பக்கம் 45). இறைவனை அடைவதென்பதன் கருத்து 'கடவுளை உணர்தல் வேண்டும். கண்ணாற் காணுவதல்ல' (பக்கம் 28). ஏனெனில் 'முழுவதுமாய் இருக்கும் ஒன்றினை பகுதி எப்படிக் காணும்?' (பக்கம் 24). உண்மையில் 'எங்களில் வேறாக அவர் இல்லை' (பக்கம் 54).

'கடவுளாகிய சாகரத்தின் மீது தோன்றும் அலைகளைப் போன்றதே படைப்பெல்லாம் (பக்கம் 54). 'எவ்வாறு அலைகள் சமுத்திரத்தினின்றும் வேறாகவோ அவ்வாறே யாவும் இறைவனின் வேறாகவில்லை' (பக்கம் 50) என்பதும் அவர் கருத்து.

அகவாழ்வு பற்றி பேசும் அளவிற்கு எனக்குப் பக்குவமில்லாததால் இக்கட்டுரை 'எங்கள் ஆசான் அருள்மொழிகள்' என்னும் புத்தகத்தில் காணப்படும் யோகசுவாமிகளின் போதனைகளில் எமது அன்றாட புறவாழ்விற்கு தேவையான சிலவற்றை இலகுவான அமைப்பில் தொகுத்துத் தருகின்றது. மேலே தெரிவித்தவாறு இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் போதனை 'எங்கள் ஆசான் அருள்மொழிகள்' நூலில் காணப்படும் பக்கம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது.

## உடம்பினை ஓம்புக

'உடம்பினை ஓம்பினால்தான் ஞானமும் அடையலாம்' (பக்கம் 26) என்பதனை முதலாவதாக எடுத்துக் கொள்ளலாம். 'தேகமின்றி உண்மையை உணர முடியாது' (பக்கம் 92). உடம்பு அழிந்தால் உயிரும் போய்விடும். ஞானத்தை அடையமுடியாது. இதனால் உடம்பைக் கவனமாகப் பேணி, உயிரை வளர்த்து ஞானத்தைப் பெறவேண்டும் என திருமூலரும் கூறுகிறார். எனவே உடலினைப் பேணுதலை முதலாவது விடயமாக நாங்கள் கொள்ளவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனத்தூய்மை

'மனத் தூய்மையே யாவற்றிலும் மேலாயது' (பக்கம் 56). 'ஒழுக்கமாக நடந்து மனதை ஆத்மாவுடன் சேர்த்துவிட வேண்டும்' (பக்கம் 7). உடம்பைக் கவனமாகப் பேணிய ஒருவர் அடுத்ததாக மனத் தூய்மையிலேயே கவனம் செலுத்த வேண்டும். திருவள்ளுவரும் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' (குறள் 34). அதாவது மனத்தில் குற்றமில்லாமல் இருப்பதே முதல் அறம் என்கிறார். மனதில் மாசிலிலாமல் இருப்பதென்பது பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் (அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல்) என்பவற்றை நீக்குவதாகும் என்று அடுத்த குறளில் கூறப்பட்டுள்ளது.

'நினைப்பது என்ன என்று கேட்டவுடன் கூறக்கூடிய எண்ணங்களையே நினை' (பக்கம் 46). என்பது யோகசுவாமிகளின் வாக்கு.

## நற்செயல்களில் ஈடுபடுக

உடம்பையும் பேணி, மனதையும் மாசிலிலாமல் வைத்துக் கொண்டு அடுத்து என்ன செய்வது என்ற கேள்விக்கு 'நற்செயல்களில் ஈடுபடுக. ஆயினும் எதிலும் தொட்டுக்கொள்ளாதே' (பக்கம் 49) என யோகசுவாமிகள் கூறுகிறார். நற்செய்கைகளில் ஈடுபட்டாலும் எதனுடனும் உணர்வுபூர்வமாக பிணையக்கூடாது பற்றற்றே அவற்றைச் செய்யவேண்டும் என்பது அவரின் அறிவுரை.

ஒரு செயலை செய்யும்போது எனக்கு என்ன கிடைக்கும் என்று எதிர்பார்க்காதீர்கள் எதையாவது பெறும் எண்ணத்துடனும் ஒரு செயலில் ஈடுபடாதீர்கள் என்பதும் இதன் கருத்தென நாங்கள் எடுத்துக் கொள்ளலாம். 'வேலையை வேலைக்காகச் செய்ய வேண்டும். இலாப நட்டத்தைக் கவனிக்க வேண்டியதில்லை' (பக்கம் 42) 'பற்றின்றிக் கடமை செய்தால் அதுவே யோகம். அதுவே சன்னியாசமுமாகும்' (பக்கம் 1).

## யாவும் தாமாகவே நடைபெற்றன

செயல்களை முடித்தபின் 'இதனை எய்தினோம், அதனைச் சாதித்தோம் என்றெண்ணி மகிழாதீர். யாவும் தாமாகவே நடைபெற்றன' (பக்கம் 53) என்பது யோகசுவாமிகளின் முக்கிய அறிவுரை. ஒன்றை சாதித்தோம் என்று மகிழவேண்டாம் என்பதோடு நிறுத்தாமல் யாவும் தாமாகவே நடைபெற்றன என்று கூறி எங்கள் தற்புகழ்ச்சிக் குணத்தின் மேல் ஒரு அடி அடிக்கிறார் யோகசுவாமிகள். நாங்கள் செய்ய விரும்பிய எத்தனையோ விடயங்களை எம்மால் செய்யமுடியவில்லை. எனவே நாங்கள் செய்த விடயங்களும் எங்களைக் கருவியாகக் கொண்டு தாமாக நடைபெற்ற விடயங்கள்தான் என்பதை எங்களுக்கு புரிய வைக்கிறார்.

## நாவைக் காத்துக் கொள்

நாம் செய்யவேண்டியவற்றில் அடுத்ததாக 'நாவைக் காத்துக் கொள்' (பக்கம் 38), 'உள்ளுக்குள் இருந்து வருவதைக் பேசு அல்லாவிட்டாற் பேசாதே' (பக்கம் 17) என்றும், அத்துடன் 'எப்போதும் அளந்த அளவில் திருப்தியாக இருக்க வேண்டும்' (பக்கம் 30), 'விருப்பு வெறுப்பை விடு, இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் சமமாகப் பார்' (பக்கம் 72) என்றும் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெறுப்பினால் வழிநடத்தப்படாதே

நாம் செய்யக் கூடாதவற்றில் அவர் தெரிவிக்கும் ஒரு விடயம் 'அயலவனுடைய மனத்தை நோகச்செய்யாமல் நடந்து கொள்ள வேண்டும்' (பக்கம் 63) என்பதாகும். காரணத்தையும் அவரே கூறுகிறார். 'அவன் உன்னைப்பற்றி நினைத்தால் அந்த நினைவு உன்னைத் தாக்கும். உன் மனதில் குழப்பம் ஏற்படும்' (பக்கம் 63).

'ஒருவன் நண்பன், மற்றவன் எதிரி என்ற எண்ணமே நம்முடைய எதிரியாகும். என்பது இராமருக்கு வசிஷ்டர் கூறியதாக யோகவாசிஷ்டம் என்னும் நூல் தெரிவிக்கிறது. யோகசுவாமிகளும் 'ஒருவன் கூடாதவன் என்று நினைக்கும் நினைவே நினைப்பனுக்கு நஞ்சாகும்' (பக்கம் 59) என எங்களுக்குக் கூறுகிறார்.

'ஒருவனிடமுள்ள பத்து நல்ல குணங்களை விட்டுவிட்டு இரண்டொரு குறைகளை மாத்திரம் எடுத்துப்பேசுதல் எவ்வளவு பேதைமை' (பக்கம் 5).

## உலகின் மீது பற்று வைக்காதே வெறுக்கவும் செய்யாதே

பற்றற்ற வாழ்வு பற்றி பல விதமாக எடுத்துக்கூறி உள்ளார். 'ஏதும் வேண்டாம் என்றும் நினைக்க வேண்டாம். ஏதும் வேண்டும் என்றும் நினைக்க வேண்டாம் (பக்கம் 35) மேலும் எதனிடத்தும் விருப்பும் வேண்டாம் வெறுப்பும் வேண்டாம். (பக்கம் 47) வெறும் 'சாட்சியாக இரு' (பக்கம் 90). அத்துடன் 'ஒன்றை அறியவும் தெண்டிக்கக்கூடாது அறியாமலிருக்கவும் தெண்டிக்கக்கூடாது' (பக்கம் 67). அது மட்டுமா? அன்பு செய்வதும் ஒரு வேலை பகைத்தலும் ஒரு வேலை. சும்மா இரு' (பக்கம் 97) எனக் கூறுகிறார்.

## உலகத்தைத் திருத்த உன்னால் முடியாது உன்னையே நீ திருத்து

'உலகத்தையோ, மற்றவர்களையோ திருத்துவதற்கு உன்னால் முடியாது உன்னையே நீ திருத்து' (பக்கம் 48) என்று கூறும் யோகசுவாமிகள் 'உலகத்தை யார் திருத்தினார்கள்? தங்களைத் திருத்திக் கொண்டு போனார்கள்' (பக்கம் 21) என்று எங்களுக்கு சுட்டிக் காட்டுகிறார். அதற்கு ஆதாரமாக 'காந்தி, புத்தர் யாவரும் வந்து சென்றனர். ஆனால் உலகம் உள்ளபடியேதான்' (பக்கம் 23) என்பதைக் காட்டுகிறார்.

## தேவையற்ற எண்ணங்களை வளரவிடாதே

'தீய எண்ணம் எழுந்த உடனேயே தடு' (பக்கம் 56). இதனைப் போன்றே 'கவலை வரமுன் நிற்பாட்டிக் கொள்ள வேண்டும். கவலையை வரவிட்டால் அதனோடு சுழலத்தான் வேண்டும். கவலை வரமுன் அதைத் தடுக்கிறது பொட்டுக்காலை நாய் தலை வைத்தவுடன் அதனை அடித்தது போலிருக்கும்' (பக்கம் 60).

## ஒன்றும் நடைபெறவில்லை என்று நினைத்துக் கொள்

எமக்கு மற்றவர்கள் செய்யும் பிழைகளை மன்னிக்க வேண்டும் என்பது சாதாரணமாக எமக்கு சொல்லப்படும் அறிவுரையாகும். யோகசுவாமிகளோ, 'சிறிதாகவேனும், பெரிதாகவேனும் ஒருவர் உனக்குப் பிழை செய்தால் ஒன்றும் நடைபெறவில்லை என்று நினைத்துக் கொள்' (பக்கம் 38) என்கிறார். மன்னிப்பதிலும் பார்க்க இது மிகவும் ஆழமான விடயமாகும். இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, 'பூகம்பம் கெடுதி செய்தால் யாம் திருப்பிக் கெடுதல் செய்கிறோமோ? (பக்கம் 27) எனக் கேட்கிறார்.

## துன்பங்களும் வாழ்க்கை ஒழுங்கினுள் அடங்கும்

துன்பங்களையும், கஷ்டங்களையும் எதிர் கொள்ளுவதெப்படி என்பது நாமனைவரும் கேட்கும் முக்கிய கேள்விகளில் ஒன்று. 'சஞ்சலம் அதிகரிக்கும் போது பொறுப்பு எல்லாவற்றையும் கடவுளிடம் ஒப்படைத்துவிட்டு ஆற்றின் நடுநீரில் மிதப்பது போல் மிதந்து செல்க' (பக்கம் 53) என்பது அவரின் அறிவுரை. ஏனெனில் 'துன்பங்களும் வாழ்க்கை ஒழுங்கினுள் அடங்கும்' (பக்கம் 56). 'அவர்கள் நன்மை பெறும் பொருட்டு சோதிக்கப்படுகிறார்கள் என்பதே அவர்கள் படும் துன்பத்தின் கருத்தாகும் (பக்கம் 95).

## ஆசை உள்ளவனிடம் கடமைப்படாதே

'ஆசை உள்ளவனிடம் கடமைப்படாதே' (பக்கம் 68), 'தகுதியற்றவர்களைப் பார்த்து இரங்காதே' (பக்கம் 46), ஆன்மீக தாகம் இல்லாருடன் உறவாடாதே (பக்கம் 48) என்பவையும் சாதாரண வாழ்வு வாழும் எம் போன்றோருக்கு முக்கியமான அறிவுரைகளாகும்.

## முடிவுரை

யோகசுவாமிகள் தன்னிடம் வந்தோரின் பக்குவத்திற்கு ஏற்ற வகையிலேயே போதனைகளை வழங்கினார். இங்கு ஒருவரின் புறவாழ்வை சீர்ப்படுத்தும் சில அறிவுரைகளைப் பார்த்தோம். இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்களை ஆழமாகப் படித்து 'ஒவ்வொருவரும் தான்தான் தனக்குத் தகுந்த பாதையைத் தேடிக் கொள்ள வேண்டும்' (பக்கம் 10). அத்துடன் 'நாங்கள் அறிந்த சிறிதளவை சாதனைக்குக் கொண்டு வந்தால் அதுவே போதும். எல்லாம் அறியும் வல்லமை வலிய வரும்' (பக்கம் 12) என்பதும் அவர் வாக்கு.

**கலாநிதி நா.சிவபாலன்**
**யாழ் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம் செய்வது ஏன்? ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகள்

(நீடித்த இளமையுடனும், சுறுசுறுப்பான வலிமையுடனும் மனித உடலை வைத்திருப்பதற்குக் காயகல்பம் உதவும். இக்காயகல்பத்தைப் பலவித நாட்டு மருந்துகளை உரிய விகிதத்தில், முறையான பக்குவத்தில் கலந்து நியதி மாறாமல் உண்ணுதல் வேண்டும். கிட்டத்தட்ட இதே முறையில் மருந்துக் கலவை செய்து, கோவில் விக்கிரங்களைப் பிரதிஷ்டை செய்யும் போது அஷ்ட பந்தனம் என்ற முறையில், விக்கிரங்களுக்குச் சக்தி ஏற்றப்படுவது உண்டு.

அயேயப்பா! ஒரு சாதாரண கற்சிலை எத்தகைய சக்திமிக்க தெய்வத்துவம் பெறுகிறது என்ற வியப்பில் அதன் தார்ப்பரியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்த போது தவத்திரு ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிஜியின் நினைவே எழுந்தது.

ஏனெனில், ஆன்மீகச் செழிப்புமிக்க இப் பாரதத்தில், தமிழ்நாட்டில் மட்டுமன்றி கர்நாடகம், பீகார், பம்பாய் போன்ற பல மாநிலங்களில் தேவதா பிரதிஷ்டையும், குடமுழுக்குகளையும் முன்னூறுக்கு மேற்பட்ட அளவில் நடத்திய பேற்றினைப் பெற்றிருப்பவர் ஸ்ரீ ஸ்ரீமத் குருஜி பரமஹம்ஸ புவனேஸ்வரி சுவாமிகள்.

ஸ்ரீவித்தியா ஆராதனையைத் தினசரி வழுவறச் செய்துவரும் அவரது “ஸ்ரீ புவனேஸ்வரி மந்திரம்” சென்னை - திருவல்லிக்கேணியில் அனுமந்தராஜன் தெருவில் உள்ளது.

விநாயகர், சுப்பிரமணியர், அம்பிகை, விஷ்ணு, தூர்க்கை, சண்டி, புவனேஸ்வரி தேவி, ஆஞ்சநேயர், ஸ்ரீராமர் போன்ற அநேக தெய்வ மூர்த்திகளுக்கு ஏற்ப, சக்தி மிக்க மந்திரங்களை உருஏற்றி, யந்த்ர சக்கரங்கள், ஏழு ஜீவநதிகளின் மணல், மற்றும் கோபூஜை, கஜபூஜை செய்து அர்ச்சித்த புஷ்பம் தங்கத்தாலான புஷ்பம் போன்றவைகளை முறைப்படிம் ஆகம வைதீக விதிப்படியும் கோவில்களில் பிரதிஷ்டை செய்து, குடமுழுக்கு நடத்தி வருகிற ஸ்ரீ புவனேஸ்வரி சுவாமிகள் கோயில்களுக்குக் கும்பாபிஷேகமும், விக்கிரங்களுக்கு அஷ்டபந்தனமும், செய்ய வேண்டிய அவசியம் பற்றி இங்கு விளங்குகிறார்.)

தேர்ந்த தீக்ஷை பெற்ற ஆச்சாரியர் மூலம் மந்த்ர சக்தி ஏற்றப்பட்ட யந்த்ர பிரதிஷ்டையுடன் உண்டான மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து, ஆகம வைதிக முறைப்படிக் கும்பாபிஷேகம் நடத்தித் தினமும் பூஜை நடத்தினால் நாடும் ஊரும் சுபிட்சத்தை அடையும், ஜீவர்களும் உய்வர்.

அப்படிச் செய்யவில்லையென்றால், என்னவாகும் என்று திருமூலர் தெரிவித்ததையே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

முன்னவனார் கோவில் பூஜைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னம் களவு மிகுந்திடும் காசினி
என்னரும் நந்தி எடுத்துரைத் தானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய பல சீர்கேடுகளுக்குக் காரணம் நியதிகளைச் சரிவரக் கடைப்பிடிக்காததுதான். மாத்திரமில்லாத கும்பாபிஷேகமும், யந்த்ரமில்லாத தேவதா பிரதிஷ்டையும் பூஜையில்லாத கோயிலும் இருக்கக் கூடாது.

கும்பாபிஷேகத்திற்கான பூஜை நியதிகளையும், அஷ்ட பந்தன பிரதிஷ்டைக்குரிய ஆகம நியதிகளையும் எல்லாரும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

கும்பாபிஷேகம் நான்கு கைப்படும். ஆவர்த்தம், அனுவர்த்தம், புனஸ்வர்த்தம், அந்தரிதம்.

ஆவர்த்தம் என்பது ஆலயமோ, மூர்த்திகளோ வெள்ளத்தில் போய்விட்டால் மறுபடியும் ஆலயம் எழுப்பி மூர்த்தியை ஸ்தாபித்தல்.

அனுவர்த்தம் என்பது ஆலயமோ, மூர்த்திகளோ வெள்ளத்தில் போய்விட்டால் மறுபடியும் ஆலயம் எழுப்பி மூர்த்தியை ஸ்தாபித்தல்.

புனஸ்வர்த்தம் என்பதோ ஆலயம் ஜீர்ணமாகி, அஷ்டபந்தன மருந்து சாத்தி, ஜீர்ணமானதை மீண்டும் புதுப்பித்தல்.

அந்தரிதம் என்பது திருடர்களால் அபகரிக்கப்பட்ட மூர்த்திகளை மீண்டும் பிரதிஷ்டை செய்வது.

கும்பாபிஷேகம் என்பது என்னவென்றால், எந்த தெய்வத்தைப் பிரதிஷ்டை செய்யப் போகிறோமோ, அல்லது எந்த தெய்வ விக்கிரகத்திற்குக் கும்பாபிஷேகம் செய்யப் போகிறோமோ, அந்தச் தெய்வத்திற்குரிய ஆவாஹன மந்திரங்களைக் கொண்டு ஜலம், நிரப்பப் பெற்ற கும்பத்திற்கு ஹோம் செய் வேண்டும். இதனால் கும்பத்தில் உள்ள நீருக்கு மந்திரசக்தி ஏற்றப்படும். பின்னர் அந்தக் கும்ப நீரை விக்கிரகத்திற்கு அபிஷேகம் செய்வதே கும்பாபிஷேகம். கோபுரக் கலகங்களுக்கும் கூட கும்பாபிஷேகம் செய்வது உண்டு.

கும்பாபிஷேகக் கும்பத்திற்கு முதலில் நன்றாக அலங்காரம் செய்தல். அந்தக் கும்பமானது மனித உருவமாக உருவகப்படுத்திக் கொள்ளலாம். கும்பத்தின் மேல் போடப்பட்ட வஸ்திரம் தோல்; கும்பத்தின் மேலே பூசப்பட்ட மண் - ரத்தம், கும்பத்துள் உள்ள ஜலம் - மேதாதாது கூர்ச்சக்குச்சி - எலும்பு; சுற்றப்பட்ட நூல் - நரம்பு; கும்பத்தின் உள்ளே போடப்பட்ட ரத்தினம் - சுக்லம்; நியாஸம் செய்யப்பட்ட மந்திரம் - ஜீவன்; உள்ளே போடப்பட்ட தானியம் - ஆசனம்.

தெய்வத்தை குரு உபதேசப்படி ஆவாஹனம் செய்து, குறிப்பிட்ட காலம்வரை கும்பத்தில் இருக்கச் செய்து - பின்னர் தான் குடமுழுக்கை நடத்த வேண்டும்.

கும்பாபிஷேகத்தைச் செய்கிற ஆச்சாரியார் குடமுழுக்கு நாளுக்கு முன்தின இரவு தூங்கக் கூடாது. அது மட்டமல்ல; தினசரி தெய்வ உபாஸனை பூஜையைத் தவறாமல் நடத்துகிறவராகவும் ஒழுக்க சீலராகவும் இருக்க வேண்டும். அத்துடன் கும்பாபிஷேகம் செய்யக்கூடிய தகுதியை அதாவது தீட்சை பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

தேவதா மூர்த்திகள் முதலில் கல்லிலே இருந்தாலும் யந்திர சக்கரங்கள் பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகம் செய்த பின்னரே பிராணன் வருகிறது; அதாவது அந்த விக்கிரங்களுக்கு அருள் சக்தி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எப்படியெனில், கும்பாபிஷேகம் செய்வதற்குப் பயன்படுத்துகிற கும்பத்தில் நீர் நிரப்பி நூல், வஸ்திரம், கூர்ச்சக்குச்சி மற்றும் பொருட்களால் முதலில் தெரிவித்தபடி அலங்காரம் செயவிக்க வேண்டும். யாகசாலையில் உள்ள யாக குண்டத்திலிருந்து தர்ப்பையைக் கயிறுபோல் திரித்து, பிரதிஷ்டை செய்ய வேண்டிய விக்கிரகத்திலும் கும்பத்திலுமாக இணைக்க வேண்டும். இப்படி இணைப்பது யாகம் செய்து அதிலிருந்து வரும் மந்திரசக்தி அதாவது தெய்வீக சக்தி கும்பத்திற்குள் பாய்ச்சுவதற்காகத்தான்.

பிரதிஷ்டைகுரிய கிரியைகள் சிலவும் உண்டு. அனுஞ்ஞை விக்கினேஸ்வர பூஜை, ம்ருத்ஸங்கிரணம், ஸ்ரீதேவி பூஜை, ரக்ஷாபந்தனம், ரக்ஷா கும்பபூஜை, அஷ்டபந்தனம்.

விக்னேஸ்வர பூஜை, கும்பாபிஷேக வைபவம் விக்னமில்லாமல் நடைபெறுவதற்காக.

அனுஞ்ஞை: கும்பாபிஷேகத்தை நடத்தும் தகுதியைச் சபையோர்களிடம் அனுமதி பெறுவது.

வாஸ்து சாந்தி: இறவாவரம் பெற்ற வாஸ்து புருஷனின் உபாதி இல்லாமலிருக்க அப்புருஷனைக் காவல் காக்கும் ஐம்பத்துமூன்று தேவர்களுக்கும் பூஜை.

ம்ருத்ஸங்கிரணம்: அங்குரார்ப்பணம் என்ற கிரியை செய்வதற்கு வேண்டிய மண்ணைப் பூமியையும் திக்பாலகர்களையும் பூஜித்து அவர்கள் அனுமதி பெற்று வெட்டி எடுப்பது.

பூதேவி பூஜை: பூமிக்குச் செய்யும் பூஜை

ரக்ஷா பந்தனம்: கும்பாபிஷேகம் நடத்தவிருக்கும் ஆச்சாரியருக்கு செய்யப்படும் ரக்ஷை. இதனால் ஆச்சாரியருக்கு, ஆசௌசம் முதலிய தோஷம் அணுகாது.

ரக்ஷா கும்ப பூஜை: ரக்ஷாபந்தனம் செய்யப் பயன்படுத்தப்படும் கும்பத்திற்குப் பூஜை ஆராதனம்.

இனி, அஷ்டபந்தனம் என்பது, தெய்வ விக்கிரகத்தைப் பீடத்தில் ஸ்திரமாக இருக்கச் செய்வதற்காக நடத்துவதே அஷ்டபந்தனம். அஷ்ட என்றால் எட்டு எட்டுவித மருந்துகளைக் கலவை செய்து சாற்றுவதால் அஷ்டபந்தனம் என்று பெயர். அதாவது கொம்பரக்கு, சுக்கான் தூள், குங்குலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, எருமைவெண்ணெய் ஆகிய மருந்துகளை இடித்தோ அல்லது காய்ச்சியோ கலந்து உபயோகிக்க வேண்டும்.

முன்னூறுக்கும் மேற்பட்ட அளவில் கும்பாபிஷேகப் பூஜையை நடத்தியிருப்பதால் ஸ்ரீ புவனேஸ்வரி சுவாமிகள் ஆகம நியதிகளை அனுபவப் பூர்வமாகத் தெரிவித்தார்.

தெய்த்துவம் மிளிர்ந்த அவரது உரையாடலில் கும்பாபிஷேகத் தார்பரியத்தை எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது. அதுமட்டுமன்று;

“கோவில்களை அமைத்துக் கும்பாபிஷேகம் நடத்தினால் மட்டும் போதாது: மன ஒருமையுடனும் நியதியும் வைத்துக் கொண்டு கோவில்களுக்குச் சென்று வழிபட வேண்டும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் தெய்வீக சக்தியைத் திரட்டி மூர்த்தி வடிவில் சேமித்து வைப்பதே ஆலயங்களில் விக்கிரங்கள் அமைப்பதன் நோக்கம். வி+கிரகம் = விக்கிரகம். 'வி' என்பது விசேஷம்; 'கிரகம்' என்பது இடம். இறைவன் விசேஷமாக இருக்கும் இடம் விக்கிரகம்.

எங்கும் இறைவன் இருக்கிறான்; ஆனால் அருள் சுரக்கக்கூடிய இடம் ஆலயம்! ஸர்வவியாபியமான இறைவனை ஆலயமாகிய பசுவின் கர்ப்பக்கிரஹமான மடியிலிருந்து விக்கிரமாகிய காம்பின் மூலமே பாலாகிய தெய்வீக சக்தியைப் பெற முடியும். அதனால்தான் ஆன்மா லயமாகிற இடமான கோவிலை ஆலயம் என்று சொல்லுகிறோம்.

(அமுதசுரபி 1988 தீபாவளி மலரில் ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகள் கும்பாபிஷேகம் குறித்து அளித்த பேட்டியிலிருந்து தொகுத்தது)

கும்பாபிஷேகம் செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து மயிலை மாமுனிவர் குருஜி சுந்தரராம ஸ்வாமிகள், கருத்தை அடுத்துப் படியுங்கள்.

## மயிலை குருஜி சுந்தரராம ஸ்வாமிகள்

"நம் ஆலய அமைப்பிலேயே மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் கலந்திருக்கிறது. நம் மனதின் அகங்காரத்தை அடக்கவும், நம் எண்ணங்கள் உயர்ந்திருக்க வேண்டும் என்று தூண்டவும், இறைவனை அடைய நாம் மனசால் உயர வேண்டும் என்று உணர்த்தவும் ஊரிலேயே உயர்ந்ததாய் அமைக்கப்பட்டிருக்கிறது ஆலயம். இது மெய்ஞ்ஞானம்.

"ஆலய அமைப்பில் ஒரு விஞ்ஞான உண்மையும் உண்டு. பிரபஞ்சத்தில் வானவெளியில் நிறைந்திருக்கும் Cosmetic energy சக்திளை நாம் வழிபடும் விக்கிரங்களோடு தொடர்பு படுத்தலே கோபுரக் கலசங்கள் (பஞ்சலோகங்களால் - குறிப்பாக செம்பால்) அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த உலோகக் கலசங்கள் மூலம் சக்தி கர்ப்பக்கிகத்துக்குள் ஊடுருவுகின்றன. அங்கிருக்கும் மூல விக்கிரகமோ இயந்திரப் பிரதிஷ்டையாலும் நவரத்தின பிரதிஷ்டையாலும் அபூர்வ சக்தி பெற்றிருக்கின்றன. இயந்திரங்களால் சக்தி உண்டா என்று சந்தேகம் வரலாம். மின்சாரம் ஒரு செப்புக்கம்பி வழியாகப் பாய்வதைப்போல, நாம் பேசும் ஒலி டெலிபோன் கம்பி வழியே செல்வது போல் மின்சாரத்தை விட சக்தி வாய்ந்த மந்திர ஒலிகளும் இயந்திரத் தகடுகளில் பதித்து அதன் வாய்ந்த மந்திர ஒலிகளும் இயந்திரத் தகடுகளில் பதிந்து அதன் வழியே பாயும் நவரத்திகங்களுக்கும் இந்த சக்தி உண்டு. பாதரசத்துக்குக் கெட்டிப்படுத்தும் சக்தி உண்டு. இவற்றைக் கொண்டு மூலவர் பிரதிஷ்டை நடைபெறுகிறது. இது முழுக்க முழுக்க விஞ்ஞானபூர்வமான செயல். சக்தியை பவர் ஹவுஸில் சேமிப்பது போல் மூலஸ்தானத்தில் வேத மந்திர சக்தியை சேமிக்கிறோம்.

"மூலஸ்தானத்தை வணங்கும் போது, நம் விரல்களிலுள்ள காந்த சக்தி மூலம் சக்தியை நாம் ஈர்த்துக் கொள்கிறோம். பவர் ஹவுஸிலிருந்து சக்தியை நாம் கம்பிகள் மூலம் நம் வீட்டுக்கு எடுத்துக் கொள்வதுபோல் அதனால் தான் தினந்தோறும் நம்மை ஆலயத்திற்குச் சென்று வழிபடச் சொல்கிறார்கள்.

"இப்படி வழிபட வழிபட, பாட்டரி சார்ஜ் இறங்குவது போல் மூல இயந்திர பிரதிஷ்டை - புது ஆலய புணருத்தாரணம்- புதுக்கலசத்தில் மந்திர தீர்த்த அபிஷேகம் எல்லாம்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகத்தை 'பெருஞ்சாந்தி' என்றும் கூறுவர். "காபலீச்சரம் அமர்ந்தான் பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாய்" என்ற திருஞானசம்பந்தரின் வாக்கிலிருந்து இதனைத் தெரிந்து கொள்ளலாம். கும்பாபிஷேகம் என்றால் கும்பத்திலுள்ள நீரினால் அபிஷேகித்தல் என்று பொருள்.

குடமுழுக்கில் முக்கியத்துவம் பெற்று விளங்குவது கும்பம், சிவ வடிவமாகும். கும்பத்தின் மீதுள்ள உடை - தோல்; மேலே பூசிய செம்மண் - இரத்தம்; கும்பத்து மண் - ஊன்; கூர்ச்சம் (தர்ப்பை) - எலும்பு; மேலே சுற்றிய நூல் - நரம்பு; கும்பத்தில் இடும் பொன் - வீரியம்; மந்திரம் - உயிர்; கீழிட்ட நெல் முதலிய தானியம் - ஆசனம் என்றெல்லாம் ஆகமங்கள் உணர்ந்துகின்றன.

கும்பத்தை முதலில் கோயிலில் உள்ள பிம்பத்தின் அருகில் வைத்து தருப்பை, மாவிலை முதலியவற்றைக் கொண்டு மந்திரங்களை ஓதி, பிம்பத்தில் விளங்கும் மூர்த்தியைக் கும்பத்தில் எழுந்தருளச் செய்தலை 'ஆவாகனம்' என்று கூறுவார்கள். பிறகு அக்கும்பத்தை மங்கள முழக்கத்துடன் யாகசாலைக்கு எழுந்தருளச் செய்வார்கள்.

யாகசாலையானது 36 தத்துவ வடிவமானதும், சிவ பெருமானது அட்ட மூர்த்த வடிவமானதுமாகும். யாகசாலையில் ஒன்பது குண்டங்களில் ஒன்பது அக்கினி வளர்க்கப் பெறும். சாதாரணமாக நாள்தோறும் ஆகவனீயம், தட்சிணாக்கினீயம், காருகபத்தியம் என்னும் மூன்று அக்கினிகள் வளர்க்கப்பெறும். இதனை,

**"மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து"**

என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.

அவை முக்கோணம், நாற்கோணம், அர்ச்சந்திர வடிவம் முதலிய ஒன்பது வடிவங்களில் காணப்படும். அவ்வாறு வடிவமைக்கப் பெறுவதற்குக் காரணங்கள் உண்டு. குண்டங்களைச் சுற்றி முறுக்கிய பசுந்தர்ப்பைகளைப் பரப்பி ஆல், அரசு முதலிய சுள்ளி விறகுகளைக் குண்டத்திலிட்டுக் கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்கினி கொண்டு, அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி அத்தெய்வங்களை மனத்தில் தியானித்து சுருக்கு, சுருவம், என்றொல்லாம் சொல்லப்படுகின்ற நெய்த்துடுப்பால் நெய் முதலியன சொரிந்து அக்கினி வளர்ப்பார்கள்.

இவ்வாறு மந்திரம், கிரியை, தியானம் ஆகிய மூன்றினாலும் வளர்க்கப்படும் அக்கினியிலிருந்து எழும் புகையும், வேதஒலி, சிவாகமஒலி, தமிழ்மறைஒலி ஆகியவற்றுடன் மெய்யன்பர்கள் நல்லெண்ணங்களும், எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனது திருவருட் சக்தியைத் தூண்டிக் குடும்பத்தில் விளங்கச் செய்யும். அப்போது அக்குடும்பம் தெய்வீக சக்திக் கலைகள் நிரம்பியதாகும்.

மின்சாரத்தைச் செலுத்த செப்புக்கம்பி முதலியன தகுதியுடையனவாதல் போல, சிவசக்தியைச் செலுத்தத் தருப்பை, மாவிலை, ஆகியவை தகுதியுடையனவாக விளங்குகின்றன. யாகசாலையில் நடைபெற வேண்டிய கிரியைகள் முற்றுப் பெற்றவுடன் மீண்டும் தெய்வீக சக்தி, கோயிலிலுள்ள பிம்பத்தினிடத்தில் அமைய வேண்டி, அச்சக்தியைச் செலுத்தும் சக்தி வாய்ந்த தருப்பைக் கயிற்றின் வழியாக அச்சக்தியைப் பிம்பத்திலும் அபிஷேகம் செய்வார்கள். இதனையே கும்பாபிஷேகம் என்றும், குடமுழுக்குப் பெருவிழா என்றும் கூறுவார்கள்.

மந்திரம் என்பது தவறாது பயனளிப்பதாகும். அது நிறைமொழி மாந்தரால் ஆணையிற் கிளந்த மறைமொழியாகும். நிறைமொழி மாந்தரின் எண்ணம், சொல், செயல், எல்லாம் பலன் அளிப்பவையே. சாதாரணமாக, விடந்தீண்டப்பட்டவர் மாந்திரிகள் உச்சரிக்கும் மந்திரத்தால் அவ்வாறே விடந்தீரப் பெறுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். அவ்வாறே விடந்தீர்க்கும் அம்மந்திரத்தினும் மேலாக பிரம மந்திரங்களும், அங்க மந்திரங்களும் பலன் தருபவனாகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. சொல்லுக்கும் செயலுக்கும் சக்தி உண்டென்பதை விஞ்ஞானிகளும் விளம்புவார்கள். ஒருவன் எண்ணும் எண்ணங்கள் உருக்கொண்டு வெளிச்சென்று, பின் எண்ணியவனையே அடைகின்றன என்பர். எனவே யாசாக்கினி, மந்திரம் நல்லோர் எண்ணம் ஆகியவை எல்லாம் வல்ல தெய்வீக சக்தியைக் கும்பத்தில் செலுத்துகின்றன. கும்பத்திலுள்ள நீர் அத்தெய்வீக சக்தியைக் கிரகிக்கின்றது என்பது உண்மை.

கும்பாபிஷேக விழா நிகழ்ந்த பின்னர் மகாபிஷேகம் நடைபெறும். இறைவனைப் பிம்பத்திலிருந்து கும்பத்திலும், கும்பத்திலிருந்து பிம்பத்திலும் எழச் செய்த முறையால் விளைந்த களைப்புத் தீருவதாகப் பாவித்து, மிகுதியான அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகித்து உபசரித்தலுக்கு மகாபிஷேகம் என்று பெயர். இதனை மகா அவிர் நிவேதனம் என்றும் கூறுவதுண்டு.

கும்பாபிஷேகப் பெருவிழாவின் பொருட்டு அமைக்கப்படுகின்ற யாகசாலையில் சில கிரியைகள் நடைபெறும். அவை: அனுஞ்ஞை, விக்னேசுவர பூசை, இரட்சோக்கனம், கிருகமம், வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், கலாகர்ஷணம் ஆகியவையாகும்.

